
# தமிழரசு

ஆகஸ்ட் 2004







# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
ஆடி – ஆவணி
மலர் : 36 இதழ் : 2
ஆகஸ்ட் 2004
விலை ரூ.10


**அட்டைப்பட விளக்கம்**

முதல், இரண்டாம் மற்றும் நான்காம் பக்க அட்டைகளில் :

**சுதந்திர தின விழா**

இரண்டாம் பக்க அட்டை :

**மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு**

## இந்த இதழில்...


- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி ..... 2
- தமிழ்நாடு அரசின் சார்பில் 58–ஆவது சுதந்திர தினவிழா ..... 4
- வறட்சியைச் சமாளிக்க நிதி வழங்கப்படும் மாநிலங்கள் பட்டியலில் தமிழகத்தையும் சேர்க்க வேண்டும் – மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதம் ..... 6
- மாற்றுப் பயிர் திட்டத்தின் மூலம் தமிழகத்தின் கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையும் ..... 8
- 7 இலட்சம் விவசாயிகள் பயன்பெற குறைந்த வட்டியில் ரூ.1,037 கோடி கடனுதவி ..... 9
- சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் புதிய அறிவிப்புகள் ..... 13
- அனைத்து மருத்துவமனை, அரசு அலுவலகங்களிலும் அழைப்போரை அடையாளம் காணும் கருவி ..... 15
- ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு ..... 16
- தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சீரிய பணிகள் ..... 17
- மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் புதிய அறிவிப்புகள் ..... 22
- தருமபுரி மாவட்டத்தில் காட்டாமணக்கு நடவுப்பணி ..... 24
- மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் தமிழகம் முதலிடம் (மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை) ..... 25
- மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு விருதுகள் ..... 49
- ஈரோடு மாவட்ட கிராமப் பொருளாதார முன்னேற்றத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பங்கு ..... 54
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் புதிய அறிவிப்புகள் ..... 56
- படகோட்டி தாரிணி (வங்காள மொழிக்கதை) ..... 57
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் உயிரி எரிபொருள் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் ..... 66
- திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்று வரும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் ..... 67
- ஒலிம்பிக் வரலாறு ..... 70
- கும்பகோணம் தீ விபத்தில் காயமுற்று சிகிச்சை பெற்ற குழந்தைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி ..... 72
- பெரம்பலூர் மாவட்ட சுகாதாரப் பணிகள் ஆய்வுக் கூட்டம் ..... 74
- குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறியக் கணக்கெடுப்புப் பணி ..... 76
- திருவாரூர் மாவட்டத்தில் மக்களே மேற்கொண்ட மகத்தான பணி ..... 78
- இந்திய சுற்றுலாவில் இடம் பெறும் செட்டிநாடு பாரம்பரிய நகரம் ..... 79



*ஆசிரியரும் வெளியிடுபவரும் :* **வ. கனகராஜ், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு**
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தொடங்கிவைத்த

# நமது கிராமம்

## எனும் புதிய திட்டம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி
(15.8.2004)

**பொ**ன்னொளிர் பாரத நாட்டின் புகழ்மிகு வரலாற்றில் தன்னிகர் இல்லாத திருநாளாம் இந்தச் சுதந்திரத் திருநாளில், எனதருமைத் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த சுதந்திரத் திருநாள் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னியர் ஆட்சிக் காலத்தில் அன்னை நாடு பட்ட துன்பங்களைத் துடைக்கவும், அவலங்களை அகற்றவும், ஆயிரம் ஆயிரம் வீரர்களும், வீராங்கனைகளும் அன்று ஆர்த்தெழுந்து போராடினார்கள். அவர்கள் உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்துப் பெற்றுத் தந்த சுதந்திரம் தான் இந்தச் சுதந்திரம்! சுதந்திரத்தின் கனிகளைச் சுவைக்கின்ற நாம், வேர்களை நினைவு கொள்ள வேண்டிய நாள் இந்த வீர சுதந்திரத் திருநாள்.

இந்தியத் தாய்க்கு நூறு கோடி முகங்கள் இருந்தாலும், இதயம் ஒன்று தான்! இந்த உண்மையை மறந்தால் எதிர்காலம் கேள்விக்குறியாகும். இன்று தேசத்தை அச்சுறுத்திக் கொண்டு இருப்பவை தீவிரவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம். இவற்றை எதிர்த்துப் போராட வேண்டிய மாபெரும் கடமை நம்மை எதிர்நோக்கி இருக்கிறது. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டிய பெருங்கடமை ஒவ்வொரு இந்தியர்க்கும் உண்டு என்பதை இன்று நினைவு கொள்வோம்.

'மக்களின் நம்பிக்கையே நமக்கு வலிமை தருகின்ற மகாசக்தி' என்பதை உணர்ந்த எனது அரசு மக்களுக்கு என்னென்ன செய்யலாம் என்பதையே தீர்க்கமாகச் சிந்தித்து, சிறப்பாகத் திட்டம் தீட்டி, தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.


விவசாயிகளுக்கும், குடிசைவாசிகளுக்கும் முற்றிலும் இலவச மின்சாரம் வழங்கும் அரசு – இந்தியாவிலேயே வீட்டு உபயோகிப்பாளருக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்க மானியம் வழங்கும் ஒரே அரசு – பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலைக்கு அரிசி வழங்கும் அரசு – ஏழை எளியோருக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் அரசு – வட்டித் தள்ளுபடி செய்து எளிய முறையில் விவசாயிகள் பயிர்க் கடன் பெற வழிவகை செய்த அரசு – பள்ளிக் குழந்தைகளுக்குச்



சரிவிகித சத்துணவு வழங்கும் அரசு – ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவியர்களுக்கு இந்தியாவிலேயே வேறெங்கும் இல்லாதபடி இலவச சைக்கிள் வழங்கும் அரசு – கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்த வேலைவாய்ப்பு, அதிக சலுகைகளுடன் புதிய காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றை வழங்கும் அரசு – மீன்வளம் பெருக்கும் திட்டங்கள், காப்பீட்டுத் திட்டம் மற்றும் வீட்டுவசதித் திட்டம் மூலம் மீனவர் நலன் பேணும் அரசு – பல்வேறு புதிய முயற்சிகள் மூலம் மகளிர் நலன் காக்கும் அரசு என்று சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரது நலன் காக்கும் அரசாக எனது தலைமையில் அமைந்த அரசு திகழ்ந்து வருகிறது.

இந்த இனிய நாளில், **"நமது கிராமம்"** என்னும் புதிய திட்டத்தைத் தொடங்கி வைப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் தவறாது சேர்த்தல், அவர்கள் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடாமல் தொடர்ந்து கற்க வகை செய்தல், சிசு மரண விகிதத்தைக் குறைத்தல், பெண் குழந்தைகளைக் கருவிலேயே மாய்க்கும் செயலை அறவே நீக்குதல், வறுமையை ஒழித்தல், கிராமத் துப்புரவு, பொது சுகாதாரம் மற்றும் தூய்மை முதலான கிராமங்களின் அனைத்துச் சமூக மேம்பாட்டு அம்சங்களையும், சம்பந்தப்பட்ட கிராம மக்களின் முழுமையான ஈடுபாட்டோடு, சிறப்புடன் செயல்படுத்தும் ஊராட்சிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், இணைப்புச் சாலைகள், உட்புற சிமெண்ட் சாலைகள், தெரு விளக்குகள், மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் அரசால் செய்து தரப்படும். தமிழகத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பல்வேறு முற்போக்குத் திட்டங்கள் மூலம் – முன்னோடித் திட்டங்கள் மூலம் – இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கி வரும் எனது அரசின் முயற்சிகள் அனைத்துக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்திட வேண்டும் என்று என் அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.




*வலிமையான பாரதம் அமைய*
*வளமான தமிழகத்தை உருவாக்குவோம்!*

அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது சுதந்திரத் திருநாள் வாழ்த்துகள்!

★ ★ ★

# தமிழ்நாடு அரசின் சார்பில் 58ஆவது சுதந்திர தினவிழா



இந்தியத் திருநாட்டின் 58ஆவது சுதந்திர தினவிழா 15-8-2004 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை தலைமைச் செயலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சுதந்திர தின விழாவையொட்டி மிகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதிகாலை முதலே பொதுமக்கள் திரளாக கோட்டையை நோக்கி வந்தவண்ணம் இருந்தனர்.

காலை எட்டுமணியளவில் விழாவிற்கு வருகைதந்த முப்படைத் தளபதிகளை, தமிழக அரசின் தலைமைச் செயலர் திருமதி.லக்ஷ்மிப்ராணேஷ், இ.ஆ.ப., அவர்களும் மற்றும் உயர் அதிகாரிகளும் வரவேற்றனர்.

காவலர்கள் மோட்டார் சைக்கிளில் அணிவகுத்துவர, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காலை 8.16 மணிக்கு கோட்டை கொத்தளத்திற்கு வருகைபுரிந்தார்கள். அப்போது காவல்துறையினரால் வாத்திய இசை முழங்க வரவேற்பு கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தமிழக அரசின் தலைமைச் செயலர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு முப்படைத் தளபதிகளையும், காவல்துறைத் தலைவர், காவல்துறை கூடுதல் தலைவர் (சட்டம்-ஒழுங்கு), சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் ஆகியோரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

அடுத்து, காவல்துறையினரின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த படையினர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு அளித்தனர்.

பின்னர், சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்த



வாகனத்திலிருந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்கள். அதன் பின்னர் 8.25 மணிக்கு காவல்துறையினரின் வாத்திய இசைக்குழு தேசிய கீதம் இசைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்கள்.

தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி முடிந்தவுடன், பல்வேறு விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, கடந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டுவரும் துணிவு மற்றும் வீரதீரச் செயல்களுக்கான விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா நினைவு விருதும், ரூ. 5 இலட்சம் காசோலையும் கன்னியாகுமரி மாவட்டம் தெங்கன்குடியைச் சேர்ந்த திருமதி. அமலமேரி என்பவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

500க்கும் மேற்பட்ட ரயில் பயணிகளின் உயிரைக் காப்பாற்றியதற்காக திருமதி. அமலமேரிக்கு, இந்த விருது அளிக்கப்பட்டது. 9–7–2004 அன்று நாகர்கோவில்–திருவனந்தபுரம் இரயில் தடத்தில் மார்த்தாண்டம் அருகே தெங்கன்குடி என்னும் இடத்தில் 50 அடி உயரத்திலிருந்து திடீரென மண் சரிவு ஏற்பட்டு தண்டவாளத்தில் விழுந்தது. மண் சரிவு ஏற்பட்ட சில நிமிடங்களில் திருவனந்த புரத்திலிருந்து நாகர்கோவில் செல்லும் இரயில் வேகமாக வந்து கொண்டிருந்தது. இதனைக் கண்டு மனம் பதைத்து, தன் உயிரைத் துச்சமெனக் கருதி **திருமதி. அமலமேரி 300 மீட்டர் எதிர்கொண்டு ஓடி, தான் அணிந்திருந்த சிவப்புச் சேலையை, சிவப்புக் கொடிபோல் உயர்த்திக் காட்டி நிகழவிருந்த பெரும் விபத்தைத் தடுத்து நிறுத்தினார். இந்த வீரதீரச் செயலுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கல்பனா சாவ்லா விருதை அமலமேரிக்கு வழங்கி பெருமைப்படுத் தினார்கள்.**

தொடர்ந்து, தூய்மையான கிராமப் பராமரிப்புத் திட்டத்திற்கான பசுமை விருதை காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம், கடுவாஞ்சேரி ஊராட்சி மன்றத்தலைவர் கலா, திருச்சி மாவட்டம், தாத்தையங்கார் பேட்டை ஒன்றியம், ஆராய்ச்சி ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.விஜயா மதிவாணன் மற்றும் கடலூர் மாவட்டம் கீரப்பாளையம் ஒன்றியம், கீரப்பாளையம் ஊராட்சி மன்றத்தலைவர் திரு.கே.பி. பன்னீர்செல்வம் ஆகியோருக்கு வழங்கினார்கள். இந்த விருதும் பாராட்டுப் பத்திரமும், ரூ.5 இலட்சம் ரொக்கத்தொகையுடன் கூடியதாகும். பின்னர், ஊனமுற்றோர்க்கு மிகச் சிறந்த சேவை புரிந்தோருக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன. சிறந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் விருதை திண்டுக்கல் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் திரு.கு. செல்லமுத்து அவர்களுக்கும், சிறப்பு மருத்துவருக்கான விருதை டாக்டர் மயில்வாகனன் நடராஜன் அவர்களுக்கும், சிறந்த தனியார் தொழில் நிறுவனத்திற்கான விருதை இந்துஸ்தான் கோகோ–கோலா பீவரேஜஸ் பி. லிட்., நிறுவனத்திற்கும், ஊனமுற்றோர் நலனை நடைமுறைப்படுத்தியதற்கான விருதை சேரன் ரீஜியன் கிரிஸ்டியன் நிறுவனர் திரு.சாம்சனுக்கும், மகளிர் நலத்துக்காக ஆசாநிவாஸ் சமூக சேவை நிறுவனத்தலைவர் அருள்தந்தை டாக்டர் குரியன்தாமசுக்கும், சிறந்த சமூகப் பணியாளருக்கான விருதை (ஊனமுற்றோர் நலம்)



திரு.எஸ். சங்கரராமனுக்கும், சிறந்த சமூகப் பணியாளர் விருதை (மகளிர் நலம்) திரு.எஸ். வித்யாகருக்கும் வழங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள்.

பின்னர் ஊனமுற்ற குழந்தைகளுக்கு சுதந்திர தினவிழாவையொட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இனிப்புகளை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

விழாவைக் காண சாலையின் இருமருங்கிலும் குழுமியிருந்த பொதுமக்கள் முதலமைச்சர் அவர்களுக்கு கையசைத்து சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர். □

# வறட்சியைச் சமாளிக்க நிதி வழங்கப்படும் மாநிலங்கள் பட்டியலில் தமிழகத்தையும் சேர்க்க வேண்டும்

**மாண்புமிகு பாரதப் பிரதமர்** அவர்களுக்கு
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள்
எழுதிய கடிதம் (29.7.2004)



9 மாநிலங்களில் வறட்சி நிலைமையை ஆய்வு செய்வதற்காக 27.7.2004 அன்று இந்திய அரசின் அமைச்சரவைச் செயலாளர் ஒரு கூட்டத்தை நடத்தியதாக ஊடகச் செய்திகள் வாயிலாக நான் அறிந்தேன். இந்த 9 மாநிலங்களில் தமிழகம் இடம் பெறவில்லை. மழை நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களின் முதலமைச்சர்களின் கூட்டத்தைப் பாரதப் பிரதமர் அடுத்த வாரம் கூட்ட இருப்பதாகவும் நான் அறிகிறேன்.

வறட்சிக்கு நிகரான நிலை உருவாகி வருவதை சமாளிப்பதற்காக ஆதரவு வழங்கப்படும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாட்டையும் சேர்க்க வேண்டிய தேவையை வலியுறுத்தி நேற்று (29.7.2004) பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். என்னுடைய கடிதத்தில் நான் தெரிவித்திருப்பதாவது:

'தமிழகத்தைத் தவிர்த்து, 9 மாநிலங்களின் தலைமைச் செயலர்களுடன் வறட்சிக்கு நிகரான நிலை உருவாகி வருவதைப் பற்றியும், அதற்கு ஆயத்தமாவது பற்றியும் 27.7.2004 அன்று இந்திய அரசின் அமைச்சரவைச் செயலர் தனித்தனியாக ஆலோசனை நடத்தியதாக வந்த செய்தியை நான் கவலையோடு படித்தேன்.

தமிழ்நாட்டில் 2001–2002 முதல் பருவ நிலைகள் தொடர்ந்து பொய்த்தன. 2002–2003 மற்றும் 2003–2004 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் சென்னை மாவட்டம் நகர்ப்புறப் பகுதி என்பதால், அது நீங்கலாக ஏனைய அனைத்து மாவட்டங்களும் வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. மேலும், காவேரி நதிநீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவுப்படியோ அல்லது மத்திய நீர் ஆணையத்தால் வகுக்கப்பட்ட இடர்ப்பாடுக்கால விதிமுறைகளின்படியோ, 2003–2004ஆம் ஆண்டிலும் கர்நாடகம் காவேரியில் தண்ணீரைத் திறந்து விடவில்லை. இதன் விளைவாக, காவேரி நதிநீர்ப் பாசனம் பெறும் மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. தமிழகத்தின் முக்கியமான சம்பாப் பயிர் பெரிதும் பாதிக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் காலத்தில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் டிசம்பர் மாதத்திலேயே முழுவதும் காய்ந்து போய்விட்டன. மாதம் ரூ.30 கோடி செலவில், சென்னைக்கு இன்றியமையாது வழங்கப்பட வேண்டிய தண்ணீரை லாரிகளின் மூலமே இன்றும் வழங்கிக் கொண்டு வருகிறோம். இது கடுமையான சிக்கலை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த அசாதாரண சூழ்நிலையைச் சமாளிக்க நாங்கள் கடுமையாகப் போராடி வருகிறோம்.

சென்னை மாநகரம் நீங்கலாக தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் நிலவிய வறட்சி நிலைமைகளைப் பற்றி 1.2.2004 அன்று தமிழக அரசு ஒரு விரிவான அறிக்கையை மைய அரசுக்கு அளித்தது. சென்னை மாநகரில் ஏற்பட்ட அசாதாரண குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காகத் தனியே ஒரு அறிக்கை 16.1.2004 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 1,584 கோடி ரூபாய் நிதி உதவியையும் 10.8 இலட்சம் டன் அரிசியையும் நாங்கள் கோரி இருந்தோம். அசாதாரணப் பற்றாக்குறை ஏற்பட்ட சென்னை மாநகரக் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காகத் தனியே 700 கோடி ரூபாய் மதிப்பிலான உதவித் தொகுப்பைக் கோரி இருந்தோம். மத்தியக் குழு ஒன்று அனுப்பப்பட்டு, அதன் மதிப்பீட்டின் அடிப்படையில் தேசிய பேரிடர் எதிர்பாரா நிதி – பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 292.95 கோடி ரூபாயும், உணவுக்கு வேலைத் திட்டத்தின் கீழ் 3.04 இலட்சம் டன் அரிசியும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது.

இந்த நிதி உதவியை நாங்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டோம். இன்னும் சொல்லப் போனால், பெறப்பட்ட உதவிக்கும் மேலாக மிக அதிகமாகவே செலவழித்து உள்ளோம். மாநில அரசின் நிதி நிலைக்கு இது கடும் சுமையை ஏற்படுத்தி வருகிறது. இந்த வருடமும் தென்மேற்குப் பருவமழை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. தொடர்ந்து பருவமழை பொய்த்து வரும் நிலையில், இந்தப் பருவ மழையும் பொய்ப்பது மிகுந்த கவலையை அளிக்கிறது.

2004ஆம் ஆண்டு ஜுன் முதல் தேதியிலிருந்து ஜுலை இறுதி வரை கணக்கிட்டால் 30 மாவட்டங்களில் 15 மாவட்டங்களில் பெறப்பட்டது பற்றாக்குறை மழையே (Deficit) ஆகும். அதிலும், இந்த 15 மாவட்டங்களில், 11 மாவட்டங்கள் வழக்கமான மழை அளவை விட 20 சதவிகிதத்திற்கும் மேல் குறைவான மழையைப் பெற்றுள்ளன. ஆந்திரா, மகாராஷ்டிரம் மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்களிலும் இது போன்ற நிலைமை உள்ளது. அங்கும் சில மாவட்டங்கள் மிகக் குறைவான மழையைப் பெற்றுள்ளன.

மேற்கண்ட மாநிலங்கள் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருக்கும் போது என்ன காரணமோ தெரியவில்லை, தமிழகத்தை அழைக்காமல் விட்டுவிட்டார்கள். தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரையோரம் உள்ள இந்த பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்திலும் போதுமான மழையைப் பெறவில்லை.

மேலும், கர்நாடகம், தமிழகத்திற்கு உரிய தண்ணீரை விடுவிக்காத காரணத்தால் காவேரி நீரால் பாசனம் பெறும் 9 மாவட்டங்கள் மீண்டும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. 29.7.2004 அன்றைய நிலவரப்படி கர்நாடகத்திலிருந்து பெறப்பட வேண்டிய காவேரித் தண்ணீரின் அளவு 16.619 டி.எம்.சி. அடி அளவுக்கு குறைவாகும். இதன் விளைவாக, குறுவைப் பயிர் சாகுபடி செய்ய தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட இயலாத நிலையில் உள்ளோம்.

காவேரி நீரில் தமிழ்நாட்டுக்கு உரிய சட்டபூர்வமான பங்கைப் பெறுவதற்கு ஏதுவாக காவேரி நதிநீர் ஆணையத்தின் கூட்டத்தைக் கூட்டுமாறு 4.6.2004 நாளிட்ட எனது கடிதத்தின் வாயிலாக நான் ஏற்கெனவே உங்களைக் கேட்டுக் கொண்டுள்ளேன். காவேரி நீரில் எங்களுக்கு உரிமையுள்ள பங்கை கர்நாடகம் தர மறுப்பதாலும், தொடர்ந்து பருவமழை பொய்த்து வருவதாலும் ஏற்பட்டுள்ள கடும் பற்றாக்குறை, தேவைகள் ஆகியவற்றைத் தங்களது தனிப்பட்ட கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்த நிலையில் தங்களது உடனடி தலையீடு அவசியம் தேவைப்படுகிறது.

தனி நபருக்கு மிகவும் குறைந்த அளவு தண்ணீர் கிடைக்கும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது. பருவமழை தவறியதும், வறட்சி நிலையும் தண்ணீர்ப் பற்றாக்குறைச் சுமையை மேலும் கடுமையாக்கி வருகிறது. தமிழ்நாடு தண்ணீர்ப் பற்றாக்குறை மாநிலமாக உள்ளது என்பதும், வறட்சி நிலையால் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஆதரவு தேவைப்படுகின்ற மாநிலமாக உள்ளது என்பதும் எல்லோரும் அறிந்ததே.

ஆகவே, வறட்சி நிலையைச் சமாளித்திட ஆதரவு தேவைப்படும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாட்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், கூட்டப்பட உள்ள வறட்சி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் கூட்டத்திற்குத் தமிழகம் அழைக்கப்பட வேண்டும் எனவும் நான் வேண்டிக் கொள்கிறேன்.'

மத்திய அரசில் 12 அமைச்சர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்காக மத்திய அரசின் ஆதரவைப் பெற உள்ள மாநிலங்களின் பட்டியலில் தமிழகத்தைச் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்வது குறித்து அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை என்பது அதிர்ச்சி அளிப்பதும், அவமானகரமானதும் ஆகும். அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள ஏழைஎளிய மக்களின் நலன் பற்றியும், விவசாயிகளின் நலன் பற்றியும் நாவறளப் பேசி, இன்று அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் இவர்கள், மத்திய அரசின் உதவியைத் தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தரும் விஷயத்தில் தங்கள் கடமையில் இருந்து தவறிவிட்டார்கள். தேர்தல் நேரத்தில் ஒரு பேச்சு பேசி, தேர்தல் முடிந்து மத்தியில் அதிகாரத்தைப் பெற்று ஆட்சியில் அமர்ந்தவுடன் தங்களுடைய வாக்குறுதிகளை எல்லாம் மறந்து போகின்ற இரட்டை வேடதாரிகளான இந்த மந்திரிகளும், அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளும் தமிழக மக்களின் பழிப்புக்கு உள்ளாகியே தீருவார்கள். □



# தமிழகத்தின் கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**ஆ**டிப்பெருக்கு விழாவை முன்னிட்டு மேட்டூரில் இருந்து 7 நாட்களுக்கு, ஒரு நாளுக்கு 1டி.எம்.சி. அடி வீதம் தண்ணீர் திறந்துவிட உத்தரவிடப்பட்டுள்ளது. ஆக 7 நாட்களுக்கு மொத்தம் 7 டி.எம்.சி. அடி தண்ணீர் திறந்துவிடப்படும். மேலும் மேட்டூருக்கு நீர்வரத்தைப் பொறுத்து விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடுவதைப் பற்றி பின்னர் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையில் விவசாயிகள் எந்தச் சாகுபடியும் இல்லாமல், எந்த இலாபமும் அடையாமல் இருந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் ஒரு விசேஷ திட்டத்தை இந்த அரசு அறிவித்திருக்கிறது. காட்டாமணக்கு – Jatropa, சர்க்கரைக் கிழங்கு – Sugar Beet, Sweet Sorgham – சர்க்கரைச் சோளம் ஆகிய பயிர்களைப் பயிரிட்டால் குறைந்த அளவு தண்ணீர் இருந்தாலே போதும். நெல் சாகுபடியைவிட பன்மடங்கு அதிக இலாபம் பெறலாம் என்பதை விவசாயிகளுக்கு ஏற்கெனவே விளக்கிக் கூறியிருக்கிறோம். இதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தையும் அறிவித்திருக்கிறோம். அதுதான் Contract Farming என்பதாகும். பெரிய தொழிலதிபர்களை நாங்கள் Expression of Interest கொடுக்கும்படி அழைத்திருக்கிறோம். பலர் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான காலக்கெடு கடந்த 23 ஆம் தேதியன்று முடிவடைந்தது. இப்போது வந்திருக்கின்ற அந்த விண்ணப்பங்களை ஆராய்ந்து இன்னும் சில நாட்களில் முடிவு எடுக்கப்படும். இதன்படி பெரிய தொழிலதிபர்கள் தங்கள் பொறுப்பில் 25,000 ஏக்கர், 30,000 ஏக்கர் என்று பெரிய நிலப்பரப்புகளை எடுத்துக்கொண்டு அந்த நிலப்பரப்பில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்று சிறிய அளவில் நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு, அவர்கள் தேவையான உதவிகளைச் செய்து, அந்த விவசாயிகளோடு இந்தத் தொழிலதிபர்கள் ஒப்பந்தங்கள் 'செய்துகொண்டு அவர்களுடைய நிலங்களில் அவர்களை காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு ஆகியவற்றைப் பயிரிடச் செய்து அதற்குத் தேவையான விதைகள், உரங்கள் மற்றும் தேவையான உதவிகள் அனைத்தையும் இந்தத் தொழிலதிபர்களே சிறு விவசாயிகளுக்குக் கொடுத்து அவர்கள் அந்தப் பயிர்களைச் சாகுபடி செய்த பின், இந்தப் பெரிய தொழிலதிபர்களே விலை கொடுத்து, நல்ல விலைக்கு அந்தச் சிறிய விவசாயிகளிடமிருந்து அவற்றை வாங்கிக்கொள்வார்கள். இந்தப் பயிர்களின்மூலம் இந்த விவசாயிகளும் இலாபம் அடைவார்கள். அவர்களுக்கு ஒரு உத்தரவாதம் இருக்கின்றது. இத்தனை நாளும் காட்டாமணக்குப் பயிரிடுங்கள், சர்க்கரைச் சோளம் பயிரிடுங்கள் என்று அரசு அறிவுரை வழங்கினாலும், விவசாயிகள் கேட்ட கேள்வி, இந்தப் பயிர்களை எல்லாம் சாகுபடி செய்தால் எப்படி விற்பனையாகும்? யார் வாங்குவார்கள் என்ற கேள்வியைக் கேட்டார்கள். இப்போது அதற்கும் ஒரு வழி செய்தாகிவிட்டது. பெரிய தொழிலதிபர்களே விவசாயி களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, அவர்கள் சாகுபடி செய்கின்ற பயிர்களை அவர்களிடமிருந்து விலை கொடுத்து வாங்கிக் கொள்வார்கள். இந்தத் தொழிலதிபர்கள் தொழிற்சாலைகளைத் தொடங்கி இருக்கின்ற தொழிற்சாலைகளை விரிவுபடுத்தி Ethanol, Bio-Diesel, Bio- Fuel தயாரிப்பார்கள். இது வெற்றிகரமாக செயல்படமுடியும், செயல்படுத்தமுடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே, விரைவிலேயே தமிழகத்தின் Rural Economy – கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையும்; ஒரு பெரிய உன்னத நிலையை அடையும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

# 7 இலட்சம் விவசாயிகள் பயன்பெற குறைந்த வட்டியில் ரூ.1037 கோடி கடனுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
(3.8.2004)



**வே**ளாண் பிரிவின் விரைவான வளர்ச்சிக்கும், ஊரகப் பகுதிகளின் துரிதமான முன்னேற்றத்திற்கும் நான் எப்பொழுதும் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறேன். மக்களுடைய, குறிப்பாக ஊரகப் பகுதிகளில் வாழ்வோர், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் ஆகியோரது மகத்தான ஆதரவுடன் 2001ஆம் ஆண்டு மே திங்களில் எனது தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றது. துரதிருஷ்டவசமாக, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தின் போது, 90ஆம் ஆண்டுகளின் இறுதிவாக்கில் வேளாண் பிரிவு வீழ்ச்சி அடைந்தது. முந்தைய தி.மு.க. அரசால் கூட்டுறவுக் கடன் முறை முற்றிலுமாகப் பாழ்படுத்தப்பட்டது. முதலமைச்சராக நான் பொறுப்பேற்றவுடன், 310.50 கோடி ரூபாய் வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கி நான் ஆணையிட்டேன். கூட்டுறவுக் கடன் முறையைப் பாதுகாப்பதற்காகத் தேவையான தொகையைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு ஈடு செய்தது.

அதன் பிறகு, என்னுடைய அரசு, 2002–2003ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியையும் தொடர்ந்து, மீண்டும் 2003–2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. இந்த இரண்டு ஆண்டுகளில் என்னுடைய அரசு வேளாண் துறைக்கு மாபெரும் ஆதரவை அளித்தது; பரவலாகவும், தீவிரமாகவும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. என்னுடைய அரசு, 1.4.2002லிருந்து 31.3.2004 வரை, இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்காக – விவசாயிகளின் பயிர் இழப்பை ஈடு செய்யவும் அவர்கள் வேளாண் பணிகளை மீண்டும் தொடங்கவும் வழங்கப்பட்ட 325.56 கோடி ரூபாய் உட்பட – மொத்தம் 850.44 கோடி ரூபாய் வழங்கியது. 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்கள், 2002 அக்டோபர் மாதம் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் வகையில், அவர்களுக்கு 21 கோடி ரூபாய் மதிப்பிலான பரிசுப் பைகளை வழங்கியது. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் என்னுடைய அரசு 2003ஆம் ஆண்டு ஜனவரியில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. அவர்களுடைய வேண்டுகோளின் அடிப்படையில் பிப்ரவரித் திங்கள் முதல் நாளிலிருந்து ஒவ்வொரு மாதமும் ஒரு குடும்பத்திற்கு 30 கிலோ இலவச அரிசி வழங்குகின்ற திட்டமாக இந்த உதவி மாற்றப்பட்டது. இந்தத் திட்டம், 10 இலட்சம் குடும்பங்களுக்கு வறட்சி நிவாரண உதவியாக, 2003ஆம் ஆண்டு ஆகஸ்டு இறுதிவரை மொத்தம் 109.54 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. இவ்வாறு, வறட்சிக் காலத்தில் என்னுடைய அரசு, விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ஓடோடிச் சென்று தனது முழு



ஆதரவை அளித்து, அவர்களை முழுமையாகப் பாதுகாத்தது.

என்னுடைய அரசு அப்போது இருந்த 28 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்ததுடன், 2002–2003 பசலி ஆண்டின் வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு 50 கோடி ரூபாய் அளவிலான நில வரி மற்றும் இதர வரிகளைத் தள்ளுபடி செய்தது. மீண்டும் 2003–2004 பசலி ஆண்டிற்கு 50 கோடி ரூபாய் அளவுக்கு நிலவரி மற்றும் உள்ளூர்த் தல வரி மற்றும் தல மேல் வரி போன்ற இதர வரிகளை என்னுடைய அரசு தள்ளுபடி செய்தது. 250 கோடி ரூபாய் குறுகிய காலப் பயிர்க் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குகின்ற வகையில், 61.05 கோடி ரூபாய் வட்டி மற்றும் அபராத வட்டியை எனது அரசு தள்ளுபடி செய்தது. மீண்டும் 2004ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், 2003–2004ஆம் ஆண்டில் விவசாயிகளால் செலுத்தப்பட வேண்டிய 62 கோடி ரூபாய் அளவிலான பயிர்க் கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை என்னுடைய அரசு தள்ளுபடி செய்தது.

ஒரு மாநில அரசு தன் சக்திக்கு மிகவும் அப்பாற்பட்ட வகையில் எவ்வளவு வழங்க முடியுமோ அவ்வளவு அதிக பட்ச உதவியை எனது அரசு விவசாயிகளுக்கு வழங்குவதை நான் உறுதிப்படுத்தியிருக்கிறேன். முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசு கூட்டுறவு அமைப்புகளை வலிவோடு வைத்துக் கொள்ளத் தவறி விட்டதாலும் தொடர்ந்து சில ஆண்டுகளாகத் திரும்பத் திரும்ப வறட்சி நிலைமை தொடர்ந்ததாலும் ஒட்டு மொத்தக் கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்பின் வலிமை பெரிதும் பாதிக்கப்பட்டது. விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்காகவும் தேவையான கடன் வசதிகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களை வலிமை உடையதாக ஆக்குவது அவசியம். இருப்பினும், தொடர்ந்து ஏற்பட்ட வறட்சிகளும் அதனைத் தொடர்ந்து விவசாயிகள் கடன்களைச் செலுத்த இயலாமல் போனதும் கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்த நிறுவனங்கள் மேலும் விவசாயக் கடன் வழங்க இயலவில்லை.

கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களை ஆரோக்கியம் உள்ளவைகளாக ஆக்குகின்ற பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினையாக மத்திய அரசு எடுத்துக் கொண்டு, விவசாயிகளுக்குத் தேவையான நிவாரணத்தை வழங்க வேண்டும். மத்தியில் உள்ள புதிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு விவசாயிகளுக்கு உற்ற காலத்தில் உதவ உடனடி நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் நம்பி இருந்தேன். துரதிர்ஷ்டவசமாக, 2004–2005ஆம் ஆண்டுக்கான மத்திய நிதி நிலை அறிக்கையில் இந்தப் பிரச்சினை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதே தவிர, இதற்கான தீர்வு காணப்படவில்லை. ஒரு 'சிறப்புப் பணிப்பிரிவு' (Task Force) மட்டுமே அமைக்கப் பட்டுள்ளது. பெருந்தொழில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டுத் திரும்பிவராக்

கடன்களைச் சரிப்படுத்த, இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) 9,000 கோடி ரூபாய் பெறுவதற்கு மத்திய அரசு வழி வகை செய்துள்ள அதே வேளையில், விவசாயிகளுக்கு எதுவும் மத்திய அரசால் செய்யப்படவில்லை. விவசாயத்திற்கும், விவசாயி களுக்கும் உறுதுணையாக இருப்போம் என்ற உறுதி மொழியின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு விவசாயிகளின் சிக்கல்களைத் தீர்ப்பதில் பரிதாபகரமாகப் படு தோல்வி அடைந்துள்ளது. மாநில அரசுகள் இதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கில்லை; ஏனெனில் இது அவைகளுடைய நிதித் திறனுக்கு அப்பாற்பட்டது. மேலும் கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்புக்குப் புத்துயிர் ஊட்டும் அமைப்புகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. எனவே, தொடர்ச்சியான வறட்சிகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட கூட்டுறவுக் கடன் அமைப்புக்குப் புத்துயிர் அளிப்பதற்கு நிதி வழங்கும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்கள் ஒட்டு மொத்தமாகத் தங்களது செயல்பாட்டை நிறுத்திவிடும் அபாயத்தைத் தடுக்க, புதிய சிறப்புக் கடன் வசதி 'நபார்டு' வங்கியால் வழங்கப்பட வேண்டும்.

கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் புத்துயிர் ஊட்ட ஏதேனும் சிறப்பு உதவித் திட்டத்தை மத்திய அரசு வழங்குவதற்கு இடையில், 2004–2005ஆம் ஆண்டில், கூட்டுறவுக் கடன் அமைப்பு தொடர்ந்து செயல்படும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் கொண்ட ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நான் முடிவு செய்துள்ளேன். இது, இந்த ஆண்டு, சிறந்த பருவகாலச் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு பயிரிடும் ஒரு வாய்ப்பை விவசாயிகளுக்கு வழங்கும். 217.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எனது அரசால் வழங்கப்படும் இந்தச் சிறப்புத் திட்டம், கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களை வலிமைப்படுத்தும். தொடர்ச்சியான வறட்சிகளின் விளைவுகளால் பலவீனம் அடைந்திருக்கும் விவசாயிகள் அதிலிருந்து மீள உதவும் முக்கிய திட்டமாக இது இருப்பதால், 217.32 கோடி ரூபாய் மதிப்பில் கூட்டுறவுக் கடன் அமைப்பைப் புத்துயிர் ஊட்டும் வகையில், ஓர் உதவித் திட்டத்தை வழங்க நான் முடிவு எடுத்துள்ளேன். விவசாயிகளுக்கு உதவும் இந்தத் திட்டத்தின் அம்சங்கள் வருமாறு:

- கடந்த ஆண்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க்கடன் வட்டி விகிதத்தை 14%ல் இருந்து 12% ஆகக் குறைக்க நான் ஆணையிட்டிருந்தேன். கவனமான பரிசீலனைக்குப் பின், விவசாயிகள் மேலும் பயன்பெறுவதற்காக, கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்கள் ஒவ்வொரு நிலையிலும் தங்களது செயல்பாட்டுச் செலவுகளைக் குறைத்துக் கொண்டு 2004–2005 பருவக் காலத்துக்கு ஆண்டுக்கு 9% என்ற குறைந்த வட்டி விகிதத்தில் விவசாயிகளுக்குக் கடன் வழங்க வேண்டும் என்று நான் ஆணையிட்டுள்ளேன்.
- கூட்டுறவுக் கடன்வழங்கும் சங்கங்கள் 2004–2005ஆம் ஆண்டுக்கு வழங்கும் பயிர்க் கடன்களின் குறியீடு 1,037 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். 2003–2004ஆம் ஆண்டில் இந்தக் குறியீடு 688 கோடி ரூபாயாக இருந்தது.
- கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் புது வலிமை ஊட்டுவதன் மூலம் 1,037 கோடி ரூபாயாக இந்தக் குறியீட்டை உயர்த்துவது சாத்தியமாக ஆக்கப்படும். 31.3.1999–க்கு முன்பு தங்களது குறுகிய காலப் பயிர்க் கடன்களை நடுத்தரக் கடன்களாக மாற்றிக் கொண்ட விவசாயிகள், மத்திய காலக் கடன்களின் தவணைகளைச் செலுத்த முடியாமல் உள்ளார்கள். இந்த விவசாயிகளுக்குப் பயன் அளிக்கும் வகையில் புதியதொரு திட்டத்தை நான் வழங்க முடிவு எடுத்துள்ளேன். இந்தக் கடன்கள் ஒரு தனிக் கணக்காக (Blocked Account) தொகுத்து அமைக்கப்படும். விவசாயிகளுக்கு இந்தத் தொகைக்கு முழு வட்டித் தள்ளுபடி அளிக்கப்படும். 2 ஆண்டு காலத்திற்கு அசல் தொகை எதையும் திருப்பித் தர வேண்டியதில்லை என்ற சலுகை வழங்கப்படும். அதற்குப் பிறகு, சம அளவில் ஆன ஐந்து ஆண்டுத் தவணைகளில், விவசாயிகள் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தலாம். இந்த வசதியை விவசாயிகளுக்கு அளிக்க உதவும் வகையில், இதற்குத் தேவையான 68.95 கோடி ரூபாயை தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு எனது அரசு கடனாக வழங்கும்.
- கூட்டுறவு நூற்பு ஆலைகள் தங்கள் செயல்பாடுகளை நிறுத்திக் கொண்டதால் அவற்றுக்குக் கடன் வழங்கிய மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனது அரசு இந்தக் கடன் சுமையை ஏற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளது. இதன்படி கூட்டுறவு நூற்பாலைகள் மாவட்டக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த ஏதுவாக நலிவடைந்திருக்கும் 13 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 76.57 கோடி ரூபாய் வழங்கப்படும். இதன் மூலம் இந்த வங்கிகளுக்குப் பயிர்க் கடன்களை வழங்குவதற்கான புதிய வலிமை கிடைக்கும்.

- 2003–2004ஆம் ஆண்டு, வறட்சியின் காரணமாக விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. இதற்காக, கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகையில் எஞ்சியுள்ள 40 கோடி ரூபாய் ரொக்கமாகக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படும்.

- சில்லறை குடிமைப் பொருள் வழங்கும் நடவடிக்கைகளுக்காக கிராமத் தொடக்க வேளாண் கடன் வங்கிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியத் தொகையான 30 கோடி ரூபாய் உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும்.

அளவுக்குப் புதிய பயிர்க் கடன்களை இந்த வங்கிகள் வழங்க உதவிகரமாக இருக்கும்.

கூட்டுறவுக் கடன் வழங்கும் வங்கிகளுக்குப் புத்துயிர் ஊட்டி, புத்துணர்ச்சி அளிப்பதன் மூலம் 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு மேலும் சிறப்பான சேவை புரியும் வகையில், மாநில அரசால் இந்த ஒட்டு மொத்தப் புதிய உதவித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பருவகாலத்தில் விவசாயிகள் பயிர் செய்வதற்கு உதவி புரியும் வகையில் புதிய கடனை வழங்குவதே எங்கள் நோக்கமாகும். எங்களால் உச்சபட்சமாக என்ன செய்யமுடியுமோ அதனைச் செய்திருக்கிறோம். கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்புக்குப் புத்துயிர்



- மாநிலத்தில் தேயிலை விவசாயிகள் தாங்கள் பெற்ற கடன்களுக்காகச் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்காக, நான், ஏற்கெனவே 1.80 கோடி ரூபாய் ஒப்புதல் அளித்துள்ளேன். இந்தத் தொகையும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படும்.

- இவ்வாறு மொத்தம் 217.32 கோடி ரூபாய், எனது அரசால், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி, மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள், மற்றும் தொடக்க வேளாண் வங்கிகள் ஆகியவற்றுக்கு உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும். இந்தத் தொகை இந்த வங்கிகளுக்குப் புத்துயிர் ஊட்டி, 2004–2005ஆம் ஆண்டில் 1,037 கோடி ரூபாய்

அளிக்க ஒரு சிறப்பு கடன் திட்டத்திற்கு மத்திய அரசும் 'நபார்டு' வங்கியும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு தமிழக விவசாயிகள் சார்பாக நான் மத்திய அரசையும், 'நபார்டு' வங்கியையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உதவி தேவைப்படும் இந்த நேரத்தில், விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்க, எனது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. எனது அரசின் நிதி நிலைக்கு அப்பாற்பட்டு இருந்த போதிலும், இந்தப் பருவத்தில் விவசாயிகள் தேவையான கடனைப் பெற்று புதிய சாகுபடி நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் வகையில் நான் இந்த புதிய உதவித் திட்டத்தைச் செயல்படுத்த உத்தரவிட்டுள்ளேன். ❖

# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் புதிய அறிவிப்புகள்

- தலைமைச் செயலக, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் பயன்பாட்டிற்கென ரூ.3 இலட்சம் செலவில் நான்கு கணினிகள், ஒரு வண்ண பிரிண்டர் (பராமரிப்பு செலவுடன்) மற்றும் ரூ.17 ஆயிரம் செலவில் மூன்று இரும்பு பீரோக்கள் (அலமாரிகள்) வழங்கப்படும்.

- சேவை இல்லத்திலுள்ள சிறார்களுக்கான உணவூட்டுச் செலவினம் ரூ.200லிருந்து ரூ.225ஆக உயர்த்தப்படும். இதற்காக மொத்தம் ரூ.15 ஆயிரம் செலவிடப்படும்.

- சமூக நலத்துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து ரூ.1 இலட்சத்து 27 ஆயிரம் செலவில் சமூக நல இயக்கக கண்காணிப்பாளர்களுக்கு மேலாண்மை தகவல் முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

- சமூக நல இயக்ககத்தில் தற்போது உள்ள இரு பழைய ஜெராக்ஸ் இயந்திரங்களுக்குப் பதிலாக ரூ.1 இலட்சத்து 15 ஆயிரம் செலவில் புதிதாக ஜெராக்ஸ் இயந்திரம் வாங்கப்படும்.

- மேலாண்மை தகவல் முறையின் கீழ் சமூக நல இயக்ககத்திற்கு ரூ.3 இலட்சம் செலவில் புதிய கணினிகளும், லைன் பிரிண்டரும் வாங்கப்படும். மேலும், ரூ.31 ஆயிரம் செலவில் 5 அலமாரிகள் வாங்கப்படும்.

- தருமபுரி மற்றும் மதுரையில் உள்ள அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கென ரூ.20 இலட்சம் செலவில் இரண்டு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

- 15 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ரூ.3 இலட்சம் செலவில் 15 படிப்பெருக்கிச் சாதனங்கள் வழங்கப்படும்.

- மாவட்ட சமூக நல அலுவலகம் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு அலமாரிகள் ரூ.3 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

- 25 அரசு குழந்தைகள் காப்பகங்களில் ரூ.3 இலட்சத்து 75 ஆயிரம் செலவில் நூலகம் மற்றும் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் விளையாட்டுச் சாமான்கள் வழங்கப்படும்.



- தாம்பரம் சேவை இல்லத்தில் ரூ.19 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் கூடுதலாக ஆறு வகுப்பறைகள் கட்டப்படும்.

- தொண்டு நிறுவனங்கள் மூலமாக ரூ.5 இலட்சம் செலவில் 3 முதியோர் இல்லங்கள் ஏற்படுத்தப்படும்.

- சத்துணவு பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு ஒன்றும் டம்ளர் ஒன்றும் ரூபாய் ஒரு கோடி செலவில் வழங்கப்படும்.

- கை, கால் ஊனமுற்றவர்களுக்கு / முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்த பின்னர் தேவைப்படும் பராமரிப்புத் தொகையும், மருத்துவப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.4 இலட்சம் அளிக்கப்படும்.

- ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரகத்தில் ரூ.1 இலட்சத்து 30 ஆயிரம் செலவில் தொலைபேசி டிஜிட்டல் போர்டு தொலைத் தொடர்பு முறை நிறுவப்படும். மேலும், கணினி அறைக்கு ரூ.30 ஆயிரம் செலவில் சீர்வளி சாதனம் வழங்கப்படும்.

- அரசினர் சிறப்புப் பள்ளிகளில் உணவுக் கட்டணங்கள் ரூ.200லிருந்து ரூ.225 ஆக உயர்த்தப்படும். இதற்கென ரூ.4 இலட்சத்து 91 ஆயிரம் செலவிடப்படும்.

- மேல்பாக்கம் அரசினர் மறுவாழ்வு இல்லங்கள் / காப்பு முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு கட்டில்கள், படுக்கைகள், ரப்பர் ஷீட்டுகள் ரூ.3 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

- அரசினர் மறுவாழ்வு இல்லங்களில் ஏழு தலைமைக் கண்காணிப்பாளர்களுக்கு ரூ.84 ஆயிரம் செலவில் தொலைபேசி வசதி செய்து தரப்படும்.

- சென்னை அரசு மனநலம் குன்றியோர்களுக்கான பள்ளிக்கு ரூ.1 இலட்சம் செலவில் பயிற்றுவிப்புச் சாதனங்களும் பொருட்களும் வாங்கப்படும்.

- அரசு சாரா அமைப்புகளுக்கு ஆலோசனை பணிகள் அளித்திட மதிப்பூதியம் வழங்கப்படும். இதற்கென ரூ.2 இலட்சம் செலவிடப்படும்.

- சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கென ரூ.75 ஆயிரம் செலவில் கணினி ஒன்று வழங்கப்படும்.

- ஆறு மாநகராட்சிப் பகுதிகளில் சாலையோர சிறார்களுக்கென ரூ.9 இலட்சம் செலவில் விரிவான திட்டம் வகுக்கப்படும்.

- சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தில் உள்ள நூலகத்தை வலுப்படுத்த ரூ.15 ஆயிரம் வழங்கப்படும். கையடக்க மின் உற்பத்தி இயந்திரம் ரூ.49 ஆயிரம் செலவில் வழங்கப்படும். மேலும், ரூ.60 ஆயிரம் செலவில் அறைகலன்கள் வழங்கி வலுப்படுத்தப்படும்.

- ஊனமுற்றோருக்கென ரூ.75 இலட்சம் செலவில் உதவி உபகரணங்கள் வழங்கப்படும். ரூ.15 இலட்சம் செலவில் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்கப்படும்.

- அரசு காது கேளாதோர் பள்ளிகளுக்கு எப்.எம்.காது கேட்கும் கருவிகள் ரூ.10 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

- ஊனமுற்றோருக்கென ரூ.5 இலட்சம் செலவில் விளையாட்டுப் போட்டிகளும், பண்பாட்டு கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படும்.

- பார்வையற்றோருக்குத் தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு (Scribe Assistance) உதவித் தொகை ரூ.30 விருந்து ரூ.50 ஆக உயர்த்தப்படும். இதற்கென ரூ.1 இலட்சத்து 35 ஆயிரம் செலவிடப்படும்.

- சென்னை ஆயிரம் விளக்கு அரசினர் மறுவாழ்வு இல்லத் தலைமை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு ரூ.55 ஆயிரம் செலவில் கணினி வழங்கப்படும்.

- இராணிப்பேட்டை அரசு சிறார் சிறப்பு இல்லத்தின் கண்காணிப்பாளர்களுக்கு ரூ.2 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் குடியிருப்பு கட்டப்படும்.

- மகளிர் மற்றும் சிறார்களைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்கும் எதிர்ப்பதற்கும் சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தில் ரூ.2 இலட்சம் செலவில் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.

- தட்டப்பாறை அரசு சிறார் இல்லத்திற்கு ரூ.3 இலட்சம் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

- இரு கண்காணிப்பு இல்லங்களிலும் இரு சிறார் இல்லங்களிலும் மின் கம்பி தொடர்களை பழுதுபார்த்திடவும், பழையவற்றிற்குப் பதிலாகப் புதிய மின் கம்பி அமைத்திடவும் ரூ.6 இலட்சத்து 88 ஆயிரம் செலவிடப்படும்.

- பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர், தட்டப்பாறை ஆகிய இடங்களிலுள்ள அரசு சிறார் இல்லக் கட்டடங்கள் ரூ.10 இலட்சம் செலவில் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- இராணிப்பேட்டை அரசு சிறார் இல்லத்தில் வரவேற்புப் பிரிவுக்கு ரூ.5 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.

- செங்கற்பட்டு அரசு சிறார் இல்லம் ரூ.3 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் சிறப்புப் பழுது பார்க்கப்படும்.

- மல்லிப்புதூர் அரசு சிறார் இல்லத்தில் துயிற்கூடங்கள் ரூ.2 இலட்சத்து 93 ஆயிரம் செலவில் கட்டப்படும்.

- இளங்குற்றவாளிகளுக்கு நீதி வழங்கும் குழுக்கள் செயல்படுவதற்காக ஆறு இடங்களில் ரூ.7 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் அறைகள் கட்டப்படும்.

- செங்கற்பட்டு அரசு சிறார் இல்லத்தில் ரூ.4 இலட்சத்து 88 ஆயிரம் செலவில் உணவுக் கூடம் கட்டப்படும்.

❖ ❖ ❖

# அனைத்து மருத்துவமனைகளிலும் அரசு அலுவலகங்களிலும் அழைப்போரை அடையாளம் காணும் கருவி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆணை

**23.7.2004** அன்று சென்னை மாநகரில் உள்ள 27 பள்ளிகளுக்கு வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக தொலைபேசியில் பொய் மிரட்டல்கள் வந்துள்ளன. இதனையடுத்து, சென்னை மாநகர காவல் துறையினர் சம்பந்தப்பட்ட 27 பள்ளிகளுக்கும் உடனடியாக விரைந்து சென்று பள்ளி வளாகங்களைத் தீவிர சோதனை செய்ததில் அங்கு வெடிகுண்டுகள் ஏதும் இல்லை என்றும், அவை வெறும் பொய் மிரட்டல்கள் தான் என்றும் கண்டறியப்பட்டது.

27 பள்ளிகளில் அனாமதேய தொலைபேசி மிரட்டல்கள் பெறப்பட்டு, அங்கிருந்த அனைவரும் பீதிக்கு உள்ளாகும் நிலைமை ஏற்பட்டது மிகவும் கண்டனத்திற்கு உரியதாகும். காவல் துறையினர் 27 பள்ளிகளுக்கும் விரைந்து சென்று மோப்ப நாய்களைப் பயன்படுத்தி, சோதனைகளை மேற்கொண்டனர். இந்த தொலைபேசித் தகவல்கள் வெறும் பொய் மிரட்டல்கள் என்பது பின்னர் தெரிந்தது. எனினும் பீதி பரவி விட்டது. இந்தப் பொய்யான தகவல்கள் காரணமாகப் பள்ளிகளுக்கு விரைந்து சென்ற பெற்றோர்கள் அங்கு வகுப்பறைகளுக்குள் நுழைந்து தங்களது குழந்தைகளை வெளியே இழுத்து வந்தனர். குழந்தைகளும் பீதி அடைந்திருந்த நிலையில் பள்ளிக் கட்டடங்களை விட்டு விரைவாக வெளியேற முனைந்தனர். இதன் விளைவாக சென்னை, சூளைமேடு நமசிவாயபுரத்தில் உள்ள ஜான் மில்டன் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் ஏற்பட்ட நெரிசலில் 15 குழந்தைகள் கீழே தள்ளப்பட்டு மற்றவர்கள் அவர்களை மிதித்த வண்ணம் வெளியேறியுள்ளனர். அவர்களில் கொடுங்காயம் அடைந்த 7 குழந்தைகள் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

எக்காரணமும் இன்றி இப்படிப்பட்ட சம்பவம் ஏற்பட்டது என்பது மிகவும் கண்டனத்திற்கு உரியது. எந்த ஒரு காரணமுமின்றிப் பரப்பப்பட்ட இந்த பொய் வதந்திகளால் ஏற்பட்ட பீதியின் காரணமாக 7 பள்ளிக் குழந்தைகள் கொடுங்காயம் அடைந்தனர். இதன் காரணமாக 23.7.2004 அன்று சுமார் 100 பள்ளிகள் இயங்கவில்லை. பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் தேவையற்ற மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். காவல் துறையினரும் தங்களது வழக்கமான பணிகளை எல்லாம் விட்டு விட்டு ஒரே சமயத்தில் 27 பள்ளிகளுக்கும் விரைந்து செல்ல நேர்ந்தது. இந்த 27 பள்ளிகளின் வளாகங்களிலும் வெடிகுண்டு உள்ளதா என்று தீவிர சோதனைகள் மேற்கொண்டனர். முடிவில், இவை வெறும் பொய் மிரட்டல்கள் தான் என்பது தெரிய வந்தது.

துரதிஷ்டவசமாக, சமூகத்தில் சில தீய மனிதர்கள் உள்ளார்கள். இவர்கள் இப்படிப்பட்ட கொடிய செயல்களை நல்ல நகைச்சுவை என்று கருதுவது போல் தோன்றுகிறது. தங்களின் கொடூரக் குறும்புகளால் ஏற்படும் விளைவுகள் பற்றி இவர்கள் கொஞ்சமும் கவலைப் படுவதில்லை.

எனவே, எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதைத் தடுக்கும் வகையிலும், இந்தக் கொடூரக் குறும்புகளைப் புரிவோருக்கு எச்சரிக்கையாக இருக்கும் வகையிலும், காவல் துறையினர் தங்கள் கடமைகளை மேலும் விரைவாகவும், திறமையுடனும் ஆற்ற உதவும் வகையிலும், மாநிலத்தில் தொலைபேசி வசதி உள்ள அனைத்துக் கல்வி நிலையங்களிலும் 'அழைப்போரை அடையாளம் காணும் கருவி' – Caller ID Equipment பொருத்தப்பட வேண்டும் என்று நான் ஆணை யிட்டுள்ளேன். எதிர்காலத்தில் தொலைபேசியில் இத்தகைய பொய் அழைப்புகள் வந்தால் அவ்வாறு அழைத்தவரை உடனடியாகக் கண்டுபிடித்து, தாமதமின்றி குற்றவாளிகளைப் பிடிக்க காவலர்களுக்கு உதவுவதை இது உறுதிப்படுத்தும்.

அனைத்து மருத்துவமனைகளிலும், அரசு அலுவலகங்களிலும், அரசுக் கட்டடங்களிலும், அனைத்துக் காவல் நிலையங்களிலும், 'அழைப்போரை அடையாளம் காணும் கருவி' –Caller ID Equipment உடனடியாகப் பொருத்தப்பட வேண்டும் என்றும் நான் ஆணையிட்டுள்ளேன்.

குடிமக்களின் பாதுகாப்பே மிக முக்கியம் என்பதால், அனைத்து தனியார் கட்டட உரிமையாளர்களும், பெருமளவில் மக்கள் பணிபுரியும் நிறுவனங்கள் மற்றும் பெருமளவில் மக்கள் கூடும் இடங்களின் உரிமையாளர்களும் 'அழைப்போரை அடையாளம் காணும் கருவி' – Caller ID Equipment–ஐ தங்கள் தொலைபேசிகளில் பொருத்திக் கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். இது, அத்தகைய விஷமக்காரர்களைக் கண்டறிந்து, சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வந்து, சட்டப்படி அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகும்.

**23.7.2004** அன்று நிகழ்ந்த நெரிசலில் படுகாயமுற்ற 7 குழந்தைகளும் விரைவில் குணம் அடைய நான் பிரார்த்திக்கிறேன். இந்தக் குழந்தைகள் அனுமதிக்கப் பட்டுள்ள மருத்துவமனைகளில் சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்குமாறு நான் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளின் நிருவாகத்தினரைக் கேட்டுக் கொண்டுள்ளேன். இந்தக் குழந்தைகள் அனுமதிக்கப் பட்டுள்ள மருத்துவமனைகளுக்கு நேரில் சென்று சிகிச்சை பெறும் குழந்தைகளைப் பார்வையிடவும், அவர்களது உடல்நிலை முன்னேற்றத்தைப் பற்றி விசாரித்து அறியவும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ந.தளவாய் சுந்தரம் அவர்களை நான் அனுப்பி வைத்துள்ளேன். □

# ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு



**த**மிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள மொத்தம் **22,817** ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **20.7.2004** அன்று உத்தரவிட்டுள்ளார்கள்.

பள்ளிக் கல்விக்காகத் தமிழக அரசு தலையாய முன்னுரிமை அளித்து வருகிறது. **2004–2005** வரவு–செலவுத் திட்டத்தில் **4,202** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதற்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, கடந்த மூன்று ஆண்டுகளில் **22,178** ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இவ்வாறு நிரப்பப்பட்ட பின்னரும் **1.6.2004** அன்றைய நிலவரப்படி ஆசிரியர்கள் ஓய்வு, ஆசிரியர்கள் பதவி உயர்வு மற்றும் புதிய பள்ளிகள் திறப்பதால் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் போன்றவை காரணமாக அரசுப் பள்ளிகளில் **22,817** ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இந்த **22,817** ஆசிரியர் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **20.7.04** அன்று ஆணையிட்டுள்ளார்கள். இப்பணியிடங்கள் நிரப்பப்பட்ட உடன், தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு விடும்.



**12,900** இடைநிலை, உடற்கல்வி, ஓவியம், இசை மற்றும் தையல் ஆசிரியர் பணியிடங்களை வேலை வாய்ப்பகங்கள் மூலம் **31.8.2004**–க்குள் நிரப்பவும், **8,634** பி.எட் தகுதி ஆசிரியர்கள் மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் போட்டித் தேர்வு நடத்தி நான்கு மாத காலத்திற்குள் நிரப்பவும், இது தவிர **1,293** பி.எட். தகுதி ஆசிரியர்கள் மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் பணியிடங்களைப் பதவி உயர்வு மூலம் நிரப்பவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். **1.12.2004** அன்றைய தேதியில் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஆசிரியர் காலிப் பணியிடம் ஏதும் இருக்காது என்பது இதன் மூலம் உறுதி செய்யப்படும். □



# தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சீரிய பணிகள்

– திரு. ப. ரா.சம்பத், இ.ஆ.ப.,
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாட்டின் 992 கிலோ மீட்டர் நீள கடற்கரை பகுதியில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்களும், காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், கடலூர், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், நாகப்பட்டினம், இராமேசுவரம், பாம்பன், வாலிநோக்கம், புன்னக்காயல், மணப்பாடு, கூடங்குளம், கன்னியாகுமரி மற்றும் குளச்சல் ஆகிய 15 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன. இவற்றுள் காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், திருச்சோபுரம், பி.ஒய்–3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல், மணப்பாடு மற்றும் கூடங்குளம் ஆகியவை தனியார் நிறுவனங்களின் சிறப்புப் பயன்பாடுகளுக்காக சிறு துறைமுகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இங்கு அனைத்து துறைமுக வசதிகளையும் மேம்படுத்தும் பொறுப்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்களைச் சார்ந்ததாகும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறு துறைமுகங்களும், கடலில் கப்பலை நங்கூரமிட்டு நிறுத்துவதற்கு ஏற்ற துறைமுகங்களாகும். நடுக்கடலில் நிறுத்தப்படும் கப்பல்களிலிருந்து கரைக்கும், கரையிலிருந்து கப்பல்களுக்கும் சரக்குகள் சிறு படகுகள் / மிதவைகள் மூலமாக இறக்கி ஏற்றப்படுகின்றன. எண்ணூர் மற்றும் திருக்கடையூர் துறைமுகங்களில் கப்பலிலிருந்து முறையே திரவ அமோனியா மற்றும் நாப்தா நேரடியாக கடலுக்கடியில் புதைக்கப்பட்டுள்ள குழாய்களின் மூலமாக கரையிலுள்ள சேமிப்புக் கலத்திற்கு அனுப்பப்படுகிறது.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சரக்குகள் :

சிறு துறைமுகங்களில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் சரக்குகள் கீழ்வருமாறு :

| ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|
| கச்சா எண்ணெய் | சமையல் எண்ணெய் |
| பொது சரக்குகள் | திரவ அமோனியா |
| சிமெண்ட் | நாப்தா |
| | புரப்பலீன் திரவ வாயு |
| | கச்சா எண்ணெய் |
| | இயந்திரங்கள் |
| | பொது சரக்குகள் |

தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1996 (தமிழ்நாடு சட்டம் 4.96)ன் கீழ் 1997 மார்ச் மாதத்தில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு கடல்சார் வாரியம் பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தி, கட்டுப்படுத்தி, நிர்வகித்து வருகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழிற் சாலைகளின் தேவைகள் மிக முக்கியமானதென தமிழ்நாடு கடல்சார் வாரியம் உணர்ந்து துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகளான எண்ணெய் ஆலைகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றின் சிறப்புப் பயன்பாட்டிற்கென துறைமுகங்கள் / தோணித்துறைகள் / நங்கூர மிதவைகள் ஆகியவற்றை தனியார் பங்கேற்பின் மூலமாக அமைப்பதற்கு ஊக்கமளித்து வருகிறது.

## துறைமுகக் கொள்கை

தனியார் முதலீட்டு வாய்ப்புகளின் மூலம் துறைமுகங்களை மேம்படுத்துவதற்காக அரசு, துறைமுகக் கொள்கையை வகுத்துள்ளது.

**துறைமுகக் கொள்கையின் நோக்கங்கள் கீழ்வருமாறு :**

* நிலக்கரி / நாப்தா / எண்ணெய் / இயற்கை வாயு போன்ற எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கான தனித்துறைமுக வசதிகளை அளிப்பதன் மூலம் துறைமுகங்களைச் சார்ந்த மின் நிலையங்களை ஏற்படுத்துதல்.
* தமிழ்நாட்டின் கடற்கரையோர மாவட்டங்களில் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றை அமைப்பதற்கான துறைமுக வசதிகளுக்கு வகை செய்தல்.
* கிழக்குக் கடற்கரை நெடுக சரக்கு / பயணிகள் கப்பல் போக்குவரத்திற்கு வசதிகள் செய்வதன் மூலம் நெடுஞ்சாலைகள் / ரயில் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தல்.
* ஓய்வு நேர மற்றும் நீர் விளையாட்டிற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் சுற்றுலாவிற்கு வகை செய்தல்.
* கப்பல் பழுது பார்த்தல் மற்றும் உடைத்தல், பாரந்தூக்கிகள், மிதவைக் கப்பல்கள் கட்டுதல் போன்றவற்றை ஊக்குவிக்க வசதிகளைச் செய்து கொடுத்தல்.
* சென்னை மற்றும் தூத்துக்குடி போன்ற பெரிய துறைமுகங்களில் போக்குவரத்து நெரிசலை குறைத்தல்.

## கடலூர் துறைமுகம்

தமிழக அரசு கடலூர் துறைமுகத்தை, தனியார் பங்கேற்பின் மூலம் மேம்படுத்த முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு கடல்சார் வாரியம், திருவாளர்கள் யு.டி.ஐ. வங்கி லிமிடெட்/ ரைட்ஸ் லிமிடெட் நிறுவனத்தை இதற்குரிய தொழில் நுட்ப உதவி வழங்கும் நிறுவனமாக நியமனம் செய்துள்ளது. இத்தொழில்நுட்ப உதவி வழங்கும் நிறுவனம், முதல்நிலை தெரிவு அறிக்கை, வரைவு ஒப்பந்தப்புள்ளி ஆவணம், வரைவு சலுகை ஒப்பந்தம் மற்றும் இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை ஆகியவற்றை தயாரித்து அளித்துள்ளது. துறைமுக மேம்பாட்டுத் திட்டத்தினை மேற்கொள்வதற்கான உலகளவிலான ஒப்பந்தப்புள்ளி கூடிய விரைவில் கோரப்படவுள்ளது.



## நாகப்பட்டினம் துறைமுகம்

நாகப்பட்டினம் துறைமுகத்தில் திருவாளர்கள் பட்ஸ்,பேட்ஸ் மற்றும் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் சமையல் எண்ணெய் கையாளுவதற்கான சேமிப்புக் கலத்தை 1999இல் நிறுவி உள்ளனர். உணவு எண்ணெய்க் கப்பல்கள், இத்துறைமுகத்திற்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. 2003–04 நிதியாண்டில் 10 கப்பல்களின் மூலம் 25,638 மெட்ரிக் டன்கள் சமையல் எண்ணெய் கையாளப்பட்டுள்ளது.

துறைமுக நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதற்காகத் துறைமுக நிலங்கள் இரு தனியார் நிறுவனங்களுக்குச் சமையல் எண்ணெய் கையாள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்களால், சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.

திருவாளர்கள் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தினரால் அவர்களது பனங்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்யைக் கையாளுவதற்காக அணுகு பாலத்துடன் கூடிய கான்கிரீட்டிலான தோணித்துறை கட்டப்பட்டுள்ளது. முதல் கச்சா எண்ணெய் கப்பல் 15.02.2003 அன்று துறைமுகத்திற்கு வந்து 12,520 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்தது. 2003–04 நிதியாண்டில் இதுவரை 23 கப்பல்கள் வந்து 2,79,174 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

13 ஆண்டுகள் இடைவெளிக்கு பின்னர் பிப்ரவரி 2004இல் இத்துறைமுகத்தில் திருவாளர்கள் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் ஸ்ரீலங்காவிற்கு சிமெண்ட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நிதியாண்டில் 10 கப்பல்கள் மூலம் இதுவரை 16,804 மெட்ரிக் டன்கள் சிமெண்ட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு கடல்நீர் தடுப்பியை வலுப்படுத்தி நீட்டித்தல், நீர் வழித்தடத்தினை ஆழப்படுத்துல் மற்றும் தூர்வாருதல் அவசியம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. ரூ.500 இலட்சம் செலவில் இதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கடல்சார் வாரியம், இந்நிதியை ஹட்கோ நிறுவனம்/ தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற தீர்மானித்துள்ளது. இத்திட்டப்பணி இரு கட்டமாக நிறைவேற்றப்படவுள்ளது. நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கு கடல்நீர் தடுப்பியை வலுப்படுத்தி நீட்டித்தல், நீர் வழித்தடத்தினை ஆழப்படுத்துதல் மற்றும் தூர்வாருதல் அவசியம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. ரூ.500 இலட்சம் செலவில் இதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு கடல்சார் வாரியம், இந்நிதியை ஹட்கோ நிறுவனம்/ தூத்துக்குடி துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற தீர்மானித்துள்ளது. இத்திட்டப்பணி இரு கட்டமாக நிறைவேற்றப்படவுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் சரக்கு கப்பல்களை இத்துறைமுகத்தில் கையாளுவதற்கு ஏதுவாக, இத்துறைமுகம் "பன்னாட்டு பாதுகாப்புச் சான்றிதழ்" (ISPS Certificate) பெற்றுள்ளது.

### பாம்பன் துறைமுகம்

பாம்பன் கால்வாயைக் கடந்து செல்லும் கப்பல்களுக்கு வழி காட்டுதலே இத்துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையாகும். 2003–04 நிதியாண்டில் 25 கப்பல்கள் இக்கால்வாயைக் கடந்து சென்றுள்ளன.

### இராமேசுவரம் துறைமுகம்

இராமேசுவரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து நடைபெற்று வந்தது. ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக 08.01.1985 முதல் இக்கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தற்போது இத்துறைமுகத்தில், துறைமுக நடவடிக்கை ஏதுமில்லை.

பாக் ஜலசந்தியையும், மன்னார் வளைகுடாவையும் கப்பல்கள் செல்லும் வகையில் கால்வாய் கட்டி இணைக்க, இந்திய அரசு இராமேசுவரம் பகுதியில் சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தினை மேற்கொள்ள உள்ளது. இத்திட்டத்தால் சுமார் 400 கடல்மைல் தூரம் கப்பல் பயண தூரம் குறையும் என்பதுடன், 36 மணி நேரக் கப்பல் பயணமும் குறையும்.

1980ன் துவக்கத்தில் இராமேசுவரம் துறைமுகத்தில் இந்தியா – இலங்கைக்கிடையே பயணிகள் போக்குவரத்திற்காகக் கட்டப்பட்ட கட்டுமான வசதிகள் மேற்கூறிய சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே, சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்துடன் இராமேசுவரம் துறைமுகத்தினையும் ஒருங்கிணைத்து மேம்படுத்த மத்திய அரசினைக் கேட்டுக் கொள்ள இவ்வாரியம் முடிவெடுத்துள்ளது. அதன் தொடர்பாக தமிழக அரசினை மத்திய அரசுடன் தொடர்பு கொள்ள இவ்வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

### வாலிநோக்கம் துறைமுகம்

இத்துறைமுகம் அமைதியான கடல் மற்றும் சரிவான கடல் நிலப்பகுதியின் காரணமாக கப்பல் உடைக்கும் பணிக்கு உகந்தது என கண்டறிப்பட்டது. திருவாளர்கள் டிட்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான 30 ஏக்கர் நிலத்திலுள்ள 6 தனியார் கப்பல் உடைக்கும் தளங்கள் கப்பல் உடைப்புப் பணிகளைத் தொடர்வதற்காக தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

இத்துறைமுகத்தில் கப்பல் உடைப்பு தளங்களை நிறுவுவதற்கான கருத்துரு மாநில கடல் பாதுகாப்பு குழுமத்தால் பரிசீலிக்கப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்பதால் மைய அரசிற்கு தடையின்மைச் சான்றிதழ் வழங்குவதற்காக பரிந்துரைக்கப்படவில்லை என தமிழக அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் துறைமுகத்தில் கப்பல் உடைப்புப் பணி அனுமதிக்கப்படுவதில்லை.

### கன்னியாகுமரி துறைமுகம்

இத்துறைமுகத்தில் திருவாளர்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தால், கடற்கரைக்கும் விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்குமிடையே நடத்தப்பட்டு வரும் படகுப் போக்குவரத்தைக் கண்காணிப்பது தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் பணியாகும். இதற்கான நிர்வாகக் கட்டணத்தை வாரியம் மேற்படி கழகத்திடமிருந்து பெறுகிறது.

**2003–04** நிதியாண்டில் **15,16,571** பயணிகள் படகுகளில் பயணம் செய்துள்ளனர்.

### குளச்சல் துறைமுகம்

குளச்சல் துறைமுகம் திருவாளர்கள்.ரைட்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட "போர்ட்ஸ் விஷன் 2020" அறிக்கையின்படி, பெட்டகங்கள் கையாளுவதற்கு ஏற்றவகையில் மேம்படுத்துவதற்கு தகுதியுள்ள துறைமுகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இத்துறை முகத்தினைப் பன்னாட்டுப் பெட்டகங்கள் கையாளும் துறைமுகமாக மேம்படுத்த ஆர்வம் காட்டிய மலேசிய அரசு அதற்குரிய நிதி ஆதாரத்தினைத் திரட்ட இயலாததால், இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனினும், இத்துறைமுக அமைப்பின் திறன், தன்மை மற்றும் வாய்ப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு, மத்திய அரசிடம் இத்துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான கருத்துருவை மத்திய அரசின் "சாகர் மாலா" திட்டத்தில் சேர்த்துக்கொள்ள பரிந்துரை செய்துள்ளது. மேலும் சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தின் மூலம் திட்ட அபிவிருத்தி வாய்ப்பு கூடும் என்பதைக் கருத்தில் கொண்டு இத்துறைமுகத்தினை சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்துடன் ஒருங்கிணைத்து மேம்படுத்த மத்திய அரசினைக் கேட்டுக் கொள்ள வேண்டி இவ்வாரியம் முடிவெடுத்துள்ளது. அதன் தொடர்பாக தமிழக அரசினை மத்திய அரசுடன் தொடர்புகொள்ள இவ்வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

### காட்டுப்பள்ளி துறைமுகம்

இத்துறைமுகம் திருவாளர்கள் ஒபக் சீக்கால் டெர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் பெட்ரோலியப் பொருள்களைக் கையாளுவதற்கான துறைமுக விதிகளை நிறுவுவதற்காக சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு காரணங்களால், இந்நிறுவனம் கடந்த நான்கு ஆண்டுகளாக திட்டமிட்டபடி, இத்துறைமுகத்தினை மேம்படுத்த இயலவில்லை. எனவே, இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி திரும்பப் பெறப்பட்டு, இத்துறைமுகத்தினை மேம்படுத்துவதற்கு ஆர்வம் காட்டும் தனியார் நிறுவனத்திற்கு கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) / கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) / கட்டுதல் தனதாக்குதல், இயக்குதல்,பங்கிடல் மற்றும் ஒப்படைத்தல் (BOOST) அடிப்படையில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### எண்ணூர் சிறு துறைமுகம்

பன்முனை நங்கூர மிதவை திட்டம் மற்றும் கடலுக்கடியில் புதைக்கப்பட்ட குழாய் அமைப்புகள் ஆகிய கடல்சார் வசதிகள் திருவாளர்கள் கோரமண்டல் ஃபெர்டிலைசர்ஸ் லிட்., சென்னை நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டு, திரவ அமோனியா இத்துறைமுகத்தின் மூலம் **1996** அக்டோபர் முதல் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

**2003–04** நிதியாண்டில் **9** அமோனியா கப்பல்கள் மூலம் **54,038** மெட்ரிக் டன் திரவ அமோனியா கையாளப்பட்டுள்ளது.

### திருச்சோபுரம் துறைமுகம்

திருவாளர்கள் நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தினரால் நிறுவப்படவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளுக்காக ஆண்டொன்றுக்கு **6.5** மில்லியன் டன்கள் கச்சா எண்ணெய் இறக்குமதிக்காகவும் மற்றும் **2.8** மில்லியன் டன்கள் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் பொருட்கள் ஏற்றுமதிக்காகவும் திருச்சோபுரம் சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது மைய அரசினால் சுங்கத் துறைமுகமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காகச் சுற்றுப்புறச்சூழல் தடையின்மை சான்றிதழ் மைய அரசின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத் தினரால் திட்டத்திற்கான நிதிநிலை முடிப்பதற்கான ஒப்புதல் பெறப்பட வேண்டியுள்ளது.


### பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி

கடலூருக்குத் தென்கிழக்கே முழுவதுமாக கடலிலேயே அமைக்கப்பட்டுள்ள இத்துறைமுகம் ஒரு தீவுத் துறைமுகமாகும். இங்கு கடலுக்கடியில் அமைந்துள்ள எண்ணெய் கிணறுகளிலிருந்து கச்சா எண்ணெய் எடுக்கப்பட்டு வருகிறது.

**2003–04**ஆம் நிதியாண்டில் **15** கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வருகை தந்து, **1,77,506** மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

### திருக்கடையூர் துறைமுகம்

திருவாளர்கள் பி.பி.என்.பவர் ஜெனரேட்டிங் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தினால் பிள்ளைபெருமாள் நல்லூரில் நிறுவப்பட்டுள்ள **330** மெகாவாட் கேஸ் கம்பைண்ட் சைக்கிள் பவர் திட்டத்திற்குத் தேவையான எரிபொருள்



நாப்தா மற்றும் இயற்கை வாயு ஆகியவற்றை கையாளுவதற்காக திருக்கடையூர் சிறு துறைமுகம் அறிவிக்கப்பட்டது.

2003–04ஆம் நிதியாண்டில் 11 கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வந்து 1,51,114 மெட்ரிக் டன் நாப்தா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

**புன்னக்காயல் துறைமுகம்**

திருவாளர்கள் தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனத்தினரால் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சாகுபுரத்தில் நிறுவப்படவுள்ள தொழிற்சாலைக்கு தேவைப்படும் வினைல் குளோரைடு மோனமர் (வி.சி.எம்) லோ சல்ஃபர் ஹெவி ஸ்டாக் மற்றும் எல்.பி.ஜி. ஆகியவற்றைக் கையாளுவதற்காக இத்துறைமுகம் அறிவிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான நிதிநிலை முடிவு செய்வதற்கான ஒப்புதல் நிறுவனத்தால் எதிர்பார்க்கப்படுகிறது.

**மணப்பாடு துறைமுகம்**

திருவாளர்கள் இந்தியன் பவர் ப்ராஜக்ட் நிறுவனத்தால் வேம்பாரில் அமைக்கப்படவுள்ள 2000 மெகாவாட் கேஸ் டர்பைன் மின் திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் மெட்ரிக் டன்கள் திரவ இயற்கை எரிவாயு திருவாளர்கள் இந்தியன் கேஸ் லிமிடெட் அவர்களால் கையாளப்படுவதற்காக மணப்பாடு சிறு துறைமுகம் அரசால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி நிலை முடிப்பதற்கான ஒப்புதல் நிறுவனத்தால் பெறப்பட வேண்டியுள்ளது. மணப்பாடு துறைமுகத்தைப் பல்வேறு சரக்குகளை கையாளும் துறைமுகமாக மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**கூடங்குளம் துறைமுகம்**

இந்திய அணுமின்சக்தி கழகத்தால், கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுவரும் 1000 மெகாவாட் திறன்கொண்ட இரு அணு உலைகளின் பயன்பாட்டிற்காக இத்துறைமுகம் அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு கிலோ மீட்டர் நீளம் மற்றும் 500 மீட்டர் அகலம் கொண்ட, நீர்த்தேக்க அமைப்பு மற்றும் தேவையான நீர்த்தடுப்பிகளுடன் கூடிய தோணித்துறை ஆகியவை இத்திட்டத்திற்கான அதிக பளுகொண்ட பெரிய இயந்திரங்களை இறக்குமதி செய்யும்பொருட்டு துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இத் துறைமுகத்திற்கு 15.01.2004 அன்று முதல் கப்பல் வந்து இயந்திரப் பகுதிகள் இறக்குமதி செய்யப்பட்டன. நடப்பாண்டில் இதுவரை 603 மெட்ரிக் டன் இயந்திரப் பகுதிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

**சரக்குப் போக்குவரத்து**

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களில் 2003–2004–ஆம் நிதியாண்டில் மொத்தம் 6,90,136 மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளன.

• • •

# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் புதிய அறிவிப்புகள்



★ கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, சேலம், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி ஆகிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ.100 இலட்சம் மொத்தச் செலவில் மருத்துவ சாதனங்கள் மற்றும் அறைகலன்கள் வழங்கப்படும்.

★ சென்னை தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் பட்டமேற்படிப்பு கட்டடத் தொகுதியில் தற்போதுள்ள முதல் தளத்திற்கு மேலே ரூ.80 இலட்சம் மொத்தச் செலவில் கூடுதல் தளம் ஒன்று கட்டப்படும்.

★ செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ரூ.70 இலட்சம் மொத்தச் செலவில் நீராவி சலவையகம் கட்டப்படும்.

★ தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.15 இலட்சம் மொத்தச் செலவில் 160 கிலோவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி இயந்திரம் வழங்கப்படும். மேலும், ரூ.150 இலட்சம் மொத்தச் செலவில் கட்டாய உள்ளுறை பயிற்சியாளர் குடியிருப்பும், ரூ.160 இலட்சம் மொத்தச் செலவில் மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதியும், ரூ.11 இலட்சம் மொத்தச் செலவில் தீவிர சிகிச்சைப் பிரிவும் அமைக்கப்படும்.

★ கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ.60 இலட்சம் மொத்தச் செலவில் படியடுக்கு அமைப்பு கொண்ட விரிவுரைக் கூடம் கட்டப்படும்.

★ சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டடத்தில் ரூ.20 இலட்சம் மொத்தச் செலவில் ஒரு மின்தூக்கி புதுப்பிக்கப்பட்டுப் புதிதாக வாங்கப்படும்.

★ சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.20 இலட்சம் மொத்தச் செலவில் மயக்க மருந்தியல் துறை வலுப்படுத்தப்படும்.

★ சென்னை, தாம்பரம் அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை, புறநோயாளிகள் பிரிவு ரூ.6.50 இலட்சம் மொத்தச் செலவில் விரிவுபடுத்தப்படும்.

★ திருச்சி கி.ஆ.பெ.விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில் ரூ.10 இலட்சம் மொத்தச் செலவில் விலங்ககம் (Animal House) ஒன்று கட்டப்படும்.

★ தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் ரூ.60 இலட்சம் மொத்தச் செலவில் விலங்ககம் ஒன்று கட்டப்படும்.

★ பெரியகுளம் மாவட்ட தலைமையிட மருத்துவமனையில் மொத்தம் ரூ.32 இலட்சம் செலவில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டப்படும்.

★ மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 12 அவசர ஊர்தி / அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக மொத்தம் ரூ.48 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வாங்கப்படும்.

★ சீர்காழி மற்றும் ஆண்டிபட்டியில் உள்ள அரசு வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் ரூ.64 இலட்சம் செலவில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டப்படும்.

★ நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் ரூ.28 இலட்சம் செலவில் குளிர்பதன வசதிகளுடன் கூடிய பிணவறைப் பிரிவு கட்டப்படும்.

★ வள்ளியூர் அரசு மருத்துவமனையில் ரூ.71.89 இலட்சம் மொத்தச் செலவில் 10 படுக்கை வசதிகளுடன் கூடிய விபத்து மற்றும் காயங்கள் சிகிச்சைப் பிரிவு கட்டப்படும்.

★ வட்ட தலைமையிட மருத்துவமனையில் ரூ.0.19 இலட்சம் செலவில் தொலைபேசி வசதிகள் செய்து தரப்படும் ( 3 எண்ணிக்கை).

★ மயிலாடுதுறை, சிவகாசி, மானாமதுரை, விருத்தாசலம், ஏற்காடு மற்றும் முதுகுளத்தூர் ஆகிய வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 6 அவசர ஊர்தி / அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக ரூ.24 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வாங்கப்படும்.

★ வட்டம் சாரா 10 மருத்துவமனைகளில் 10 அறுவை சிகிச்சை கூடங்களுக்கு ரூ.6.10 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

★ குமாரபாளையம் மற்றும் உதயரம்பாளையத்திலுள்ள வட்டம் சாரா மருத்துவமனைகளில் ரூ.22.60 இலட்சம் செலவில் மின் உற்பத்தி எந்திரத்திற்கான கட்டடங்கள் கட்டுவதன் மூலம் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி 40 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் உற்பத்தி சாதனம் வழங்கப்படும்.

★ வட்டம் சாரா தலைமையிட 38 மருத்துவமனை களுக்கு ரூ.2.36 இலட்சம் செலவில் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும்.

★ மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் அலுவலகத்திற்கு மொத்தம் ரூ.4 இலட்சம் செலவில் கணினி இணைப்பு மற்றும் துணை பாகங்கள் வழங்கி அலுவலக நிருவாகம் நவீனப்படுத்தப்படும்.

★ மொத்தம் ரூ.5 இலட்சம் செலவில் நீரிழிவு நோய்க் கட்டுப்பாடு முன்னோடித் திட்டம் செயல் படுத்தப்படும்.

★ ரூ.5 இலட்சம் செலவில் பிறப்பு – இறப்புகளை பதிவு செய்வது குறித்து விளம்பரம் செய்யப்படும்.

★ ரூ.6 இலட்சம் செலவில் மாவட்டப் பொது சுகாதார அலுவலர் அலுவலகத்திற்கு கணினிகள் வழங்கப் படும்.

★ இரண்டு மாவட்டங்களில் பல் மருத்துவத் திட்டம் மொத்தம் ரூ.20 இலட்சம் செலவில் விரிவாக்கப்படும்.

★ மொத்தம் ரூ.15 இலட்சம் செலவில் பேறுகாலத்திற்குப் பிந்தைய தாய்மார்களுக்கு வைட்டமின் ‘ஏ’ மாத்திரைகள் வழங்கப்படும்.

★ மொத்தம் ரூ.90 இலட்சம் செலவில் 1,000 சுகாதார துணை மையங்களுக்கு லேபர் போர்டு (Labour Boards) வழங்கப்படும்.

★ மொத்தம் ரூ.6.90 இலட்சம் செலவில் 150 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும்.

★ மொத்தம் ரூ.9.50 இலட்சம் செலவில் இந்திய முறை மருத்துவத்தைப் பயன்படுத்தி இரத்த சோகையைக் கட்டுப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு ரூ.50 இலட்சம் செலவில் 20 லேப்ராஸ்கோப் கருவிகள் (ஒற்றை துளை கொண்டது) வாங்கி வழங்கப்படும்.

★ மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு நிருவாகத்தின் கீழ்வரும் அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும் ரூ.7.50 இலட்சம் செலவில் கணினிகள், துணைபாகங்கள் மற்றும் அறைகலன்கள் ஆகியவை வாங்கி வழங்கப்படும்.

★ 35 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.92.07 இலட்சம் செலவில் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும்.

★ ஒரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.5.68 இலட்சம் மொத்த செலவில் யோகா மற்றும் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும்.

★ சென்னை, அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியில் மொத்தம் ரூ.15 இலட்சம் செலவில் பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

★ இந்திய மருத்துவத்துறை பிரிவில் உதவி மருத்துவ அலுவலர்களுக்கு முழுச் சம்பளத்துடன் கூடிய பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு மொத்தம் ரூ.14.40 இலட்சம் வழங்கப்படும்.

★ அரசு சித்தா / யுனானி / ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் பகுதி நேர / மதிப்பூதியத்தின் அடிப்படையில் ரூ.5.76 இலட்சம் செலவில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

★ தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத்துறைக்கு மொத்தம் ரூ.0.99 இலட்சம் செலவில் துணைப் பாகங்களுடன் கூடிய ஒரு கணினி மற்றும் அறைகலன் முதலியவை வழங்கப்படும்.

★ தலைமைச் செயலகத்தில் உள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு மொத்தம் ரூ.1 இலட்சம் செலவில் நிழற்பட படிப்பெருக்கி சாதனம் (Xerox Machine) வாங்கி வழங்கப்படும்.

□ □ □

தருமபுரி மாவட்டத்தில்

# காட்டாமணக்கு (Jatropha curcus) நடவுப் பணி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாற்றுப்பயிர் திட்டத்தின் மூலம் காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு ஆகிய மூன்று பயிர்களை அறிமுகம் செய்துள்ளார்கள். இப்பயிர்கள் குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி அதிக வருமானம் தரும் பயிர்களாகும். மேலும் காட்டாமணக்கு (Jatropha curcus) பயிர் செய்து அதன்மூலம் உயிரிஎரிபொருள் (Bio-Diesel) தயார் செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் விரிவான தரிசு நிலத் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கும் 100 நீர்வடிப் பகுதிகளிலும் மற்றும் தரிசாக உள்ள பொது நிலங்களில் காட்டாமணக்கு 500 எக்டேர் நிலப்பரப்பிலும் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. காட்டாமணக்கு பயிர் செய்வதன் மூலம் மூன்று நன்மைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.



1. காட்டாமணக்கு விதையிலிருந்து எடுக்கும் எண்ணை உயிரி எரிபொருள் (Bio-Diesel) ஆகும்.
2. இதிலிருந்து கிடைக்கும் புண்ணாக்கு விவசாயத்திற்கு உரமாகப் பயன்படுகிறது.
3. இதன்மூலம் கிடைக்கும் கிளிசரின் சோப்புத் தொழிற்சாலைக்குப் பயன்படுகிறது.

இத்தகு சிறப்புமிகு திட்டத்தினை மாநிலத்திலேயே முதன் முறையாக தருமபுரி மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வளாக நிலப்பரப்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆஷிஷ்வச்சானி, இ.ஆ.ப., அவர்கள் காட்டாமணக்குச் செடியை நடவு செய்து தொடங்கி வைத்தார். காட்டாமணக்குச் செடிகள் வேளாண்மைத் துறை மூலமும், சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு ஆகிய பயிர்களுக்கான விதைகள் தேர்ந்தெடுக்கப்படும் தொழில் முனைவர் மூலமும் வழங்கப்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

– மூ.நா.கிருட்டிணசாமி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி




# மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் தமிழகம் முதலிடம்

**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய தொடக்க உரை (9.8.2004)**

“மாண்புமிகு தமிழக அமைச்சர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, காவல்துறைத் தலைவர் அவர்களே, வளர்ச்சிப்பணி ஆணையாளர் அவர்களே, அரசு செயலாளர்களே, துறைத் தலைவர்களே, காவல்துறையின் மூத்த அதிகாரிகளே, காவல்துறை ஆணையாளர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களே மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்களே.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்களின் இந்த ஆண்டு மாநாட்டினைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மாநாட்டினை முன்னரே நடத்த திட்டமிட்டிருந்தேன். ஆனால், இடையில் நாடாளுமன்றத் தேர்தல்கள் வந்துவிட்டதால், மாநாடு நடைபெறும் நாட்களை மாற்ற வேண்டியதாயிற்று. ஆண்டு தோறும் நடத்தப்படுகின்ற இந்த மாநாட்டினை ஒரு வெறும் சடங்காக எடுத்துக் கொள்ளாமல், நாம் ஒன்றாக இணைந்து மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை புரிந்திட இயலும் வகையில், நம்முடைய செயல்பாடு பற்றிய ஒரு உள்முக ஆய்வு நடத்திடவும், புதிய மாறுதல்களைக் கொண்டு வரவும் நமக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பாக இதைக் கருத வேண்டும்.

2. எனது அரசு 2001, மே திங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர், உடனடியாக 2001 ஆகஸ்டு திங்களில் நான் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் முதல் மாநாட்டை நடத்தினேன். அதில் நடப்பியல் உண்மைகளையும் மக்களின் நாட்டங்களையும் கருத்திற்கொண்டு, தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கான உத்திகளை நாம் வகுத்தோம். வறட்சி நிலைமையைச் சந்திக்க வேண்டியிருந்ததால் வறட்சி நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு மக்களுக்கு நிவாரணமும், இடருதவியும் வழங்கிட நான் 2002, ஜூலைத் திங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் சிறப்பு மாநாட்டை நடத்தினேன்.

2002, டிசம்பர் திங்களில் நடத்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறைக்

கண்காணிப்பாளர்களின் அடுத்த மாநாட்டில் சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு, வளர்ச்சிக்கான சிறப்பு முயற்சிகள், நல்லாட்சி ஆகியவற்றிற்கு நான் முக்கியத்துவம் அளித்தேன்.

**3.** நம் முன்னேற்றப்பாதையில் எதிர்ப்பட்ட அசாதாரணத் தடைகளைத் தகர்த்தெறிந்து, தமிழ்நாட்டை, நாட்டிலேயே முதல் மாநிலமாக உருவாக்குவதற்குரிய சரியான சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளோம் என்பதில் நாம் பெருமைப்படலாம். தொடர்ந்து பருவமழை தவறியதால் ஏற்பட்ட சவால்களையும், அதனால் ஏற்பட்ட வறட்சி நிலைமைகளையும் பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மிகவும் கவனத்துடனும், நுட்பமாகவும் கையாண்டுள்ளோம். முந்தைய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட மோசமான நிதி சீர்கேடுகளை வெற்றிகரமாகவும், திறமையாகவும் சமாளித்துள்ளோம். இவை இந்த அரசின் முக்கிய சாதனைகளாகும்; இத்தகைய உறுதியான, சிறப்பான நடவடிக்கையை நான் எடுத்திருக்காவிடில், இம்மாநிலம் மோசமான நிதி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும். இவ்வாறு நடப்பதற்கு ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

இன்று, தமிழ்நாடு அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக அமையும் இலக்கை நோக்கி பீடுநடைபோடத் தொடங்கியுள்ளது என்பதில் நான் மனநிறைவடைகிறேன்.

**4.** உள்ளபடியே நாம் மிகச் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளோம். மழைநீர் சேகரிப்புத் திட்டம், ஊரக வளர்ச்சித் திட்டங்கள், கல்வித் திட்டம் ஆகியவற்றின் செயலாக்கத்தில் தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகிறது. தற்போது அனைத்து மாநிலங்களாலும் பின்பற்றப்பட்டு வரும் இலவச சத்துணவுத் திட்டத்தின் முன்னோடி மாநிலம் தமிழ்நாடுதான். முழுமையான துப்புரவுத் திட்டத்தைச் செயல்படுத்தியதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக ஒளிர்கிறது.

2003ஆம் ஆண்டு மின்–தயார்நிலை அறிக்கையின்படி (e Readiness Report) மிகச் சிறப்பாகச் செயல்படுகின்ற மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

வீடியோ கலந்தாய்வு முறையைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதும் உள்ள நீதிமன்றங்களையும் சிறைச் சாலைகளையும் ஒருங்கிணைக்கும் தொலை–நீதி நிருவாக ஏற்பாட்டிலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. நாட்டில் முதல் முறையாக 1992இல், நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் தொடங்கி வைத்தேன். இன்று அது 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்களாக உயர்ந்து மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. விரைவில் மேலும் 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கும் திட்டமுள்ளது. அனைத்து மகளிர் கமாண்டோ பிரிவையும், அனைத்து மகளிர் காவல் படைப் பிரிவையும் ஏற்படுத்தியதிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. மனித வள மேம்பாட்டிலும் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்து, மனித வள மேம்பாட்டு குறியீட்டில் அனைத்து மாநிலங்களிலும் மூன்றாவது இடத்தில் உள்ளது.

கடந்த காலங்களில் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட நிலையை மாற்றி, கடந்த ஓராண்டில் மட்டும் நெடுஞ்சாலைகள் துறையின் கீழ் வருகின்ற 10,946 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மீண்டும் போடப்பட்டு, தரம் உயர்த்தப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்றாண்டு கால அளவில் நம்முடைய சாதனைகளைப் பட்டியலிடுவதென்றால் அதற்கு நீண்ட நேரம் பிடிக்கும். நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்த அனைத்துத் தடைகளையும் முறியடித்து முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுள்ளோம் என்பது நமக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது.

**5.** நாம் நமது வெற்றிகளைப் பற்றி பேசியே வாளாயிருந்துவிடக் கூடாது. மேலும் நன்முறையில் செயல்படுவதற்கான புதிய அணுகுமுறைகளை ஆராய்ந்து, அவற்றிற்குப் புதிய வடிவம் கொடுப்பதற்கு நமக்குக் கிடைத்த அரியதோர் வாய்ப்பாக இதை எடுத்துக் கொள்ள வேண்டும். சட்டம்–ஒழுங்கைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்கு உத்தரவாதம் அளிக்காவிட்டால் எவ்வித முன்னேற்றத்தையும் அடைய முடியாது.

தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ வேண்டும் என்பதில் நான் எந்தவிதச் சமரசத்திற்கும்





இடங்கொடுத்துவிடக் கூடாது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இது, ஏதோ தற்செயலாக நடந்ததல்ல. அமைதியைச் சீர்குலைக்க முயற்சித்த அனைத்து தீய சக்திகளையும் நாம் திட்டமிட்டு ஒடுக்கியதாலேயே இது சாத்தியமாயிற்று.

மத நல்லிணக்கத்திற்குத் தீங்கு பயக்கும் விரும்பத்தகாத சம்பவங்கள் எவையும் ஏற்படவில்லை. அடிப்படைவாதிகள், மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் நடவடிக்கைகள் முற்றிலும் ஒடுக்கப்பட்டுள்ளன.

2003ஆம் ஆண்டில், காவல்துறையின் பாதுகாப்பில் இருக்கும்போது மரணமடைந்தோரின் எண்ணிக்கையும், காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டினால் மரணமடைந்தோரின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்துள்ளது. கடந்த ஆண்டில் குற்றங்களின் விகிதமும் குறைந்துள்ளது. காவல் படையின் கட்டுப்பாட்டமைதி, முன் எப்போதையும் விட மிகச் சிறப்பாக உள்ளது. நானே நேரடியாக காவலர் குறை தீர்க்கும் நிகழ்ச்சியை, ஐந்து நாட்கள் நடத்தி, 8,395 காவல்துறைப் பணியாளர்களின் குறைகளைக் கேட்டறிந்தேன். இதை, முன்னுதாரணமாகக் கொண்டு, காவல்துறையின் மூத்த அதிகாரிகள் இதுபோன்ற குறை தீர்க்கும் நிகழ்ச்சியைத் தவறாமல் நடத்தி, காவல்துறைப் பணியாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து, உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்து வந்துள்ளனர். இவ்வாறு சரியான முறையில் நடவடிக்கை எடுத்து வந்துள்ள போதிலும், ஒரு சில சம்பவங்களைப் பெரிதுபடுத்தி, சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பதில் மெத்தனப் போக்கு இருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்குவதற்காக ஊடகங்கள் மூலம் திட்டமிட்டு பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

வாய்மையே எப்போதும் வெல்லும். எனினும் வேறு சில சுயநல எண்ணத்துடன் சுயநலவாதிகள் உருவாக்கும் அடாத சூழ்ச்சித் திட்டங்களை நாம் கவனமாக எதிர்நோக்கி சமாளிக்க வேண்டும். சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு என்ற வலுவான அஸ்திவாரத்தின் மீதுதான் வியப்பூட்டும் வீறார்ந்த கலங்கரை விளக்கமாகத் திகழும் 'தமிழ்நாட்டின் வளர்ச்சி' என்ற உன்னத மாளிகையை நிர்மாணிக்க இயலும். இதனை, பின்வரும் திருக்குறள் விளக்குகிறது.

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்."

மனம் கலங்காமல் ஆராய்ந்து, துணிந்து ஏற்ற பணியைச் சோர்வு கொள்ளாமல், காலந்தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

6. கும்பகோணத்தில் அண்மையில் நிகழ்ந்த பயங்கரமான தீ விபத்தில், கொடூரமான முறையில் 94 குழந்தைகள் மாண்டு போன கோரமான தீ விபத்தை நான்

உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன். நெஞ்சை உருக்கும் இந்தப் பயங்கரத் தீ விபத்து, இத்தகைய விபத்துகள் நேராவண்ணம் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான சில அடிப்படை அம்சங்களை நமக்கு உணர்த்துகிறது. கும்பகோணத்தில் நிகழ்ந்த தீ விபத்துக்கான காரணங்களை ஆராய்வதோடு மட்டுமன்றி எடுக்கப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் பரிந்துரைப்பதற்காக, நீதிபதி திரு. கே. சம்பத் அவர்கள் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்றை எனது அரசு அமைத்துள்ளது. விசாரணை ஆணையத்திற்கு, வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்று உதவி புரியும். இதற்கிடையில், அனைத்துப் பள்ளிகளிலும் ஓலை வேய்ந்த கூரைகள் உடனே அகற்றப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மாவட்ட ஆட்சியர்கள் இந்தச் சவாலை ஏற்று, 4,503 பள்ளிகளிலும் ஓலை வேய்ந்த கூரைகள் அகற்றப்படுவதை உறுதி செய்துள்ளனர் என்பதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அரசுப் பள்ளிகள், நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், தீ பிடிக்காத கூரைகளுடன் கூடிய நிரந்தரமான பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட உடனே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அனுமதியளித்தல், தவறாமல் ஆய்வு செய்தல், அதன் பின்னர் உரிய காலத்தில் தொடர் நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றில் விதிகளும், வழிகாட்டிக் குறிப்புகளும் முறையாகப் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் கும்பகோணத்தில் நிகழ்ந்த தீ விபத்து நமக்கு வலியுறுத்துகிறது.

சென்னை மாநகரத்திலும், அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளியிலும் கோயம்புத்தூரிலும் வெடிகுண்டு புரளிகள் கிளப்பப்பட்ட கண்டிக்கத்தக்க சம்பவங்களைத் தொடர்ந்தும், மாநிலம் முழுவதிலும், தொலைபேசி உடைய அனைத்துக் கல்வி நிலையங்களிலும், அனைத்து மருத்துவமனைகளிலும், அரசு அலுவலகங்களிலும், அரசுக் கட்டடங்களிலும் மற்றும் அனைத்து காவல் நிலையங்களிலும் உடனடியாக அழைப்பாளரை அடையாளம் காட்டும் கருவி ("காலர் ஐடி") பொருத்துமாறு நான் உத்தரவிட்டுள்ளேன். இதன் பொருட்டு, 35.86 இலட்சம் ரூபாய்க்கு நான் அனுமதியளித்துள்ளேன். எல்காட் நிறுவனம் இக்கருவிகளை உடனடியாக கொள்முதல் செய்து வழங்கும். பாதுகாப்பு நடவடிக்கைகளின் தரம் குறித்து எவ்விதச் சமரசத்திற்கும் இடங்கொடுக்காம விருப்பதையும், வரையறுக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளைச் சொல்லளவில் மட்டுமல்லாது செயலளவிலும் செயல்படுவதை உறுதி செய்திடும் வகையிலும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் உறுதி செய்ய வேண்டும்.

7. தமிழ்நாடு 2002–2003 மற்றும் 2003–2004ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து வறட்சியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. என்னுடைய அரசு உழவர்களுக்கும் மற்றும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும் அனைத்து வகையிலும் உதவி புரிகிறது. அவர்களின் தேவையறிந்து தக்க தருணத்தில் உதவியும், உணவும் வழங்கி வருகிறது.

ஒவ்வொரு நிலையிலும் என்னுடைய முழுமனதுடன் கூடிய தலையீடு இல்லாது இருந்திருக்குமாயின் தமிழ்நாட்டில் உள்ள உழவர்கள் மற்றும் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களைத் தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியின் பாதிப்பினால் ஏற்பட்ட வேதனையிலிருந்து மீட்டிருக்க முடியாது. ஏழைகள் மற்றும் வறியவர்களுக்குப் பரவலான பயன்கள் கிடைக்கும் வகையில் வறட்சி நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு நிலையிலும் மாவட்ட ஆட்சியர்கள் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளுக்காக, நான் அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

தென்மேற்குப் பருவம் இன்னும் முடியவில்லை. நிலைமையை நாம் மதிப்பிட வேண்டும். சில மாவட்டங்களில் போதுமான அளவிற்கு மழை பொழியவில்லை. கள நிலைமையையும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

8. 2001ஆம் ஆண்டு மே திங்களில் எனது அரசு பதவியேற்ற போது நிதிச் சீரழிவு மற்றும் மந்தமான வளர்ச்சி என்ற படுகுழியில் வீழ்ந்து கிடந்த தமிழ்நாட்டை மீட்டு மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வந்துள்ளோம். 2001–2002ஆம் ஆண்டில் ரூ.5,200 கோடியாக இருந்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, 2004–2005ஆம் ஆண்டில் ரூ.8,001 கோடியாக

அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தை மீண்டும் விரைவான வளர்ச்சிப் பாதையை நோக்கி இட்டுச் செல்ல நாம் எடுத்த உறுதியான நடவடிக்கையின் பயனாகவே இது சாத்தியமாயிற்று. இம்மாநிலத்திற்காக தொலைநோக்குடன் நான் செய்துள்ள பெருமளவிலான திட்ட ஒதுக்கீடு அனைத்துத் துறைகளிலும், குறிப்பாக மனித வள மேம்பாட்டுத் துறையில் தமிழ்நாடு வளர்ச்சியடைவதை உறுதி செய்யும். இவ்வாறாக, மற்ற எல்லா மாநிலங்களையும்விட முன்னதாக புத்தாயிரம் ஆண்டின் வளர்ச்சி இலக்குகளை எய்த வேண்டுமென்ற நோக்குடன் சுகாதாரம், சத்துணவு, கல்வி மற்றும் சமூக நலன் ஆகியவை குறித்து நமது திட்ட ஒதுக்கீட்டில் தனி கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

9.பயன்கள் கண்கூடாக மக்களைச் சென்றடைந்தால் தான், பொதுமக்களுக்காகப் பெருமளவு ஒதுக்கீடுகளுடன் திட்டங்களையும் திட்டப் பணிகளையும் செயற்படுத்துவதில் பொருளிருக்கும். இத்தகைய நிலைகளில் மாவட்ட ஆட்சியர்களின் பங்கு பணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒவ்வொரு வளர்ச்சித் திட்டத்திலும் பொதுமக்கள் முழு அளவில் பங்கேற்பது உறுதி செய்ய வேண்டும். பொதுமக்கள், முக்கியமான பயனாளிகள் என்ற முறையில், கிராம சபைகளில் பங்கேற்பதை ஊக்குவித்துத் தங்களுடைய விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ள உதவ வேண்டும். இங்குதான் ஒரு நல்லாட்சிக்கான நடைமுறைகளின் வீச்சு முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த மாநாட்டில் கூட, நல்லாட்சி ஆளுகை நடைமுறைகள் குறித்து நான் வலியுறுத்தினேன். வெறுமனே நிதிகளை அல்லது திட்ட முதலீடுகளை ஒதுக்கீடு செய்வது மட்டுமே போதாது என்பது தற்போது மிகவும் தெளிவாகிறது. ஏழை எளிய மக்கள் அதிகபட்சம் பயன் பெறுகின்ற வகையில் இந்த நிதியைப் பயன்படுத்தும் முறைதான் நாம் விரும்புகிற வளர்ச்சி வேகத்தை எட்டுவதற்கான வழியாகும்.

10. தேவையை உணர்த்துகின்ற ஒவ்வொரு மனுவும், கவனமுடனும், கனிவுடனும் பரிசீலிக்கப்பட்டு மனுதாரருக்கு எவ்வாறெல்லாம் உதவ முடியும் என்பது குறித்து ஆக்கபூர்வமாகப் பரிசீலிக்கப்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

வெறும் மனுக்களின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு, அதிக எண்ணிக்கையிலான மனுக்களுக்குத் தீர்வு கண்டுவிட்டதாகப் புள்ளி விவரம் அளிப்பது மிகவும் எளிதான வேலை. ஒவ்வொரு மனுவின் பின்னணியிலும் உதவி தேவைப்படக் கூடிய ஒரு நபர் இருக்கிறார் என்ற உண்மையை உணர்ந்து மாவட்ட ஆட்சியர்கள் செயல்பட வேண்டும். இப்பணியில் மாவட்ட நிருவாகம் காட்டும் பரிவுடன் கூடிய புரிதலும், ஆர்வமுமே ஓர் அரசின் நற்பெயருக்கு அச்சாணியாக விளங்குகின்றன.

ஏழைகளின் நலன் நோக்கிலான இத்தகைய புனிதமானப் பணிக்கு ஊக்கமும், உத்வேகமும் ஊட்டுவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமைப் பணி மிகவும் முக்கியம் வாய்ந்ததென நான் கருதுகிறேன்.

11. தகவல் தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் பயனாக பணிகளில் விரைவு ஏற்பட்டுள்ளது. மக்களின் குறைகளையும் செவ்வனே தீர்க்க முடிகிறது. இந்த ஆண்டில் வரவு–செலவு திட்டத்தில் ரூ.58.10 கோடி முதலீட்டுச் செலவில் மாபெரும் மின்னாளுகைத் திட்டம் ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளேன். இது பொதுமக்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள 10 அரசுத் துறைகள் ஆற்றும் பணிகள் எவ்விதமான தொய்வும், சுணக்கமுமின்றி நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டுமென்ற குறிப்பான நோக்கத்துடன்தான் நான் இத் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன்.

இந்தத் துறைகள் அனைத்திலும் விரிவானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பயன்கள் மக்களை விரைவில் சென்றடைவதை உறுதி செய்வதே நம்முடைய முயற்சியாக இருக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள், இந்தச் சிறப்பு முயற்சிகள் பற்றி நன்கு தெரிந்து வைத்துக் கொண்டு, அவரவர் மாவட்டங்களில் இவை சரியான முறையில் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த நல்லாட்சி நடைமுறைகள், குறிப்பாக, மின் ஆளுகை, அனைத்து வளர்ச்சிப் பணி, சிறப்பு முயற்சிகளுக்கும் குறிப்பாக நிருவாகப் பணிகளுக்கும் பொருந்தும் என்பதால், இது பற்றி இங்கு விரிவாக எடுத்துரைத்தேன்.

12. நாம் அதிக கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான பிரச்சினைகள் குறித்து இப்பொழுது காண்போம். உணவுப் பாதுகாப்பு இவ்வரசின் மிக முக்கியமானதொரு குறிக்கோளாகும். தமிழ்நாடு இன்றைக்கு நாட்டிலேயே மிகச் சிறப்பான பொது விநியோக ஏற்பாட்டு முறையைக் கொண்டுள்ளது. இது பல்வேறு ஆய்வுகளிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தேவைகள் உள்ள ஒவ்வொரு குடும்பமும் இந்த பொது விநியோக ஏற்பாட்டு முறையின் கீழ் கொண்டுவரப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டிய அதே நேரத்தில், இந்த ஏற்பாட்டு முறையைத் தவறாகப் பயன்படுத்தக் கூடிய சமூக விரோத சக்திகளைத் தடுக்க வேண்டியதும் அவசியமாகிறது. பொது விநியோக ஏற்பாட்டு முறையின் கீழ் வராத, ஆனால் அதன் கீழ் கொண்டுவரப்பட வேண்டிய நிலைமையிலுள்ள குடும்பங்கள் அனைத்தையும் இந்த ஏற்பாட்டு முறையின் கீழ் கொண்டுவரத் தக்க வகையில் இதனை விரிவுபடுத்த நான் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளேன். தமிழ்நாட்டில் மட்டுமே ஒவ்வொரு மாதமும் ஒரு கிலோ ரூ.3.50 என்ற விலையில் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இந்தியா முழுமையிலும் இதுதான் மிகமிகக் குறைந்த விலையாகும்.

குடும்ப அட்டை வழங்கப்படாத, ஆனால் உண்மையிலேயே குடும்ப அட்டை தேவைப்படும் குடும்பங்களைச் சேர்க்கவும், போலி குடும்ப அட்டைகளை ஒழிக்கவும், முனைப்பார்வத்துடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொது விநியோக கடைகளுக்கு உரிய காலநேரத்தில் பொருள்களை வழங்கவும், பொதுமக்களுக்குச் சரியான எடையில் பொருட்கள் வழங்கப்படுவதையும், பொதுமக்களுக்குச் சிறந்த சேவையையும் புரிதல் உறுதி செய்வதற்காகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட நிருவாகத்தை முடுக்கி விட வேண்டும்.

13. தமிழ்நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கியமான பிரச்சினையே தண்ணீர்ப் பற்றாக்குறையை எவ்வாறு சமாளிப்பது என்பதுதான். இந்நாட்டில் தனி நபருக்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவு மிகக் குறைவாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும். நதிகளை இணைப்பதுதான் இதற்கு அறுதியான தீர்வாக அமையும் என்ற போதிலும் குறைவான நீரே கிடைக்கின்ற உண்மையை உள்வாங்கிக் கொண்டு, விரைந்த வேளாண்மை வளர்ச்சியை எட்ட நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டுதான், நான் காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு போன்ற சாகுபடிக்குக் குறைந்த நீரே தேவைப்படுகின்ற பயிர்களை ஊக்குவிக்க ஒரு திட்டத்தை தொடங்கி வைத்தேன். இப்பயிர்களிலிருந்து உயிரி எரிபொருள் உற்பத்தி செய்வதற்கான செய்முறை தளவாடங்களை அமைக்குமாறு பெரும் தொழில் நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன. விரைவில் இது முடிவு செய்யப்படும். சாகுபடிக்குக் குறைந்த நீரே தேவைப்படுகின்ற இப்பயிர்களைப் பயிரிடுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்துவதற்கு இத்தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்ய வேண்டும். இத்தொழில் நிறுவனங்கள் விவசாயிகளுடன் பண்ணைத் தொழில் ஒப்பந்தம் செய்து கொள்ளும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்படுவதை உறுதி செய்வதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும்.

14. வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்கு பாசனம் மிக முக்கியம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. தமிழ்நாடு போன்ற தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் மாநிலத்தில், மழைநீர் சேகரிப்பு மிக முக்கியமானதாகிறது. என்னுடைய உத்தரவுகளின் பேரில் கடந்த ஆண்டு நிறுவப்பட்ட மழைநீர் சேகரிப்பு அமைப்புகளினால் சிறந்த பயன் கிட்டியுள்ளது. இந்த இயக்கம் அனைத்து ஊரகப் பகுதிகளிலுள்ள பாசன அமைப்புகளிலும் பின்பற்றப்பட வேண்டும். இது நீர் வரத்துப்பகுதி அடிப்படையில் செயற்படுத்தப்பட வேண்டும். வளமான வேளாண்மைக்கு வழி வகுக்கும் சிறந்த பாசனத்தைப் பெற ஏதுவாக மழை நீர் சேகரிப்பு திட்டத்தின் அடிப்படையில் பெரும் நீர்வரத்துத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் வேளாண்மைத் துறையும் ஊரக வளர்ச்சித் துறையும் இணைந்து செயல்பட வேண்டும்.

15. அடுத்தடுத்து ஏற்பட்டு வரும் வறட்சியின் காரணமாக விளைந்த பாதிப்புகளைப் புறந்தள்ளி பண்ணைத் துறைக்கு புத்துயிர் அளிக்கப்பட வேண்டும். நடப்பு தென்மேற்குப் பருவக் காலத்தில், புதிய பயிர்களை நடுவதற்கு, விவசாயிகளுக்கு ஏதுவாக கடன் வசதி அளிக்கப்பட வேண்டும். வரும் பருவக் காலத்தில் விவசாயிகளுக்கு ரூ.1,037 கோடி வரை பயிர் கடன் வசதி

அளிக்க ஏதுவான வகையில், கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டங்களை நான் அண்மைக் காலத்தில் அறிவித்திருக்கிறேன். விவசாயிகள் நடப்புப் பருவக் காலத்தில் சாகுபடி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக அவர்களுக்குக் கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அல்லது வணிக வங்கிகளிடமிருந்து புதிய கடன் கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு, மாவட்ட ஆட்சியர்கள் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

16. பெண்களுக்கு வாய்ப்பு அளித்தால், ஆண்களைக் காட்டிலும் சிறந்த முறையில் செயலாற்றி வெற்றியடைவார்கள் என்பதை என்னுடைய தலைமையில், தமிழ்நாட்டுப் பெண்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். 1992ஆம் ஆண்டில் நான் தொடங்கி வைத்த மகளிர் சுயஉதவிக் குழு, அரும்பாகி, வளர்ந்து, ஆலமரமாகத் தழைத்தோங்கி பல ஆயிரம் விழுதுகளுக்கு ஒப்பான புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்களாக உருவெடுத்துள்ளது. இன்றைக்கு, 28,91,267 பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட 1,70,802 சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுடைய மொத்த சேமிப்புத் தொகை ரூ.469.33 கோடியை எட்டியுள்ளது. அவர்கள் பெற்றுள்ள கடன் தொகை ரூ.767.89 கோடி ஆகும். உள்ளபடியே, இது நாம் எண்ணி எண்ணி இறும்பூது எய்தத் தக்க அளப்பரிய சாதனையாகும். இந்த வலுவான அடித்தளத்தின் மீது தான் நாம் கட்டுமானத்தை எழுப்ப வேண்டும். கடன் வசதிகளை மேம்படுத்தி அங்காடி நிலவரத்திற்கேற்ப பொருளாதார நடவடிக்கைகளையும் நாம் முடுக்கிவிட வேண்டும். அங்காடி வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும். இவை குறித்து, வங்கியாளர்கள் மற்றும் வளர்ச்சித் துறைகளுடனான கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர்கள் முழுமையாக எடுத்துரைக்க வேண்டும். மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த புதிய வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கிலான நமது தேடுதல், அங்காடி நிலவரம் சார்ந்த தொலைநோக்கின் அடிப்படையிலானதாக இருக்க வேண்டும்.

17. இதுகாறும், மகளிர் சுயஉதவிக் குழுக்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. வேலையில்லாப் பிரச்சினையையும் அதன் காரணமாக ஏற்படக் கூடிய சமூகப் பிரச்சினையையும் தீர்க்க, வேலைவாய்ப்பில்லாத, குறிப்பாக, கிராமப் பகுதிகளில் உள்ள இளைஞர்களைக் கொண்டு, சுயஉதவிக் குழுக்கள் அமைப்பதில், மாவட்ட ஆட்சியர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

18. நாம் பல முக்கியப் பிரச்சினைகளை விவாதிக்க வேண்டியுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டுமென மக்கள் இவ்வரசுக்கு ஆணையிட்டுள்ளார்கள். நம் மீது சுமத்தப்பட்டுள்ள இப்பொறுப்பினை முழுவதுமாகச் செயல்படுத்துவதில், மாவட்ட நிருவாகம் எங்களுக்கு உதவ வேண்டும். இதற்கு, சாதரணமாக மேற்கொள்ளப்படும் மேலோட்டமான முயற்சிகள் பலனளிக்கா. எனவே, மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் பாராட்டத்தக்க பயன்களை அளித்துள்ள சிறந்த நடவடிக்கைகளை நோக்கி, சாதனையில் புதிய சிகரத்தை எட்ட முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்''.

## 10.8.2004 அன்று நடைபெற்ற காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

"மாண்புமிகு தமிழக அமைச்சர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே, வளர்ச்சிப்பணி ஆணையர் அவர்களே, உள்துறைச் செயலாளர் அவர்களே, முதுநிலை காவல்துறை அதிகாரிகளே.

வரும் ஆண்டில், சீரிய முறையில் செயலாற்றி புதிய சிகரத்தை எட்டும் பொருட்டு நமது பணிகள் பற்றி மறுஆய்வு செய்து, உள்முக ஆய்வினை மேற்கொண்டு, புதிய வழிமுறைகளை வகுப்பதற்காக கூட்டப்பட்டுள்ள காவல்துறை அதிகாரிகளின் இந்தத் தனி மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

2. உங்களுடைய தளராத ஒத்துழைப்புடன் நான் நிலை நாட்டிய சிறந்த சட்ட–ஒழுங்கு நிலைமை நமது சாதனையின் ஒரு புதிய சிகரமாகும். இச்சாதனை இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்ற நற்பெயரை உலக

அளவில் நமக்கு ஈட்டித் தந்துள்ளது. சீரிய இச்சாதனை, நுணுக்கமான உளவுத் தகவல், உன்னிப்பான திட்டமிடல், விடா முயற்சியுடன் கூடிய செயலாக்கம், தக்க நேரத்திலான தொடர் நடவடிக்கை ஆகியவற்றின் மூலம் தொடர்ந்து கட்டிக் காக்கப்பட வேண்டும். பலதரப்பட்ட சுயநலவாதிகள், தவறாக வழி நடத்தப்பட்ட கூட்டத்தினர், பிரச்சினையை வேண்டுமென்றே உருவாக்குபவர்கள் ஆகியோர் எவ்வகையிலேனும் பெருமைக்குரிய இச்சாதனைக்குக் களங்கம் உண்டாக்கிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் அமைதியைக் குலைத்து, பிரச்சினைகளைத் தூண்டுவதான தங்களுடைய கொடிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவர்கள் எந்த அளவுக்கும் இறங்குவர். அண்மையில், சென்னை, கோயம்புத்தூர், மற்றும் சில இடங்களில் பல்வேறு பள்ளிகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட வெடிகுண்டு புரளி காரணமாக பள்ளிக் குழந்தைகள் உடனடியாகப் பள்ளியை விட்டு வெளியேற்றப்பட்டதும், அக்குழப்பத்தில் சில குழந்தைகளுக்குக் கடுமையான காயங்கள் ஏற்பட்டதும், இந்த விஷமிகள் சட்டம்–ஒழுங்கைக் குலைப்பதில் எந்த அளவுக்குக் கீழே இறங்குவார்கள் என்பதற்குச் சான்று பகர்கின்றன. எப்போதும் விழிப்புடன் இருப்பதுதான் நமது தாரக மந்திரமாக இருக்க வேண்டும். சாதாரணமாகத் தெரிகிற விஷயத்தின் பின்னணியில் கூட பயங்கர சதி இருக்கக் கூடும் என்பதால், கிடைக்கும் ஒரு துண்டுத் தகவலையும் கூட அலட்சியம் செய்யாமல் மிகவும் விழிப்புடன் ஆராய வேண்டும் என்று காவல்துறை அதிகாரி ஒவ்வொருவரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஆற்றும் இச்சிறந்த பணியைத் தொய்வின்றித் தொடருவீர்கள் என்றும், நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு பணியிலும் உங்கள் முன்னேற்றத்தின் முத்திரையைப் பதிப்பீர்கள் என்றும் நான் உளமார நம்புகிறேன்.

**3.** பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், அடிப்படை வாதிகள் குறித்து நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதச் சுணக்கத்தையும் என்னால் சகித்துக் கொள்ள முடியாது என்பதை நீங்கள் அனைவரும் நன்கறிவீர். பயங்கரவாத கும்பல்களும், அடிப்படைவாத சக்திகளும் ஒரு கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளார்கள். அனைத்து முக்கியமான பயங்கரவாத அமைப்புகளையும், அவர்களைச் சார்ந்துள்ள துணைக் குழுக்களையும் என்னுடைய அரசு தடை செய்துள்ளது. இவற்றிலிருந்து பிரிந்த சிறு குழுக்கள் கூட செயலிழந்துவிட்டன. இம்மாநில மக்களிடத்தில் நாம் பாதுகாப்பான, அமைதியான சூழலில் வாழ்ந்து வருவதாக ஒரு நிம்மதி நிலவுகிறது. இதனால் அவர்கள் தங்களுடைய சொந்தப் பணிகளை எவ்வித அச்சமோ, பதற்றமோ இன்றி ஆற்ற முடிகிறது. தீய எண்ணங்கொண்ட பல விஷமிகள் நம்மிடையே இருக்கின்றார்கள்; இவர்கள் நம் சாதனையைக் கண்டு பொறாமையுற்று, இந்த அரசின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாக்க எதுவேண்டு மானாலும் செய்வார்கள்.

**4. 1.7.2004** அன்று வீடியோ கலந்தாய்வு தொலை–நீதி முறைமையைத் தொடங்கி வைத்ததன் வாயிலாக, பாதுகாப்பு ஏற்பாட்டு முறைகளை நிலைகுலையச் செய்யும் பயங்கரவாதிகளின் செயல்பாட்டை ஒடுக்கும் உங்களுடைய திறமையை நான் மேலும் அதிகரித்து கூடுதல் வலு சேர்த்துள்ளேன். இந்த ஏற்பாட்டின் வாயிலாக ரூ.**8.61** கோடி செலவில், மாநிலத்தில் உள்ள **78** இடங்களில், **270** நீதிமன்றங்களுடன் **11** சிறைச்சாலைகள் இணைக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதையும் உள்ளடக்குகின்ற இந்த வசதி நாட்டிலேயே முதன் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், சிறைக் கைதிகளுக்குப் பாதுகாப்பளித்து அவர்களை நீதிமன்றங்களில், நீதித்துறை மாஜிஸ்திரேட்டுகள் முன்னிலையில் ஆஜர்படுத்துவது போன்ற இடைஞ்சலான நடைமுறைகள் இல்லாது ஒழிகின்றன. இது கைதிகளை அழைத்துச் செல்லும் போது அவர்கள் தப்பி விடுவதற்கான வாய்ப்பு, சிறை வளாகங்களுக்குள் கள்ளத்தனமாக கடத்தல் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு மற்றும் நீதிமன்றங்களில் பெருமளவில் கூட்டம் கூடுவதற்கான வாய்ப்பு ஆகியவற்றையும் ஒழித்துவிட்டது. இதனால், ஆண்டொன்றுக்கு ரூ.**10.69** கோடி மீதமும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறாக, பயங்கரவாதத்துக்கு எதிரான நமது யுத்தத்தில், நாம் எப்போதும் ஒரு படி முன்னிலையிலேயே இருப்பதை நான் உறுதி செய்துள்ளேன். **2002**ஆம் ஆண்டில், நான் தொடங்கி வைத்த, காவல் படையைப் பெருமளவில் நவீனப்படுத்தும் திட்டமும், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்த யுத்தத்தில், அதிநவீன தொழில்நுட்பத்தை நீங்கள் பயன்படுத்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

தீவிரவாதம், பயங்கரவாதம் மற்றும் அடிப்படைவாதம் ஆகியவற்றை வேரோடு களைந்து முறியடிப்பதற்கான முயற்சியில் யாதொரு தொய்வு ஏற்பட்டாலும், அதனை நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்ற தகவலை மீண்டும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

5. சமுதாய நல்லிணக்கத்தை முழு அளவில் சிறப்பாகப் பராமரிப்பதில் தமிழ்நாடு தனிச்சிறப்புப் பெற்று விளங்குகிறது. இந்த வகையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன் மாதிரியாக விளங்குகிறது. 2003–2004ஆம் ஆண்டுகளில் சமுதாய நல்லிணக்கம் முழுமையாக நன்கு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. சமுதாய மோதல்களைத் தூண்டிவிட முயற்சி செய்கிற, தீய சக்திகளைத் தீவிரமாகக் கண்காணித்து, கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும் என்ற என்னுடைய உத்தரவுகளை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சமுதாய அமைதியின்மை தொடர்பான ஒரு சில சிறு சம்பவங்களே நடைபெற்றுள்ளன. காவல்துறையினர் உரிய நேரத்தில் தடுப்பு நடவடிக்கை எடுத்ததனால், பெரிய அளவில் ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு சில சாதி மோதல்கள் தடுக்கப்பட்டன. சட்டம்–ஒழுங்கு திறம்பட பராமரிக்கப்பட்டது. இந்த முயற்சிக்காகக் காவல்துறை அதிகாரிகள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். இத்தகைய நற்பணியை நீங்கள் தொடர்ந்து ஆற்றவேண்டும் என நான் விரும்புகிறேன்.

6. முந்தைய சந்தர்ப்பங்களில், காவல்துறை காவலில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் குறித்து நான் என்னுடைய கவலையைத் தெரிவித்துள்ளேன். இது தொடர்பாக காவல் படையினரை நெறிப்படுத்த நாம் எடுத்த முயற்சிகள் பயனளித்து வருகின்றன என்பதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 2003ஆம் ஆண்டில் காவல்துறை காவலில் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. மனித உரிமை அமைப்புகள் இந்தச் சாதனையை நிச்சயமாகப் பாராட்ட வேண்டும். இருப்பினும் நாம் சாதனை களிப்பில் வாளாவிருந்துவிடலாகாது. இம்மாநிலத்தின் காவல் படை மனித உரிமைகளை இடைவிடாது பேணி காப்பதன் மூலமும், காவல்துறை காவலில் நிகழும் வன்முறை களையப்படுவதன் மூலமும் நாட்டின் எஞ்சிய மாநிலங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும்.

7. ஒவ்வொரு துறையிலும் மகளிர் சிறப்பாக விரைந்து முன்னேற வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்த வகையில் பல்வேறு சிறப்பு முயற்சிகளை நான் எடுத்துள்ளேன் என்பதும் உங்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்திருக்கும். மகளிர் மட்டும் இடம் பெற்றிருக்கக் கூடிய அதிரடிப்படை பிரிவு ஒன்றை முதன்முறையாகத் தொடங்கிவைத்துள்ளேன். மற்றும் மகளிர்க்கென்று தனி காவல்படைப் பிரிவு ஒன்றையும் நான் தொடங்கி வைத்துள்ளேன்; இந்த வகையான அனைத்து மகளிர் படைப் பிரிவுகளை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது.

8. இந்த ஆண்டில் 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு நான் அனுமதி வழங்கியுள்ளேன். இத்துடன் சேர்த்து இம்மாநிலத்தில் 188 மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 7 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு இப்போதுதான் அனுமதி வழங்கியுள்ளேன். இவற்றையும் சேர்த்துப் பார்க்கையில் காவல்துறையில் உள்ள அனைத்து காவல்துறை உட்கோட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைந்திருக்கும். இந்த வகையில், நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்கும்.

9. என்னுடைய உத்தரவுகளின் பேரில் ஒவ்வொரு வட்ட அளவிலான காவல் நிலையத்திலும், ஒரு பெண் காவல்துறை உதவி ஆய்வாளரும், 2 பெண் காவலர்களும் பணியமர்த்தப்படுகின்றனர். மேலும், இந்த ஏற்பாடு தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று நான் ஆணையிட்டுள்ளேன். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சேர்ப்புப் பணி முடிந்தவுடன், ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு பெண் காவல்துறை உதவி ஆய்வாளர் தலைமையில் மகளிர் காவல் பிரிவு இருக்கும்.

10. காவல் துறையினர், மனித நேயமுடையவர்களாகவும், நலம் நாடுபவர்களாகவும், அனுதாபமும், இரக்கக் குணமும் உடையவர்களாகவும், மக்களுக்கு, குறிப்பாக, பெண்களுக்கு ஆபத்துகால நண்பர்களாகவும், ஆலோசகர்களாகவும் இருக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்துவதற்காகத்தான் மகளிரைக் காவல்துறையில் பணியமர்த்துவதற்கு நான்

மிகவும் முக்கியத்துவம் அளித்து வருகிறேன். மகளிர் தங்கள் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை எதிர்நோக்கித்தான், காவல் நிலையத்தை அணுகுகின்றனர்; மேலும், அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டியதன் தேவையை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். ஆலோசனைகள், வழிகாட்டுதல்களுடன் அவர்களது புகார்களின் பேரில் குற்றவாளிகளைப் பிடித்து உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் மகளிர் விரும்புகின்றனர். எனவே, இத்தகைய மகளிருக்கு எதிரான அனைத்துக் குற்றங்களையும் களைவதற்கு ஒட்டுமொத்த காவல்துறையும் புரிந்துணர்வுடனும் பொறுப்புடனும் பாடுபடவேண்டியது அவசியமாகிறது.

**11. 2001** மே திங்களில் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து, மாநிலத்தில் குற்றங்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. எனினும், ஒன்று அல்லது இரண்டு சம்பவங்களை ஊதிப் பெரிதாக்கித் திட்டமிட்டு, ஒன்று சேர்த்துப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. மாநிலத்தில் குற்றத்தின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பதையும், குற்றங்களின் கண்டுபிடிப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பதையும், கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு அதிகரித்துள்ளது என்பதையும் உண்மை நிலவரங்கள் தெளிவாக்கியுள்ளன. எந்த வகையைச் சேர்ந்த குற்றங்களை எடுத்துக் கொண்டாலும், அது சொத்து சம்பந்தப்பட்ட குற்றமாக இருந்தாலும் சரி, வன்முறை சம்பந்தப்பட்ட குற்றமாக இருந்தாலும் சரி, மகளிருக்கு எதிரான குற்றமாக இருந்தாலும் சரி அல்லது ஏனைய குற்றங்களாக இருந்தாலும் சரி, 2004 ஜூன் வரையில் ஏற்பட்ட அத்தகைய நிகழ்வுகளின் எண்ணிக்கை 2003, ஜூன் வரையில் இருந்ததை விடக் குறைவே. 2004 ஜூன் வரையில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் சதவிகிதம் 76 சதவிகிதத்தை எட்டியுள்ளது; இது முந்தைய ஆண்டில் 69 சதவிகிதமாக இருந்தது. சொத்துக்கள் மீட்கப்பட்ட இனங்களின் சதவிகிதம் 2004 ஜூன் வரையில் 73 சதவிகிதத்தை எட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டில் 65 சதவிகிதமாக இருந்தது. குற்றங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் 1 இலட்சம் மக்கள் தொகைக்கு 266.2 ஆக இருந்தது. 2003ஆம் ஆண்டில் இது 248.71 ஆகவும், நடப்பு ஆண்டின் 2004 ஜூன் வரையிலான முதல் ஆறு மாதங்களில் 245ஆகவும் குறைந்துள்ளது. இந்த உண்மையை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

**12.** எண்ணிக்கைகளுக்கு அப்பாற்பட்டு, இது தொடர்பாக முன்பு நான் தெரிவித்ததையே மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். குற்றங்களை முழுமையாக புலனாய்வு செய்து, கண்டறிந்து, இறுதியாக குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுத்தருவதில்தான், குற்றங்களைக் கட்டுப்படுத்துவதன் வெற்றி அடங்கியிருக்கிறது. தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் உதவியுடன் குற்ற நிகழ்வுகளின் பாங்குகள் மற்றும் குற்றங்கள் தொடர்பான முந்தைய புள்ளி விவரங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து, அவற்றின் விவரங்களை அறிந்து, தங்களது பணியைத் திட்டமிட்டுக் கொள்ள காவல் நிலையத்திற்கு சாத்தியமாகிறது. வழக்கமாகக் குற்றம் புரிபவர்கள் மீதும் திட்டமிட்டு குற்றங்களில் ஈடுபடுகின்ற கும்பல்கள் மீதும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**13. 1991–1996**ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட கால அளவில் முதல்முறையாக நான் முதலமைச்சராக இருந்தபோது, நெடுஞ்சாலை ரோந்து உருவாக்கப்பட்டது. ஆனால், அடுத்து வந்த அரசு அதைச் செயல்படுத்தவில்லை. மீண்டும் 2001 மே திங்களில் ஆட்சிப் பொறுப்பேற்றபின் அதனை மீண்டும் செயல்படுத்த நான் ஆணையிட்டேன். 2002 நவம்பரில் அவசர கால விபத்து – நிவாரண மையங்களை நான் தொடங்கிவைத்தேன். நெடுஞ்சாலை ரோந்துப் பணியை விரிவுபடுத்தி, அவசர கால விபத்து நிவாரண மையங்களுடன் அவற்றை ஒருங்கிணைக்க நான் ஆணையிட்டேன். ஒருங்கிணைக்கப்பட்ட இந்தப் புதிய திட்டத்தை 22.8.2003 அன்று நான் தொடங்கிவைத்தேன். தேசிய நெடுஞ்சாலைகளில் அடிக்கடி விபத்து நடக்கக்கூடிய எண்பது விபத்து பகுதிகளில் நவீன கருவிகள் பொருத்தப்பட்ட 80 புதிய நெடுஞ்சாலை ரோந்து வண்டிகள் 24 மணி நேரமும் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றன. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபின், இந்த இடங்களில் நெடுஞ்சாலை விபத்து உயிரிழப்பு 27 சதவிகிதம் குறைந்துள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். 2004 ஜூன் இறுதிவரையிலான கால அளவில் விபத்துக்களின் எண்ணிக்கையும் 28 சதவிகிதம் குறைந்துள்ளது. நெடுஞ்சாலை ரோந்துக் காவல் படையுடன் இணைந்து செயல்படுகிற அவசர கால விபத்து நிவாரண மையங்கள் உரிய காலத்தில் தலையிட்டு, சாலை விபத்துகளால் பாதிக்கப்

பட்டோருக்கு மருத்துவ சிகிச்சை அளித்ததன் மூலம், 2002 நவம்பர் திங்கள் முதல் 2004 மே திங்கள் வரையிலான கால அளவில், சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்ட 9,395 பேரின் உயிரைக் காக்க முடிந்ததை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் வாயிலாகவும், பாரபட்சமின்றி சட்டத்தைச் செயல்படுத்துவதன் வாயிலாகவும் காவல் துறையினர் மேலும் திறம்படச் செயல்பட வேண்டியுள்ளது. போதையில் வண்டிகளை ஓட்டுதல், அசட்டை துணிச்சலுடன் விரைவாக வண்டி ஓட்டுதல் போன்ற இரட்டை அபாயங்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

14. கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதும், கள்ளச் சாராயம் விற்பனை செய்வதும் சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கின்ற, உறுதியாக ஒழிக்கப்பட வேண்டிய கேடுகளாகும். குற்றவாளிகள் பற்றிய தகவலைச் சேகரித்தல், திடீர் சோதனை செய்தல், குற்றவாளிகளைப் பிடித்தல் ஆகியவற்றில் (வழக்கமான) காவல் படையினர், மதுவிலக்கு பிரிவு, வருவாய் நிருவாகம் ஆகியவற்றுக்கிடையே அதிக ஒருங்கிணைப்பு இருக்க வேண்டியது அவசியமாகும். கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும் கள்ளச் சாராயம் விநியோகம் செய்வதையும் அடியோடு ஒழிக்க, காவல்துறை கண்காணிப்பாளர்கள் சிலர் மாபெரும் முயற்சி மேற்கொண்டதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதனை ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு அனைத்து காவல் துறை கண்காணிப்பாளர்களும் செயல்பட வேண்டும். ஒவ்வொரு நிலைய அலுவலக அதிகாரியும், அவருடைய அதிகார வரம்பின் கீழ் உள்ள பகுதி, "கள்ளச்சாராய நடமாட்டம் அற்ற பகுதி" என்று அறிவிக்கப்படும் வகையில் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

15. எல்லா இடங்களிலும் போதை மருந்துகளின் கள்ளத்தனமான வியாபாரமும், தடை செய்யப்பட்ட பொருட்களின் பயன்பாடும் பெருகி வருவதை கருத்திற்கொண்டு, இது தொடர்பாக தீவிர கண்காணிப்புச் செலுத்த வேண்டியது அவசியமாகியுள்ளது. அவ்வாறே, உயர் தொழில்நுட்ப கேளிக்கை நிறைந்த இந்த யுகத்தில், வீடியோ திருட்டு, மிகப் பெரிய அளவில் நடைபெறுகிறது. இந்தக் கேட்டினை ஒழிக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எனவே, தற்போது உருவெடுத்து வருகின்ற இக்கேட்டினை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதற்காகப் போதை மருந்துகள் மற்றும் வீடியோ திருட்டுப் புலனாய்வு சிறப்புப் பிரிவுகள் தக்கவாறு வலுப்படுத்தப்பட்டுள்ளன.

16. ஆயுதங்கள், சாதனம் மற்றும் நவீனமயமாக்கப்பட்ட தகவல் தொடர்பு வசதிகள் ஆகியவற்றுடன், நமது காவல் படையை, நாட்டிலேயே மிக நவீனமான காவல்படையாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தை நான் எப்போதுமே வலியுறுத்தி வந்துள்ளேன். 2001–2003 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் ரூ.272.4 கோடி செலவில் காவல் படையை நவீனமயமாக்கும் திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன். 2003–2004ஆம் ஆண்டில் நவீனமயமாக்கும் திட்டப் பணிகளுக்காக நான் ரூ.89.14 கோடி அனுமதித்துள்ளேன். இத்திட்டங்கள், செயல்பாட்டின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

17. நமக்குப் பாதுகாப்புக்காகத் தனியே நின்று, ஒவ்வொரு முறைக் காவலிலும் விழிப்புடன் பணியாற்றுகின்ற ஒவ்வொரு காவலரின் நலன் குறித்தும் நான் எப்போதும் கவலை கொள்வதுண்டு. சட்டம் – ஒழுங்கு நிலையைப் பாதுகாக்கக் காவல்துறைப் பணியாளர்களுக்கு இன்றியமையாமல் தேவைப்படும் கடின உழைப்பு, கடமை உணர்வு சற்றும் தளராமல் இருக்கவும், அவர்களின் செயலார்வம் குன்றாமல் இருக்கவும், அவர்களை ஊக்குவிக்கவும் அவர்களுடையக் குறைகளைக் களைய நாம் தீவிர கவனமெடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது. இதன் பொருட்டு, குறை தீர்க்கும் நிகழ்ச்சியை நானே நேரடியாக ஐந்து நாட்கள் நடத்தி, சுமார் 8,395 காவல்துறைப் பணியாளர்களிடம் குறைகளைக் கேட்டறிந்தேன். என்னுடைய கட்டளைகளுக்கிணங்க, காவல்துறையைச் சேர்ந்த முதுநிலை அதிகாரிகள், குறிப்பிட்ட கால இடைவெளியில் இதைப்போன்றே குறைகேட்கும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். மேலும் அவர்களிடம் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்காக உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்தும் வருகின்றனர். எவ்வித விட்டுக் கொடுத்தலும் இன்றி நம்முடைய காவல் படையின் கட்டுப்பாடு நீடித்திருக்க வேண்டியது அவசியம். இதன் பொருட்டு அவர்களுடைய பணி ஆர்வத்தை அதிகரிக்க

அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

**18.** காவல்துறைப் பணியாளர்களுக்கான நல நடவடிக்கைகள் தொகுப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் நான் முனைப்புடன் இருக்கிறேன். முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மானியங்கள் வழங்குவதுடன், மருத்துவ வசதிகள், படிப்புதவித் தொகைகள், பரிசுத் தொகைகள், கருணைத் தொகை வழங்குதல் மற்றும் காப்பீட்டுறுதித் திட்டங்கள் போன்ற நான் தொடங்கிவைத்த பல்வேறு நடவடிக்கைகள் காவல் பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு காவல்துறைப் பணியாளரும் அவருடைய கடமைப் பொறுப்பை, முழுத் திறமையுடன் ஆற்றுவதற்கு ஊக்கமளித்து வருகின்றன. வீரதீரச் செயல்களில் ஈடுபட்டிருக்கும்போது கொல்லப்படும் அல்லது ஊனமுற்று செயலிழந்துபோகும் சிறப்புப் படைப் பிரிவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை ரூ.10 இலட்சமாக உயர்த்தி நான் ஆணை பிறப்பித்துள்ளேன். வீரத்துடன் போராட வேண்டிய சூழ்நிலைகளில், தீரத்துடன் பணியாற்றி தமது இன்னுயிரை இழக்கும் அல்லது ஊனமடைந்து செயலற்றுப் போகும் காவல்துறைப் பணியாளர்கள் அனைவருக்கும் அவர்களுடைய வீரதீர சாகசச் செயல்களுக்கு அங்கீகாரமளிக்கும் வகையில் அவர்களுக்கு வழக்கமாக அனுமதிக்கப்படும் கருணைத் தொகையுடன், தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தின் கீழும் அனைத்துப் பயன்களும் அளிக்கப்பட வேண்டுமென்றும் நான் ஆணை பிறப்பித்துள்ளேன். எனது இந்த நடவடிக்கையானது என்னுடைய அரசு காவல்துறைப் பணியாளர்களின் நலனையும், அவர்களுடைய குடும்ப நலனையும் எப்போதும் கவனித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையைக் காவலர் ஒவ்வொருவருக்கும் அளித்துள்ளது.

**19. தமிழ்நாடு காவல்துறைக்கென நற்பெயரும் புகழும் உண்டு. சவாலான சூழ்நிலைகளில் மிகவும் தீவிரமாகவும், திறமையுடனும், கடமை உணர்வுடனும் செயலாற்றுதல், பணித்திறமை, சிறந்த வீரம் ஆகியவற்றைப் பெற்றது தமிழ்நாடு காவல்துறை என்ற சிறப்பானதோர் நற்பெயர் அதற்கு உண்டு. இத்தகைய, சிறந்த செயல்பாடு தொடர நல்ல தலைமை மிகவும் இன்றியமையாததாகும். உயர் காவல்துறை அதிகாரிகள், தமக்கு கீழ்** பணியாற்றுபவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருந்து வழி நடத்திச் செயலாற்ற வேண்டும். எனவே, கடமையாற்றும்போது எப்போதும் நேர்மையுடனும் அச்சமின்றியும் மற்றும் நாணயத்தோடும் செயல்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நமது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு உரிமைகளை அளித்து, பாதுகாப்பளித்து, அதன்மூலம் நமது மாநிலம், மனிதாபமுடைய, நியாயமான, திறமையான காவல்துறையைப் பெற்ற ஒரு முன் மாதிரியான மாநிலமாகத் திகழச் செய்ய வேண்டியது உங்களுடைய முதன்மையான கடப்பாடாகும்.

## 10.8.2004 அன்று நடைபெற்ற காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய நிறைவு உரை

நேற்று நடைபெற்ற கூட்டுக் கூட்டத்திலும், இன்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகளின் சிறப்பு மாநாட்டிலும் பொது நலன் சம்பந்தப்பட்ட முக்கியமான பல்வேறு பிரச்சினைகள் குறித்து பொருளார்ந்த கருத்து பரிமாற்றங்களைச் செய்து கொண்டோம். இம்மாநாடு, ஒவ்வொரு மாவட்ட காவல்துறை அதிகாரிகளும் தங்கள் மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் அதனைச் சீர்செய்வதற்குத் தேவையான பொதுவான அணுகுமுறைகள் குறித்தும் ஆலோசனைகளைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பாக அமைந்தது.

தலைமைச் செயலாளர், வளர்ச்சிப் பணி ஆணையர் மற்றும் உள்துறைச் செயலாளர் ஆகியோர், நீங்கள் அளித்த மேலான ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து தொடர் நடவடிக்கையை முடிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளேன். நாம் விவாதித்த பல்வேறு முக்கியமான பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வு கண்டு, அவற்றைத் திறமையான முறையில் நடைமுறைப்படுத்த முடியும் என்று உறுதியாக நம்புகிறேன். இங்கு நடைபெற்ற ஆலோசனையின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டிய நடைமுறைகளைப் பட்டியலிட்டுள்ளேன். அவற்றை நீங்கள் அந்தந்த மாவட்டங்களில் கடமையுணர்வுடனும், பொறுப்புணர்வுடனும், முழு உத்வேகத்துடனும் செயல்படுத்த வேண்டுமென நான் விரும்புகிறேன்''.



மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிவிப்புகள்

## 10.8.2004 அன்று காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்

★ புலனாய்வு வளையத்தை எச்சரிக்கை தகவல்களை முன்கூட்டியே தரும் வகையில் மேம்படுத்தி பலப்படுத்துங்கள்.

★ முன்கூட்டியே எதிர்பார்த்து திட்டமிட்டு உங்களது பணிகளைத் தீவிர கவனத்துடன் ஆற்றுங்கள். வருமுன் காப்பதே சாலச்சிறந்தது.

★ ஒட்டுமொத்த காவல்படையும் இலக்குகளை அடைய முனைப்புடன் பணியாற்றத் தயார்படுத்துங்கள்.

★ அனைத்து மட்டத்திலும் உள்ள அதிகாரிகள் பொதுமக்கள் கொணரும் பிரச்சினைகளை மனிதநேயத்துடன் அணுக அறிவுறுத்துங்கள்.

★ உங்களது பணி மேலும் சிறக்க, புதிய தொழில் நுட்பங்களைக் கற்றுப் பயன்படுத்துங்கள்.

★ பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த விசாரணையில் மனப்பான்மை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

★ காவல்துறையினருக்கும் பொதுமக்களுக்கு மிடையேயான உறவை பலப்படுத்த வேண்டும்.

★ கள்ளச்சாராய உற்பத்தி மற்றும் விநியோகத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்.

★ மிகப்பெரிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் திட்டமிட்டு குற்றங்களைச் செய்து வருபவர்களுக்கு எதிராக முனைப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ காவல்துறையினருக்கு மென்மேலும் தரமான பயிற்சி அளித்து எந்தச் சூழ்நிலையிலும் தீய சக்திகளை எதிர்த்து போராடத் தகுதியானவர்களாக உருவாக்க வேண்டும்.

★ காவலர் குறைகளை, கருணையுடன் பரிசீலித்து கட்டுப்பாட்டுணர்வை வளர்க்கவேண்டும். அதன் மூலம் தான் உண்மையான தலைமைப் பண்பு வெளிப்படும்.

★ இவைதான் தற்போது தேவைப்படுகின்ற செயல் திட்டங்களாகும். ஏற்கெனவே தமிழ்நாடு காவல்துறை தனக்கென்று ஒரு பெருமையை பெற்றுள்ளது. இவற்றை நடைமுறைப்படுத்தினால் இப்பெருமைக்கு மேலும் புகழ் சேர்க்கும்.

★ தமிழக காவல்துறையை நவீனமயமாக்க வேண்டும் என்பதில் நான் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளதை, நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள். அதன்மூலம் தான் காவல்துறையின் செயல்பாடுகளில் அதிக அளவு முன்னேற்றத்தை நம்மால் உறுதி செய்ய முடியும். உங்களுடைய திறமைகளையும் தகுதிகளையும் மேம்படுத்தி அதன்மூலம் குற்றங்களைக் கட்டுப்படுத்தி சட்டம் – ஒழுங்கை மேலும் சிறப்பாக நடைமுறைப்படுத்த கீழ்க்காணும் நடவடிக்கைகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

★ கடந்த முறை நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் நான் மாநிலத்திலுள்ள 1,250 காவல் நிலையங்களில் கணினி வசதி செய்து தரப்படும் என்று அறிவித்திருந்தேன். அதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2004 செப்டம்பர் இறுதிக்குள் அனைத்துக் காவல் நிலையங்களிலும் கணினி வசதி செய்துத் தரப்பட்டு விடும்.

★ அனைத்து காவல் நிலையங்களுக்கும் நிகரி இயந்திரம் வழங்கப்படும்.

★ தருமபுரி மாவட்டத்திலுள்ள சாமல்பட்டி கிராமத்தில் புதிய காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

★ போச்சம்பள்ளியிலுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் அணிக்கு நிர்வாக அலுவலகம் மற்றும் பிற அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி நடப்பாண்டில் ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

★ ரூ.81.18 இலட்சம் மதிப்பில் 13 நோயாளர் வண்டிகள் மாவட்ட நிர்வாகங்களுக்கும், ஆணையரகங் களுக்கும் மற்றும் சிறப்பு காவல் படை அணிக்கும் வாங்கி வழங்கப்படும்.

★ பல்வேறு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாவட்ட மறுவாழ்வு நிதிக்கு கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதன் மூலம், திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வுப் பணிகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த இயலும் என்றும் தெரிவித்துள்ளார்கள். முதற்கட்டமாக, இதற்கென ரூ.2.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து மேலும் ரூ.2.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை மாவட்ட ஆட்சியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். அதன் மூலம், மாவட்ட ஆட்சியர்கள் மறுவாழ்வுப் பணிகளைச் சிறப்பான வகையில் தொடர்ந்து செயல்படுத்த முடியும். மேலும், கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விநியோகத்தைத் தடுப்பதற்குரிய நிரந்தரத் தீர்வை மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப் பாளர்கள் கண்டறிய இயலும்.

★ கடலூர் மாவட்ட கடற்கரையோரப் பகுதிகளில் மீனவர் குழுக்களுக்கு இடையே நடைபெறும் மோதல்களைத் தீர்த்து அமைதியை ஏற்படுத்தவும்; கடற்கரையோரம் நடைபெறும் கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்கும் ஒரு அதிவேக எந்திரப் படகை வாங்கித் தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரும் என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். இதே போன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர், கன்னியாகுமரி மற்றும் கடலோர மாவட்டங்களின் ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களும் வேண்டுகோளை வைத்துள் ளார்கள். தகுதியான அதிவேக படகுகள் வழங்கப்படும். அப்படகுகளைச் செலுத்துவதற்குத் தேவையான படகோட்டிகள் உள்ளூர் மீனவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படுவர். பெண்களும் இப்பணிகளில் படிப்படியாக ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள்.

★ ஆதிதிராவிட மக்கள் மயானங்களுக்குச் செல்லும் பாதையில் அவ்வப்போது பிரச்சினைகள் உருவாகி அதன்மூலம் ஆங்காங்கே சிற்சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இதற்குத் தீர்வு காணும் வகையில் மாற்றுப்பாதை அமைப்பதற்கு நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நிதியுதவியை அதிகரிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதற்காக, நடப்பு நிதியாண்டு 2004–2005ல் ரூ. 66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் இந்தப் பணியை மேற்கொள்ள ஏதுவாக இந்தத் தொகை இரட்டிப்பாக்கப்படும்.

★ வட்டாட்சியர்களுக்கும், வருவாய் கோட்டாட்சி யர்களுக்கும் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப் பாளர்கள் என்னிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, ஒரு முன்னோடித் திட்டத்தின்கீழ், கடலோர வட்டங்களில் தனி வானொலி அலைவரிசையைக் கொண்ட கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 'ராசித் திட்டம்' விரிவுபடுத்தப்படும். இதன்மூலம், தரமான தகவல் தொடர்பு வசதிகள் அமையும். மேலும் தரமான தகவல் பரிவர்த்தனை வசதிகளை வருவாய் கோட்டாட்சியர்களுக்கும், வட்டாட்சியர்களுக்கும் வழங்குவது குறித்து ஒரு குழு தனியாக ஆய்வு மேற்கொள்ளும்.

★ கடலூர் கிளை சிறைச்சாலை வளாகத்தில் பெண்களுக்கென்றே தனியாக ஒரு சிறைச்சாலை அமைக்கப்படும்.

★ கடலூரிலும் பெரம்பலூரில் மகளிர் நீதிமன்றங்கள் அமைக்கப்படும். இதற்காக தலா ஒவ்வொரு நீதிமன்ற தொடரினச் செலவாக ரூ.8 இலட்சமும் தொடரா இனச் செலவாக ரூ. 5 இலட்சமும் ஒதுக்கப்படும்.

★ தருமபுரி மாவட்டத்தில் 35 கிராமங்களில், 105 ஊர்காவல் படையினர் பணியமர்த்தப்படுவர். இப்படைக்கென சம்பந்தப்பட்ட கிராமங்களிலிருந்து இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும் இவர்கள் கிராமப் பாதுகாப்பு குழுவினராகவும் பயன்படுத்தப்படுவர்.

★ தருமபுரி வருவாய் கோட்டாட்சியர், பாலக்கோடு வட்டாட்சியர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் ஆகியோருக்கு மாற்று ஊர்திகள் வழங்கப்படும்.

★ மாவட்ட மேம்பாட்டுப் பணிகளுக்காக தருமபுரி மாவட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.5 கோடியிலிருந்து ரூ. 6 கோடியாக உயர்த்தப்படும். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நடப்பு 2004–2005 ஆம் ஆண்டிற்குச் சிறப்பு ஒதுக்கீடாக மேலும் ரூ. 3 கோடி வழங்கப்படும். இதன்மூலம் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை செப்பனிட்டு மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், தனி பகுதியில் உள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

- ★ திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் அண்டை மாநிலங்களிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள் கடத்தப்படுவதைத் திறம்படத் தடுக்க ஏதுவாக 6 நடமாடும் சோதனைச் சாவடிகளுக்கு அனுமதி வழங்கப்படும். ஒவ்வொரு வாகனத்திலும் ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் நான்கு காவலர்கள் பணியில் இருப்பார்கள்.

- ★ தற்போது தேசிய நெடுஞ்சாலை ரோந்துப் பணியின்கீழ், 80 சாலைப் பகுதிகளில் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் மேலும் விரிவுப்படுத்தப்படும். இதனுடைய அடுத்தக் கட்டமாக, இந்த சாலை ரோந்துப் பணி, அதிக வாகன போக்குவரத்து நெரிசல் மிகுந்த மாநிலச் சாலைகளுக்கு விரிவுப்படுத்தப்படும். மாநிலச் சாலைகளில் 40 புதிய ரோந்து வாகனங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதில் கிழக்குக் கடற்கரைச் சாலை ரோந்துப் பணியும் உள்ளடங்கும்.

- ★ மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் நெடுஞ்சாலைத் துறையினருடன் இணைந்து போக்குவரத்துப் பொறியியல் பணிகளை செயல்படுத்துவதற்கு ஒவ்வொரு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

- ★ கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சில சமயங்களில் அரிஸ்தம் என்ற பெயரில் கள்ளச்சாராயம் விற்பனை நடைபெறுகின்றது. இதனைத் தடுக்க, மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் முறைப்படி அனுமதி வழங்குவதற்கு முன் சம்பந்தப்பட்ட காவல்துறை அலுவலர்களிடமிருந்து தடையின்மைச் சான்றிதழ் பெறவேண்டும்.

- ★ தற்போதைய கரூர் நகரக் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து கரூர் நகரத்தில் புதிதாக ஒரு காவல்நிலையம் அமைக்கப்படும்.

- ★ காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ், மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில், ரூ. 3 கோடி செலவில், நாமக்கல் மாவட்ட புதிய காவல்துறை அலுவலகம் அமைக்கப்படும்.

- ★ நாமக்கல் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோட்டுக்கென ஒரு புதிய போக்குவரத்துப் பிரிவு தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- ★ காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ், மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் ரூ. 3 கோடி செலவில், பெரம்பலூர் மாவட்ட புதிய காவல்துறை அலுவலகம் அமைக்கப்படும்.

- ★ பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு ஆயுத சேமக்காவல் படை பிரிவுகள் பணியமர்த்தப்படும்.

- ★ ரூ.45 இலட்சம் செலவில் வாங்கப்படும் புதியதொரு இடத்தில் ஈரோடு மாவட்ட ஆயுத சேமக்காவல் படை வளாகம் நிர்மாணிக்கப்படும். இந்தப் புதிய ஆயுதப்படை வளாகம் அமைக்கும் பணி 2004 டிசம்பருக்குள் முடிக்கப்படும்.

- ★ ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பயிற்சி நிதி வழங்கப்படும். இதன்மூலம் அந்தந்தப் பகுதிகளில் பணியாற்றும் காவல் துறை அலுவலர்களுக்குப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து குறுகிய கால பயிற்சிகள் நடத்தப்படும்.

- ★ புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கறம்பக்குடியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்க அனுமதி அளிக்கப்படும்.

- ★ புதுக்கோட்டை மாவட்ட ஆயுத சேமக்காவல் படை வளாகத்தில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ரூ. 45 இலட்சம் செலவில், சமூகநல கூடத்தை அமைக்கும்.

- ★ இராமேஸ்வரம் மற்றும் தொண்டி ஆகிய இடங்களில் உள்ள துறைமுகங்களைச் சீரமைக்கும் பணி ரூ.48.31 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

- ★ கடலோரக் கண்காணிப்பு மற்றும் கடல் சார்ந்த ஏனைய நடவடிக்கைகளில் காவல்துறையினருக்குப் பயிற்சி அளிக்க மண்டபத்தில் கடல்சார் பயிற்சி மையம் ஒன்று அமைக்கப்படும்.

- ★ தஞ்சாவூர் மாவட்ட தீயணைப்புப் படைக்கு 9,000 லிட்டர் கொள்ளளவு டேங்கர் ஒன்று கூடுதலாக வழங்கப்படும்.

- ★ நீலகிரி மாவட்டத்திற்குச் சீரமைப்பு பணிகளுக்கான மீட்பு வாகனம் உடனடியாக வழங்கப்படும்.

- ★ நீலகிரி மாவட்டத்தில், பணியாற்ற வரும் காவலர்கள் தங்குவதற்கென ரூ.75 இலட்சம் செலவில் துயில் கூடங்கள்/தங்குமிடங்கள் கட்டப்படும்.

- ★ தேனி மாவட்டத்தில் தற்போது கட்டப்பட்டு வரும் நீதிமன்ற வளாகத்தில் குற்றவாளிகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு சிறப்பான வசதிகள் செய்து தரப்படும். மேலும் பணி நிமித்தம் நீதிமன்றத்துக்கு வரும் காவல்துறை பணியாளர்கள் தங்களுடைய பணிகளைக் கவனிக்கவும், சட்ட ஆலோசகர் களுடன் ஆய்வு செய்வதற்கும் தேவையான வசதிகள் செய்து தரப்படும்.

- ★ மேற்கண்ட வசதிகள் மற்ற அனைத்து நீதிமன்ற வளாகங்களிலும் செய்து தரப்படும்.

- ★ தூத்துக்குடியிலுள்ள 'சிப்காட்' வளாகத்தில் பல்வேறு பெரிய தொழிற்சாலைகள் அமைந்திருப்பதாலும், அவற்றில் ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றி வருவதாலும் அவ்வளாகத்தில் தனியாக ஒரு காவல் நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

- ★ மோட்டார் வாகனச் சட்டப்படி பதிவு செய்யப்படும் சிறு வழக்குகள் குறித்து விசாரணை மேற்கொள்ள

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் நடமாடும் நீதிமன்றம் அனுமதிக்கப்படும். போக்குவரத்து நெரிசலுள்ள பகுதிகளில் இந்த நடமாடும் நீதிமன்றங்களுக்கு அனுமதி அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

★ திருச்சி மாநகர காவல் துறை ஆணையரகத்திற்கு 8 புதிய குற்றப்பிரிவு ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்கள். 24 உதவி ஆய்வாளர்கள், 42 தலைமைக் காவலர்கள் மற்றும் 120 காவலர்களும் நியமிக்கப்படுவர்.

★ திருச்சி மாநகர காவல்துறை ஆணையரகத்திற்குப் புதிய மாநகர காவல் அலுவலகம் கட்டப்படும்.

★ திருச்சி மாநகர காவல்துறைக்குத் துணை ஆணையாளர் ஒருவர் தலைமையில் ஒரு தனி உளவுத் தகவல் பிரிவு அமைக்கப்படும்.

★ திருச்சி மாநகருக்கு உட்பட்ட மணிகண்டம் புறக்காவல் நிலையம், முறையான காவல் நிலையமாக நிலை உயர்த்தப்படும்.

★ திருச்சிராப்பள்ளி சரக காவல்துறை துணைத் தலைவர் அலுவலகத்திற்குப் புதிய அலுவலகம் கட்டப்படும்.

★ திருச்சிராப்பள்ளி மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் கருக்கெழுத்துப் பிரிவு, விரல் ரேகைப் பிரிவு, புகைப்பட மற்றும் வீடியோ பிரிவுகள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்படும்.

★ பொதுமக்களிடையே கள்ளச்சாராயத்தால் ஏற்படும் தீங்கு குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களும், அந்தந்த மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து முகாம்கள் நடத்த வேண்டும். இதற்காக, மாவட்டம் ஒன்றிற்கு ரூ.1 இலட்சம் என்ற வீதத்தில் ரூ.30 இலட்சம் அனுமதிக்கப்படும்.

★ திருநெல்வேலி மாவட்டத்தில் புதிய மாவட்ட காவல் அலுவலகம் கட்டப்படும்.

★ தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், திருநெல்வேலி மாநகர காவல்துறை ஆணையரகத்தின் பராமரிப்புப் பணியை மேற்கொள்ளும்.

★ திருவண்ணாமலை நகரில் மேலும் ஒரு புதிய காவல் நிலையம் (திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையம்) அமைக்கப்படும்.

★ திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை மற்றும் ஆரணியில் புதிதாக மேலும் 2 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

★ வேலூர் மாவட்டத்தில் உள்ள அணைக்கட்டில் புதிய காவல் நிலையம் அமைக்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்திற்கு 2 நடமாடும் கலந்தாய்வு வாகனங்கள் வழங்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்தில் ஆயுத சேமக்காவல் படை மைதானத்திற்கு அருகேயுள்ள வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடம், காவலர் பயிற்சி மைதானம் ஏற்படுத்த வழங்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் தீவிர சிகிச்சை அளிப்பதற்குரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். சிறப்பு மருத்துவர்களும் நியமிக்கப்படுவர்.

★ காவல்துறையினர் அனைத்துத் தருணங்களிலும் எதிரிகளை சந்திக்க ஆயத்தமாக இருக்கும் வகையில் அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் எளிமையான உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படும். காவல்துறையினர் தங்களுடைய உடல் நலனை மேம்படுத்திக்கொள்ள மன அழுத்த கட்டுப்பாட்டுப் பயிற்சி, குழு சிகிச்சை (Group theraphy) வசதி ஆகியவை அளிக்கப்படும்.

★ கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மற்றும் திண்டிவனம் ஆகிய இடங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

★ விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ராஜபாளையம் மற்றும் திருவில்லிப்புத்தூரில் 2 போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

★ அருப்புக்கோட்டை காவல்துறை உட்கோட்டம், அருப்புக்கோட்டை மற்றும் திருச்சுழி உட்கோட்டங்கள் என இரண்டாக பிரிக்கப்படும்.

★ நெடுஞ்சாலை ரோந்துப் பணித் திட்டத்தை 3 முறை மாற்றுப் பணி அடிப்படையில் செயல்படுத்துவது குறித்த செயற்குறிப்பு காவல்துறைத் தலைமை இயக்குநர் தலைமையிலான ஒரு பணிக்குழுவால் பரிசீலிக்கப்படும்.

★ சென்னை மாநகரில் உள்ள காவல் துறை இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர்களுக்கு செல்போன் வழங்கப்படும்.

★ சென்னை மாநகரில் உள்ள காவல் துறை இணை ஆணையர்களுக்கும் லாப்–டாப் கணினிகள் வழங்கப்படும்.

★ காவலர் பயிற்சிக் கல்லூரி நூலகம் புதுப்பிக்கப்படும்.

★ காவல்துறை பேண்டு இசைக் குழுவிற்கு ஊதுகொம்பு இசைப்பவர்கள் நியமிக்கப்படுவர்.

★ தமிழ்நாடு சிறப்பு காவல்படைக்கு ஓட்டுநர்களைத் தேர்ந்தெடுக்க சிறப்புத் தேர்வு நடத்தப்படும்.

★ பதற்றமான பகுதிகளிலுள்ள 100 காவல் நிலையங்கள், வழக்கமான எண்ணிக்கைக்கு அதிகமான காவலர்களை நியமிப்பதன் மூலம் வலுப்படுத்தப்படும்.

★ தமிழ்நாடு குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வு அலுவலகங்களுக்கு ஒளிஅச்சு இயந்திரம், நிகரி, தொலைபேசி மற்றும் செல்போன்கள் வழங்கப்படும்.

★ சேலம் மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

★ 2 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் அனுமதிக்கப்படும். ஒரு வாகனம் கிழக்கு கடற்கரைச் சாலையிலும், மற்றொரு வாகனம் விழுப்புரம்–திருக்கோவிலூர்–எரையூர் சாலையிலும் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படும்.

★ மதுரை மாநகரில் போக்குவரத்தை நெறிமுறைப்படுத்த, துணை ஆணையாளர் பதவி ஒன்று உருவாக்கப்படும்.

★ தெற்கு மண்டலத்தில் மாநகர காவல்துறையினர் திறம்பட செயல்படுவதற்கு ஏற்ற வகையில் பழைய வாகனங்களுக்குப் பதிலாக, 77 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

★ அனைத்து மண்டல காவல்துறை தலைவர்களுக்கும் செல்போன்கள் வழங்கப்படும்.

★ தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதன அமைப்பை நவீனப்படுத்த ரூ.55 இலட்சம் வழங்கப்படும்.

★ கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் சிவகங்கையில் 3 போதைப் பொருள் உளவுத் தகவல் பிரிவு அமைக்கப்படும்.

★ போதைப் பொருள் தடுப்புப் பிரிவில் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வாகனங்களுக்குப் பதிலாக 8 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

★ சொந்த அலுவலகக் கட்டடங்கள் இல்லாத அனைத்து மண்டல காவல்துறை தலைவர்களுக்கும் புதிய அலுவலகங்கள் கட்ட நிதி ஒதுக்கப்படும்.

★ மக்கள் தொகை மற்றும் வணிகப் பெருக்கம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, தற்போதைய திருப்பூர் காவல்துறை உட்கோட்டம், திருப்பூர் வடக்கு மற்றும் திருப்பூர் தெற்கு உட்கோட்டம் என இரண்டாகப் பிரிக்கப்படும். மேலும், கூடுதலாக 2 காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

★ மேலும், திருப்பூரில் உள்ள அனைத்து காவல் நிலையங்களும் 'ஏ' கிரேடு நிலைக்கு நிலை உயர்த்தப்படும்.

★ சென்னை மாநகர போக்குவரத்துப் பிரிவு தென் பகுதி இணை ஆணையர் (போக்குவரத்து) அலுவலகத்திற்கு ஒரு துணை ஆணையாளர், 3 உதவி ஆணையாளர்கள் மற்றும் 5 ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இதன்மூலம் தென்பகுதி போக்குவரத்துப் பிரிவு வலுப்படுத்தப்படும்.

★ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கும் நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கும் அதிகாரம், துணை ஆணையாளருக்கு (போக்குவரத்து) வழங்கப்படும்.

★ வெகுமதி வழங்குவதற்காக ஒதுக்கப்படும் தொகை ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.130 இலட்சமாக உயர்த்தப்படும்.

★ கார்கள் உட்பட பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள அனைத்து வாகனங்களுக்கும் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

★ கடலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப் பாளருக்குப் புதிய வாகனம் வழங்கப்படும். மேலும் அவருடைய அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதிகளில் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள அனைத்து வாகனங்களுக்கும் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

★ தற்போது இயங்கி வரும் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு இரட்டிப்பாக்கப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு சமூகநலக் கூடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

மேற்கண்டவைதான் 10.8.2004 அன்று நான் வெளியிட்டுள்ள புதிய அறிவிப்புகள். மேலும் பல நல்ஆலோசனைகளும், திட்டங்களும் உள்ளன. இவற்றுக்குச் சுற்றோட்ட முறையில் ஆணைகள் பெறப்பட வேண்டும். ஆகவே, அந்த வகையான அறிவிப்புகளை, வழக்கமான நடைமுறைகளை எல்லாம் நிறைவு செய்த பின்னர்தான் செய்ய முடியும். அதனால்தான் நான் இப்போது அந்த அறிவிப்புகளை செய்ய இயலாத நிலையில் உள்ளேன். தற்போது நான் அறிவித்துள்ள பல்வேறு புதிய அறிவிப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நாம் இங்கு நடத்திய பயனுள்ள விவாதங்கள், அவற்றுடன் நான் வகுத்தளித்த செயல்திட்டங்கள் ஆகியவை அனைத்திற்கும் தனி சிறப்புடனும், மிகுந்த அக்கறையுடனும், அதீத கவனத்துடனும் செயல் வடிவம் கொடுத்து அனைத்துத் தரப்பினரின் ஏகோபித்த பாராட்டுதல்களை பெற வேண்டும். உங்களுடைய பணியிலுள்ள நிறை குறைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நீங்கள் கற்றுக் கொள்வதற்கும், உங்களை நீங்கள் மேம்படுத்திக் கொள்வதற்கும் காலம் தாழ்ந்துவிடவில்லை. பயமின்றி நீங்கள் செயல்படும்போதுதான் சட்டம் – ஒழுங்கு சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதை நீங்கள் உங்கள் மனதில் எப்போதும் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். எந்த நேரத்திலும் காவல்படை எவரையும் எதிர்கொள்ளும் வகையில் அனைத்து தகுதிகளுடனும் தயார் நிலையில் இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பதுதான் ஓர் அரசு சோதனையான கால கட்டங்களில் கூட, சட்டம் – ஒழுங்கைத் திறம்பட நடைமுறைப்படுத்தி அதன்மூலம் அரசுக்கு நற்பெயரை ஈட்டித் தர முடியும். திறமையில் புதியதொரு சிகரத்தை எட்ட வேண்டுமென்ற ஆர்வத்துடன் கூடிய உங்களுடைய அனைத்து முயற்சிகளிலும் நீங்கள் வெற்றி பெற வேண்டுமென நான் வாழ்த்துகிறேன்.

## 11.8.2004 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்

★ பெரும்பாலான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வைகை அணைப் பகுதியில் உள்ள பூங்கா ரூ.5 கோடி செலவில் மேம்படுத்தப்படும். இந்தப் பூங்காவில் நீர் விளையாட்டுக்கள், இசை நீரூற்றுகள் மற்றும் அனைத்துப் பொழுது போக்கு அம்சங்களும் ஏற்படுத்தப்படும்.

★ தேனி மாவட்டத்தில் உள்ள வருசநாடு மற்றும் கே.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

★ தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள டி. சுப்புலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் பணியாளர்களுடன் புதிய கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

★ அனைத்து வட்ட அலுவலகங்களுக்கும் இணையதள தொடர்பு மற்றும் மின்–அஞ்சல் ஆகிய பயன்பாட்டிற்காகச் சிறப்பு தொலைபேசி வசதி செய்து தரப்படும்.

★ சென்னையில் புறநகர் பகுதிகளில் விரைவாக வளர்ந்து வரும் நகரமைப்பு சூழ்நிலையில் நில நிருவாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக திருவள்ளூர் மாவட்டத்திற்கு ஒரு தனி அலுவலர் பதவியிடம் உருவாக்க அனுமதி வழங்கப்படும்.

★ மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள சுயஉதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை பொதுமக்களின் பார்வைக்காக வைத்து விற்பனை செய்ய இயலும் வகையில் தலைமைச் செயலக வளாகத்தில் ஒரு பொது இடம் ஒதுக்கப்படும்.

★ மன்னார்குடி தாலுகா மருத்துவமனையில் பெருகி வரும் நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 48 படுக்கை வசதி கொண்ட புதிய வளாகம் ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ திருவாரூர் மாவட்டத்தில், நிலை உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூடுதலாக அமைக்கப்படும்.

★ சம்பா சாகுபடிக்காக காவிரி டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்க வேளாண்மைத் துறை சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

★ என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளின் கடன் தேவைகள், கூட்டுறவு கடனுதவி நிறுவனம் மூலம் நிறைவு செய்யப்படும்.

★ பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்குரிய கால அளவான ஓராண்டு, மூன்றாண்டுகளாக நீட்டிக்கப்படும்.

★ திருத்தியமைக்கப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பைக் கருத்திற்கொண்டு, 2004–2005 நிதியாண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.20 கோடியிலிருந்து ரூ.35 கோடியாக உயர்த்தப்படும்.

★ திருச்சி மாவட்டத்தில் உள்ள குழுமணி மற்றும் வையம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள அறுவை சிகிச்சை கூடங்களுக்கு எக்ஸ்ரே கருவிகள் வழங்கப்படும்.

★ திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், வளநாடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை கூடம் அமைக்கப்படும்.

★ திருச்சி மாவட்டம் முசிறி தாலுகாவில் ரெட்டியாபட்டி ஏரியிலிருந்து கரிகாலி ஏரிக்கு நீர் வழங்கும் கால்வாய்க்கு கரைகள் அமைக்கப்படும்.

★ திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மாணவியர் இல்லம் மற்றும் தேர்வு மையம் அமைக்கப்படும்.

★ திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு கூடுதலாக ஒரு கட்டடம் கட்டப்படும்.

★ திருநெல்வேலியில் உள்ள ஹாக்கி விளையாட்டு அரங்கில் ரூ.30 இலட்சம் செலவில் பார்வையாளர் அமர்விடம் அமைக்கப்படும். மேலும், திருநெல்வேலியில் ஒரு சிறு விளையாட்டு அரங்கமும் அமைக்கப்படும்.

★ திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் ரூ.40 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

★ சுற்றுலா நோக்கில் குற்றாலத்தில் உள்ள அருவிகள் ரூ.82 இலட்சம் செலவில் மேலும் மேம்படுத்தப்படும்.

★ நபார்டு வங்கி நிதியுதவியுடன், தண்டராம்பட்டிலிருந்து ராயம்பட்டு செல்லும் சாலையில் ஒரு புதிய பாலம் கட்டப்படும். இதேபோல் திருவண்ணாமலை– தானிப்பாடி சாலையில் மற்றொரு பாலம் கட்டப்படும்.

★ திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஆரணி மற்றும் வந்தவாசியில் சாலைகளில் மக்கள் நெருக்கம் அதிகரித்துள்ளதால் அச்சாலைகளின் இருபுறமும் பாதசாரிகள் செல்வதற்கேற்ற வகையில் ரூ.60 இலட்சம் செலவில் நடைபாதைகள் மேம்படுத்தப்படும்.

★ குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் சிறப்புப் பள்ளிகளில் பயின்று வரும் அனைத்துக் குழந்தைகளுக்கும் சீருடைகள் வழங்கப்படும். இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிதியுதவியை மாநில அரசு வழங்கும்.

★ பணியில் இருக்கும்போது அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அடையாள அட்டையை அணிந்திருக்க வேண்டும்.

★ இளம் குற்றவாளிகளுக்காக வேலூர் மாவட்டத்தில் குழந்தைகள் சீர்திருத்த இல்லம் ஒன்று அமைக்கப்படும்.

- ★ குழந்தைகள் சீர்திருத்த ஆணையம் வேலூரில் அமைக்கப்படும்.
- ★ விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் ரூ.99 இலட்சம் செலவில் முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம் கட்டப்படும்.
- ★ விழுப்புரம் மாவட்டம் கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள அரசினர் பழங்குடியினர் உறைவிடப் பள்ளியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1,363லிருந்து 2,177ஆக அதிகரிக்கப்படும். இதன் மூலம் காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைவரையும் பள்ளியில் சேர்த்துக்கொள்ள இயலும்.
- ★ கல்ராயன் மலையில் அமைந்துள்ள அரசினர் பழங்குடியின உறைவிடப் பள்ளியில் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், சமையல்காரர், காவலாளி ஆகியோருக்கு தங்கும் இல்லங்கள் கட்டித்தரப்படும்.
- ★ விழுப்புரம் சரக காவல்துறை தலைவருக்கு அலுவலகக் கட்டடம் கட்டித்தரப்படும்.
- ★ விழுப்புரம் பெருந்திட்ட வளாகத்தில் ரூ.90 இலட்சம் செலவில் விழுப்புரம் வட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தரப்படும்.
- ★ விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தாக்குநர், மருத்துவ உதவிச் செவிலியர்கள், துப்புரவாளர் ஆகிய பதவிகளை ஏற்படுத்த அனுமதி வழங்கப்படும்.
- ★ விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பொதுப் பணித்துறை (கட்டடம்) செயல் பொறியாளருக்கும், மக்கள் தொடர்பு அலுவலருக்கும் குவாலிஸ் வாகனம் வழங்க அனுமதி வழங்கப்படும்.
- ★ விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 43 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நிரந்தர கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.14 கோடி நிதியுதவி வழங்கப்படும்.
- ★ விழுப்புரம் மாவட்டம், சோத்தானைக்குப்பம், நடுக்குப்பம் மற்றும் கோட்டக்குப்பம் ஆகிய பகுதிகளில் கடலரிப்பைத் தடுப்பதற்காக ரூ.1.06 கோடி செலவில் தடுப்புச்சுவர் கட்டப்படும்.
- ★ சாத்தூர் தீயணைப்பு நிலையத்திற்கு ஒரு நோயாளர் ஊர்தி வழங்கப்படும்.
- ★ ராஜபாளையம் தீயணைப்பு நிலையத்திற்கு 9 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் டேங்கர் வழங்கப்படும்.
- ★ விருதுநகர் நகராட்சி குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் உள்ள குழாய்களைப் புதுப்பிக்கும் பணி ரூ.50 இலட்சம் செலவில் எடுத்துக்கொள்ளப்படும். அரசு ரூ.25 இலட்சத்தை மானியமாக விருதுநகர் நகராட்சிக்கு வழங்கும்.
- ★ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விருதுநகர் மாவட்டம் காரியாபட்டியில், வட்டார விநியோக கிடங்கு அமைக்கும்.
- ★ விருதுநகர் மாவட்டத்தில் ஒரு செவிலியர் பயிற்சிப் பள்ளியை தொடங்க அனுமதி வழங்கப்படும்.
- ★ விருதுநகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்களின் போக்குவரத்து தேவைக்கேற்ப கூடுதலாக 6 பேருந்து வழித்தடங்களுக்கு அனுமதிக்கப்படும்.
- ★ தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள 308 கடற்கரையோர மற்றும் கிராமப்புற குடியிருப்புகள் பயனடையும் வகையிலும், விருதுநகர் மற்றும் அருப்புக்கோட்டை நகராட்சிகளில் உள்ள ஊரக குடியிருப்புகளும் பயனடையும் வகையில், ரூ.68 கோடி செலவில் கூட்டுக் குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்படும்.
- ★ விருதுநகர் மாவட்ட நிர்வாகத்தால் தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள கருவூல பட்டிகள் அடங்கிய புத்தக தொகுப்பு அரசு வெளியீடாக வெளியிடப்படும்.
- ★ கோவை மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதி மக்களுக்கு சேவையாற்றும் வகையில் ஓர் நடமாடும் மருந்தகம் ஏற்படுத்தப்படும்.
- ★ கோவை மாவட்டத்தில் குழந்தைகள் நல மையங்கள் இல்லாத பகுதியில் 398 குழந்தை நல மையங்கள் தொடங்கப்படும்.
- ★ கடலூர் மாவட்டத்தில் உள்ள வடக்குத்து மற்றும் மருவாய் கிராமங்களுக்கு விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்படும்.
- ★ கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில், ஓர் திட்ட இல்லம் கட்டப்படும்.
- ★ அறுவை சிகிச்சை மற்றும் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் தொழுதூரில் ஒன்றும், ஸ்ரீமுஷ்ணத்தில் மற்றொன்றுமாக இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்படும்.
- ★ குழந்தைகள் நல மையத்தில் 3 முதல் 5 வயது குழந்தைகளுக்கு கருவேப்பிலைப் பொடி மற்றும் முருங்கையிலைப்பொடிகள் வழங்குவது அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.
- ★ கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்காக மாநாட்டு கூடத்துடன் கூடுதல் கட்டடம் கட்டப்படும்.
- ★ தருமபுரி மாவட்ட நுகர்பொருள் வழங்கல் கண்காணிப்புப் பிரிவுக்குப் புதிய வாகனம் வழங்கப்படும்.
- ★ தருமபுரி மாவட்டத்தில் மீனவர்களுக்கு 30 குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.
- ★ சிறப்புப் பணிகளுக்காக வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கும், வட்டாட்சியர்களுக்கும் ஒதுக்கீடு செய்வதற்காக ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் சிறப்பு எரிபொருளாக ஆண்டுக்கு 1000 லிட்டர் எரிபொருள் வழங்கப்படும்.
- ★ காரியமங்கலம் மற்றும் தருமபுரி மருத்துவமனைகளில் எய்ட்ஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கு தேவையான நவீன கருவிகளும், மருந்துகளும் வழங்கப்படும்.
- ★ சத்தியமங்கலம் வட்ட அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டப்படும்.

★ ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த காளிங்கராயன் கால்வாயில் உள்ள 300 மதகுகள் இரண்டு கட்டமாக செப்பனிடப்படும்.

★ மாவட்ட ஆட்சியர்களுக்கான விருப்புரிமை நிதி ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்படும்.

★ மரம் வளர்க்கும் பழக்கத்தை பொதுமக்களிடையே ஊக்குவிக்கும் வகையில் இலவசமாக மரக் கன்றுகளை வழங்குவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் வனத்துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூ.50 ஆயிரம் வழங்கப்படும்.

★ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், காஞ்சிபுரம் மாவட்டம் பழைய சீவரம் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு மின் உற்பத்தி இயந்திரம் ஒன்றை வழங்கப்படும்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்த ரூ.1 கோடி செலவில் புதிதாக படகுகள் வாங்கப்படும்.

★ கன்னியாகுமரியில் ஆண்டு சுற்றுலா விழா நடத்தப்படும்.

★ கன்னியாகுமரியில் மீன் தொழில் பூங்கா அமைக்கப்படும்.

★ கன்னியாகுமரியில் புதிய சுற்றுலா மாளிகை கட்டப்படும்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் தடிக்காரக் கோணத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக அமைக்கப்படும்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முட்டம் மற்றும் ராஜாக்கமங்கலம்துறை ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறை ஆராய்ந்து ஆலோசனை அளிப்பதற்கும் ரூ.20 இலட்சம் அனுமதிக்கப்படும்.

★ அனைத்து மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் டிஜிட்டல் கேமரா வழங்கப்படும்.

★ அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் செல்போன்கள் வழங்கப்படும்.

★ கரூர் மாவட்ட தலைமையிட மருத்துவமனை, கூடுதல் கட்டடங்கள் மற்றும் பிற வசதிகளுடன் விரிவாக்கப்படும்.

★ கிருஷ்ணகிரி மாவட்ட தலைமையிட மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வசதி செய்து தரப்படும்.

★ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிருஷ்ணகிரியில் ரூ.4 கோடி செலவில் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும்.

★ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பன்முனை பயன்பாட்டுக்கு உகந்த உள்விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும்.

★ தளியில் தோட்டக்கலை பயிற்சி மையம் அமைக்கப்படும்.

★ தளியில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்படும்.

★ கீழவாரப்பள்ளி குடிநீர் வழங்கல் திட்டத்தின் நீர் வழங்கு கால்வாய்களை சீரமைக்க ரூ.1.75 கோடி வழங்கப்படும்.

★ தளிக்கு அருகே அரசு பழங்குடியினர் உறைவிடப் பள்ளி அமைக்கப்படும்.

★ அனைத்து மாவட்டங்களிலும் குறைதீர் நாள் கூட்டங்களை சிறப்பாக நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

★ மதுரை ராஜாஜி அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதலாக மருத்துவ சாதனங்கள் வழங்கப்படும்.

★ மதுரையில் உள்ள சுற்றுலா மாளிகையில் புதிய அறைகள் கட்டப்படும்.

★ மதுரை மாவட்டத்திற்கு வரும் அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக 2 கார்கள் மற்றும் ஒரு ஜீப் வழங்கப்படும்.

★ கோடியக்கரை சுற்றுலாத் தலத்தில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

★ பொறையார் மற்றும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு ரூ.13 இலட்சம் செலவில் நவீன கருவிகள் வழங்கப்படும்.

★ சிவகங்கை மாவட்டம் இளையாங்குடி தாலுகா வட்டாட்சியருக்கு குடியிருப்பு வசதி செய்து தரப்படும்.

★ சிவகங்கை மாவட்டத்தில் பழுதடைந்த 5 வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்கள் வாங்கித்தரப்படும்.

★ அனைத்து வட்ட அலுவலகங்களுக்கும் நிகரி இயந்திரம் வழங்கப்படும்.

★ தொலைநகல் மற்றும் புகைப்பட நகல் கருவிகள் அனைத்து வருவாய் கோட்ட அலுவலர்களுக்கும் வழங்கப்படும்.

★ சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

★ ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏர்வாடி ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும்.

★ பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள தா.பழூர் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக நிலை உயர்த்தப்படும்.

★ புதுக்கோட்டை, காவிரி–மேட்டூர் திட்டப் பகுதியில் மின்சார விநியோகம் தற்போது உள்ள 16 மணி நேரத்தில் இருந்து 20 மணி நேரமாக உயர்த்தப்படும்.

★ நீலகிரி மாவட்டத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு ஒரு தனி திட்ட அலுவலர் பதவி ஏற்படுத்த அனுமதிக்கப்படும்.

★ நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு புதிய வாகனம் வழங்க அனுமதி வழங்கப்படும்.







## 11–8–2004 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பல்வேறு புதிய அறிவிப்புகளை அறிவித்து ஆற்றிய நிறைவு உரை

“தற்போது நாம் இம்மாநாட்டின் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றோம். கடந்த மூன்று நாட்களாக, சிறந்த நிருவாகத்தை வழங்குவதற்குத் தேவையான பல்வேறு வழிமுறைகள் குறித்தும், புதிய முயற்சிகள் மற்றும் அணுகுமுறைகளை மேற்கொள்வதை வலியுறுத்தியும், பொதுமக்களுக்குச் சிறப்பாகச் சேவை செய்வது குறித்தும் விரிவாக விவாதித்தோம். நமக்கு அளிக்கப்பட்ட வாக்கானது, மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறமையான, நியாயமான, பரிவுணர்வுடன் கூடிய நல்ல நிருவாகத்தைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக அளிக்கப்பட்டதாகும். இந்த அரசு எடுக்கும் முயற்சிகளை மாவட்ட ஆட்சியர்கள் முன்னின்று செயற்படுத்த வேண்டும்.

சாந்தமான, அமைதியான சூழ்நிலையில்தான் நல்லாட்சி வழங்க இயலும். இதற்காக நான் மிகச் சாதாரண அணுகுமுறைகளை ஒருபோதும் அனுமதித்ததில்லையென்றாலும் சட்டம்–ஒழுங்கிற்கு உத்தரவாதம் இல்லாமல் முன்னேற்றத் திட்டங்களை மேற்கொள்ளக்கூட இயலாது என்பதை மறுப்பதற்கில்லை. நேற்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கான ஒரு புதிய செயல் திட்டத்தை நான் அறிவித்துள்ளேன். இதனை நடைமுறைப்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்கள் காவல்துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்று நான் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். அதாவது, முன்கூட்டியே தகவல்களைச் சேகரிக்கும் உளவுப் பணி, சமூக விரோத நிகழ்ச்சிகளை எதிர்பார்த்துத் தடுப்பது, பிரச்சினைகளுக்கு சாமர்த்தியமான மற்றும் சரியான முடிவுகள் எடுக்க மற்றும் நீதியை நிலைநாட்ட, மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். அக்கறையின்மை காரணமாக ஒரு சில

சிறிய சம்பவங்கள் சில நேரங்களில் மிகப்பெரிய கிளர்ச்சியாகவோ போராட்டங்களாகவோ உருவெடுத்து விடுகின்றன. இதனை முன்கூட்டியே அறிந்து தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு மாவட்ட ஆட்சியர்களுக்கு உள்ளது. ஆரம்ப நிலையில் உள்ள கிளர்ச்சி அல்லது போராட்டத்தை முளையிலேயே கிள்ளி எறியும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள் முன்கூட்டியே முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தீவிரவாதிகள், அடிப்படைவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்களுடன் இணைந்து விழிப்புடன் கண்காணித்து வரவேண்டும்.

அடுத்ததாக வளர்ச்சித் திட்டங்களுக்கு வருகிறேன். நாம் எதனை சாதிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்? உண்மையிலேயே மக்களுக்கு தரமான வாழ்க்கைத் தரத்தை உருவாக்கித் தருவதற்கு, அவர்களைத் தன்னிறைவு பெற்றவர்களாக மாற்றுவதற்குத் தேவையான வழிமுறைகளை நாம் உருவாக்கித் தரவேண்டும். இதன்மூலம்தான் உண்மையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்க இயலும். தொடர்ந்து ஏற்பட்ட வறட்சியாலும் மற்றும் மாநிலத்தின் நிதிநிலைமை சீர்கேட்டாலும் ஏற்பட்ட பாதிப்பைக் களைந்து நடப்பாண்டில் 8 சதவிகிதம் வளர்ச்சியை எட்ட வேண்டும் என்று நாம் இலக்கு நிர்ணயித்து இருக்கிறோம். விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு உதவும் புதிய ஏவுதளத்தை உருவாக்க நாம் பெருமுயற்சி எடுக்க வேண்டியதாயிற்று. இந்த ஆண்டு வேளாண்மை உற்பத்தியில் சிறப்பான பலன் கிடைக்கும் என்றும் அதன் பயனாக தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் விரைவான உயர் வளர்ச்சியைப் பெற்று ஒளிரும் என்றும் நான் நம்புகிறேன்.

நாம் தற்போது தென்மேற்கு பருவமழை காலத்தின் மத்தியில் உள்ளோம். ஒருசில மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் மழையளவு மனநிறைவை அளிப்பதாக உள்ளது. தொடர்ந்து நிலைமையைக் கண்காணிக்க வேண்டியுள்ளது. இந்த ஆண்டு சற்று நம்பிக்கை உருவாகும் வகையில், சூழ்நிலைகள் தென்படுகின்றன. நடப்பு பருவ காலத்தில் விவசாயிகள் நல்ல விளைச்சல் பெறும் வகையில் வேளாண் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதனை உறுதி செய்யும் வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கான குறைதீர்ப்பு நாள் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தி அவர்கள் எழுப்பும் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு காண வேண்டும் என்று நான் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

“அனைத்துத் தரப்பு வளர்ச்சி” என்பதுதான் நம்முடைய பிரதான வளர்ச்சி இலக்காகும். ஏழைகளின் முன்னேற்றத்திற்கு இந்த வளர்ச்சி திட்டத்தில் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். இதன் காரணமாகத்தான், ஊரக வளர்ச்சி, சமூகநலம் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை நாம் செயல்படுத்தி வருகின்றோம். புத்தாயிரம் ஆண்டில் வளர்ச்சி இலக்குகளை விரைவில் எட்டுவதே நமது அணுகுமுறையாக இருக்க வேண்டும். இதில் பெண்களை அதிக அளவில் கல்வி அறிவு பெற்றவர்களாக உருவாக்குவது, பள்ளிகளில் 100 சதவீதம் மாணவர் சேர்க்கை, சிசு இறப்பு விகிதத்தைக் குறைப்பது, வறுமை ஒழிப்பு, எளிதில் குடிநீர் கிடைக்கச் செய்வது, ஊட்டச்சத்தில்லாத குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது ஆகியவை அடங்கும். இந்த இலக்குகளை எட்டுவதில், தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விஞ்சி வேகமாக முன்னேறி வருகிறது. நாம் இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டும். இந்த இலக்குகளை எட்டி, உண்மையான பலன்களை நாம் அடைவதற்குத் துறை சார்ந்த கட்டுப்பாடுகள் தடைகளாக இருக்கக்கூடாது. அனைத்துத் திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்று சேரும் வகையில் அவற்றை ஒருங்கிணைக்கின்ற பணியினை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டும். பல்வேறு புதிய வழிமுறைகளைக் கையாண்டு, பொதுமக்களை நலத் திட்டங்களின் செயலாக்கத்தில் பங்கேற்கச் செய்வதன் மூலம் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்த முடியும். கற்பனை திறத்துடன் கூடிய முயற்சிகளுக்கு உந்து விசையாக இருந்து செயல்படும்

மாவட்ட ஆட்சியர்களின் ஆற்றல் திறத்தின் மீது எனக்கு பெரிதும் நம்பிக்கை உள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் தங்களிடம் உள்ள வள ஆதாரங்களைக் கொண்டு சிறப்பான பலன்களை உருவாக்கும் வகையில் தங்களுடைய தலைமைப் பண்பை வெளிப்படுத்த வேண்டும். பல்வேறு துறைகள் இணைந்து எடுக்கும் முயற்சிகளுக்கு மாவட்ட ஆட்சியர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய நிலையில் உள்ளனர்.

என்னுடைய தொடக்க உரையில் நான் நல்ல ஆட்சி நடைமுறைகள் மற்றும் குறைதீர்ப்பு நடவடிக்கைகளின் அவசியம் குறித்து விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். ஒரு அரசின் செயல்பாடுகள், வெற்றி அடைவது என்பது மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு அதனை நவீன முறையில் ஆளுமையுடன் செயல்படுத்துவதில் தான் உள்ளது. பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் சரியான நேரத்தில் சிறப்பான வகையில் அதே நேரத்தில் புன்முறுவலுடன் ஆற்றப்படுவதற்கு ஏதுவான அனைத்து சிறப்பு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் உங்களை கேட்டுக் கொள்கின்றேன். அரசு அலுவலகங்களை நாடி தங்கள் குறைகளைத் தெரிவித்து தீர்வுபெற வரும் எவரும் ஏமாற்றத்துடன் திரும்பக் கூடாது என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும்.

நடப்பாண்டில் நல்ல மழை பெய்யும் வாய்ப்புள்ளதால், திட்டங்கள், குறிப்பாக விரிவான தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் சிறப்பு முயற்சியாகத் தாவர எண்ணெய் செடிகளை வளர்ப்பது ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். மேலும் அவற்றைச் சிறப்பான வகையில் செயல்படுத்த வேண்டும். இதன்மூலம் சிறந்த பலன் கிடைக்கும். இந்த திட்டங்களின் நோக்கத்தை எய்த மாவட்ட ஆட்சியர்கள் சிறப்பு முயற்சிகள் எடுக்க வேண்டும். இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் புதிய முயற்சிகளையும், சிறப்பான செயல்பாடுகளையும் உங்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

கடந்த ஆண்டு என்னால் தொடங்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டம் மிகப்பெரும் வெற்றியடைந்ததுடன் பொதுமக்களும் இத்திட்டத்திற்கு மாபெரும் வரவேற்பு அளித்துள்ளார்கள் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நீர்வரத்துப் பகுதி ஒவ்வொன்றிலும் செயல்படுத்தப்படும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது. மழைநீர் சேகரிப்பு மற்றும் மண்வள மேம்பாட்டு திட்ட அடிப்படையில் மாநிலம் முழுவதும் நீர்வரத்துத் திட்டத்தை தொடங்க முடிவு செய்துள்ளேன். இத்திட்டத்தை உடனடியாக செயல்படுத்த இயலும் வகையில், திட்ட அறிக்கையை விரைவில் இறுதி செய்ய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை செயலாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில்கூட நான் திடக்கழிவுகள் அகற்றுவது குறித்தும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் சிறப்பாக வலியுறுத்தினேன். தூய்மையான கிராமங்கள் இயக்கம் சிறப்பான அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளது என்று அறிகிறேன். இத்திட்டத்தில் அனைத்து கிராமங்களையும் நட்புறவுடன் பங்கேற்க செய்வதன் மூலம் மாவட்ட ஆட்சியர்கள் இதனை பிரபலமாக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கிராமங்களில் கிடைக்கும் கழிவுப் பொருட்களை மரபுசாரா எரிசக்திக்கான மூலப்பொருட்களாகப் பயன்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும். சுற்றுச்சூழலைக் கெடுப்பதுடன் உடல் நலத்திற்கும் மிகப்பெரிய அளவில் கேடு விளைவிக்கும் பயனற்ற பிளாஸ்டிக் பைகள் அகற்றப்படுவதைப் பொதுமக்கள் பெரிதும் வரவேற்பர். இந்த பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களைச் சாலை அமைப்பதற்கான மூலப் பொருட்களாகப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

சிசுக்கொலையைத் தடுப்பதற்காகக் கருவிலேயே குழந்தைகளை ஆணா பெண்ணா என்று கண்டறிதலைத் தடை செய்யும் சட்டத்தை அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கடுமையாக நடைமுறைப்படுத்த

வேண்டும் என்று நான் ஏற்கெனவே அறிவுறுத்தியுள்ளேன். இந்தச் சட்டம் ஒரு மத்தியச் சட்டமாகும். இந்தத் திருத்தச் சட்டத்தின்படி சிசுக்கொலை செய்வது, அதாவது, பாலினத்தைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் பரிசோதனை முறைகளைக் கையாளுதல் ஆகியவை குற்றமாகும். இந்தச் சட்டத்தின் பிரிவு 4(1)ன்படி ஆணா பெண்ணா என்பதை கண்டறிய பரிசோதனை முறைகளைப் பயன்படுத்துவது குற்றமாகும். இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்க இச்சட்டம் வகை செய்கிறது. இது பிடியாணை வேண்டாக் குற்றமாகும். மாவட்ட அளவில் சுகாதாரத் துறை இணை இயக்குநர் இந்த சட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு வகிக்கிறார். இச்சட்டத்தின் விதித்துறைகள் செயற்படுத்தப்படுவதைக் கண்காணிக்க மாவட்டம் மற்றும் வட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்கள் உள்ளன. பெண் சிசுக்கொலை செய்யும் காட்டுமிராண்டித்தனமான செயல்களை ஒடுக்க மாவட்ட ஆட்சியர்கள் இந்த சட்டத்தின் கீழ் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவை தவிர, பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். எவற்றையெல்லாம் உடனடியாக முடிவு செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் உடனடியாக முடிவு செய்து உடனுக்குடன் அறிவிப்புகளாக வெளியிட்டுள்ளேன். மற்ற உங்களுடைய வேண்டுகோள்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டு விட்டன என்று இதற்குப் பொருளல்ல; உங்களுடைய அனைத்துக் கோரிக்கைகளுமே உங்கள் மாவட்டங்களின் வளர்ச்சிக்கானவை. அதைத்தான் இவ்வரசும் கருத்தில் கொண்டுள்ளது. அதையே இவ்வரசும் விரும்புகிறது. ஆகவே, உங்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் சாதகமாக பரிசீலிக்கப்படும். உங்களுடையக் கோரிக்கைகளைச் செயல்படுத்த இயன்ற அனைத்தும், நடப்பாண்டிலேயே மேற்கொள்ளப்படும். இது சாத்தியமில்லையாகில் அவை வரும் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டுள்ள பல்வேறு மாவட்ட ஆட்சியர்கள் முதன்முறையாகப் பங்கேற்றுள்ளனர். அவர்கள் தங்கள் மாவட்டங்களில் நிர்வாக நடைமுறைகளை விரைவில் முழுவதுமாக புரிந்து கொள்ள வேண்டும். பல மாவட்ட ஆட்சியர்கள் பிற மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர். ஒரு சில மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து பழைய மாவட்டங்களிலேயே பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட சில நல்ல வாய்ப்புகள் இருக்கும். புதியவர்கள் புதுமையான அணுகுமுறைகளைக் கையாள்வர். மற்ற மாவட்டங்களுக்குச் சென்றவர்கள் தங்களுடைய அனுபவங்களையும் தங்களோடு எடுத்து வருவர். ஏற்கெனவே பணியாற்றி வந்த மாவட்டங்களில் தொடர்ந்து பணியாற்றும் மாவட்ட ஆட்சியர்கள் தங்களுடைய இலக்குகளை எய்துவதற்கு தொடர்ந்து எழுச்சியுடன் செயல்பட வேண்டும். நான் நிர்ணயித்துள்ள இலக்குகளை எட்டும் வகையில் அவற்றில் இருந்து உண்மையான பலனை பெறும் வகையில் நீங்கள் அனைவரும் முழு உத்வேகத்துடன் பணியாற்ற வேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்கிறேன். இந்த வாரத்தில் ஏதென்ஸ் நகரில் தொடங்கவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் முழக்கங்களான Citius, Altius, Fortius ஆகியவற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். "வேகம், உயர்வு, வலிமை" என்பது இதன் பொருளாகும். அதாவது, ஒரு 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்கும் ஒரு வீரருக்குரிய உணர்வு மற்றும் ஊக்கத்துடனும், தொலைதூர ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்கும் வீரருக்கு இருக்கும் தைரியம் மற்றும் மன வலிமையுடனும் நீங்கள் செயல்பட வேண்டும். பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தி அதற்காக இன்று பரிசும் பாராட்டும் பெற்ற மாவட்ட ஆட்சியர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். விருதுபெற்ற புதிய மாவட்ட ஆட்சியர்கள் தாங்கள் பெற்ற பதக்கங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''. ★

## 11-8-2004 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டின் நிறைவு நாளன்று அரசு உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புப் பிரிவில் பெறப்பட்ட மனுக்களின் மீது உரிய தீர்வு கண்ட செயல்திறனுக்காக 2003-2004 ஆம் ஆண்டுக்கான விருது

திரு. **வி. பாண்டியன்**, இ.ஆ.ப., .................... முதலிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

திரு. **ஆர். வெங்கடேசன்**, இ.ஆ.ப., .................... இரண்டாமிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.

திரு. **ககன்தீப் சிங் பேடி**, இ.ஆ.ப., .................... மூன்றாமிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்.

திரு. **எஸ். கோபாலகிருஷ்ணன்**, இ.ஆ.ப., .................... நான்காமிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

திரு. **எஸ். முருகையா**, இ.ஆ.ப., .................... ஐந்தாமிடம்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திண்டுக்கல்

### 2003 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் நலனுக்கு சிறப்பான சேவைபுரிந்தமைக்கான விருது

1. திரு. **கா. பாலசந்திரன்**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம்
2. டாக்டர் **ஜெ. ராதாகிருஷ்ணன்**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர்
3. திரு. **அதுல் ஆனந்த்**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி

### 2003-2004 ஆம் ஆண்டு சிறுசேமிப்பில் இலக்கை அடைந்ததற்கான விருது

1. திரு. **ஆனந்த்ராவ் விஷ்ணுபட்டேல்**, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை
2. திரு. **அ. முகமது அஸ்லாம்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர்
3. திரு. **ஆர். வெங்கடேசன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம்
4. திரு. **டி. ராஜேந்திரன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை
5. திரு. **எம்.பி. விஜயகுமார்**,இ.ஆ.ப., ஆணையர், சென்னை மாநகராட்சி
6. திரு. **அதுல் ஆனந்த்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி
7. திரு. **ராஜேஷ் லக்கானி**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி
8. திரு. **எஸ். கோசலராமன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர்
9. டாக்டர் **டி. கார்த்திகேயன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு
10. திரு. **குமார் ஜெயந்த்**,இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர்
11. திரு. **ஏ. சுகுமாரன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம்
12. திரு. **கே.எஸ். முத்துசாமி**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி
13. திரு. **எஸ். கோபாலகிருஷ்ணன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர்
14. திரு. **சுனில்பாலிவால்**,இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி
15. திரு. **வி. சந்திரசேகரன்**,இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி
16. திரு. **வி.எம். சேவியர் கிறிஸோ நாயகம்**, இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல்
17. திரு. **வி. பாண்டியன்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி
18. திரு. **கே. செல்லமுத்து**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம்

### 2003-2004 ஆம் ஆண்டு சிறுசேமிப்பில் இலக்கை அடைவதில் முதல் நான்கு இடங்களைப் பெற்றவர்களுக்கு சிறப்புக் கேடயங்கள்

1. டாக்டர் **ஜெ. ராதாகிருஷ்ணன்**,இ.ஆ.ப, முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் (மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர்)
2. திரு. **அ. முகமது அஸ்லாம்**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர்
3. திரு. **ஆர். வெங்கடேசன்**,இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம்
4. திரு. **எம்.பி. விஜயகுமார்**,இ.ஆ.ப., ஆணையர், சென்னை மாநகராட்சி

### 2002-2003 ஆம் ஆண்டு சிறுசேமிப்பில் இலக்கை விஞ்சியதற்காக சிறப்புக் கேடயம்

திரு. **டி.கே. ராமச்சந்திரன்**, இ.ஆ.ப., முன்னாள் இயக்குநர், சிறுசேமிப்புத்துறை

### 2003-2004 ஆம் ஆண்டு சிறுசேமிப்பில் இலக்கை விஞ்சியதற்காக சிறப்பு கேடயம்

திரு. **த. மூர்த்தி**, இ.அ.ப., இயக்குநர், சிறுசேமிப்புத்துறை

### 2003-2004 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான பசுமை விருதுகள்

1. திரு. **ககன்தீப் சிங் பேடி**,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர்.
2. திரு. **ராஜேஷ் லக்கானி**,இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி

3. டாக்டர் **ஜெ. ராதாகிருஷ்ணன்**,இ.ஆ.ப.,
முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை.

**குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பிற்கான விருது**

1. திரு. **எஸ். கோசலராமன்**,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர்



திரு. **த. மூர்த்தி**, இ.ஆ.ப.,
இயக்குநர், சிறுசேமிப்புத்துறை



திரு. **ஆனந்த்ராவ் விஷ்ணுபட்டேல்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், சிவகங்கை



திரு. **கே.எஸ். முத்துசாமி**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், நீலகிரி



திரு. **எஸ். முருகையா**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல்



திரு. **வி. பாண்டியன்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி



திரு. **ஆர். வெங்கடேசன்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம்



திரு. **ககன்தீப் சிங் பேடி**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர்



திரு. **எஸ். கோபாலகிருஷ்ணன்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர்




திரு. **கா. பாலசந்திரன்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம்



திரு. **அ. முகமது அஸ்லாம்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், விருதுநகர்



திரு. **அதுல்ஆனந்த்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி



திரு. **டி. ராஜேந்திரன்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை



திரு. **டி. கார்த்திகேயன்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு



திரு. **எம்.பி. விஜயகுமார்**, இ.ஆ.ப.,
ஆணையாளர், சென்னை மாநகராட்சி



டாக்டர் **ஜெ. ராதாகிருஷ்ணன்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர்



திரு. **சுனில்பாலிவால்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி



திரு. எஸ். கோசலராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர்



திரு. கே. செல்லமுத்து, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம்



திரு. குமார்ஜெயந்த், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர்



திரு. வி. சந்திரசேகரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், தூத்துக்குடி



திரு. ஏ. சுகுமாரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம்



திரு. வி. எம். சேவியர் கிறிஸோ நாயகம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல்



திரு. டி.கே. இராமச்சந்திரன், இ.ஆ.ப.,
முன்னாள் இயக்குநர், சிறுசேமிப்புத்துறை



திரு. ராஜேஸ் லக்கானி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி

# தேனி மாவட்டத்தில்
# கோதுமை சாகுபடி

**கோ**துமை, மலைப்பிரதேசங்களிலும், மலைசார்ந்த சமவெளிப் பகுதிகளிலும் சாகுபடி செய்யப்படும் பயிராகும். வடமாநிலங்களிலிருந்தும், வெளி நாட்டிலிருந்தும் இறக்குமதியான கோதுமை தற்போது , தேனி மாவட்டத்தில் தமிழக அரசின் வேளாண்மைத் துறை உதவியுடன் முதன்முதலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உதகமண்டலம், கோவை, உடுமலைப்பேட்டை உள்பட பல மாவட்டங்களில் குளிர்ச்சியான பகுதிகளிலும், தட்பவெப்பம் குறைவாக உள்ள இடங்களிலும் அதிக அளவில் கோதுமை சாகுபடி செய்யப்படுகிறது. மேலும், கிராமம் முதல் நகரம் வரையில் வாழும் மக்களின் உணவு, பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு கோதுமை போன்ற தானியங்களின் தேவை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கோதுமை சாகுபடியினை செய்ய ஆர்வத்துடன் முன்வந்துள்ளனர்.

கோதுமை சாகுபடிக்கு தேனி மாவட்டம் முதல் காஞ்சிபுரம் வரையிலான மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த பகுதிகள் உகந்தவை என்றாலும், தேனி மாவட்டத்தில் தட்பவெப்பநிலையும், வேர் அழுகல் மற்றும் துருவநோய் போன்றவற்றையும் தாங்கி வளரக்கூடிய கோதுமை ரகங்கள் அறிமுகம் இல்லாததாலும், விவசாயிகள் கோதுமை சாகுபடி செய்யமுடியுமா என்று முன்பு தயங்கினர்.

தேனி மாவட்ட விவசாயிகளின் தயக்கத்தை போக்கும் வகையில், தேனி மாவட்ட வேளாண்மைத் துறையினர் இச்சாகுபடிக்கு உரிய வழிமுறைகளைக் கண்டறிந்து, கோதுமை சாகுபடிக்கு ஏற்ற தட்பவெப்பம் மற்றும் இயற்கை சூழல் இம்மாவட்டத்தில் உள்ளது என்றும், மேலும் வறட்சியால் நீர் ஆதாரங்கள் குறையும் நேரத்தில் நெல் சாகுபடிக்கு மாற்றாக கோதுமை சாகுபடி செய்யலாம் என வேளாண்மைத் துறையினர் அறிவுறுத்தினர்.

இதையடுத்து ஊட்டி–வெலிங்டனில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாக கண்டறியப்பட்ட எச்.டபிள்யூ.3094, எச்.டபிள்யூ.3070 என்ற கோதுமை ரகங்கள் சோதனை முறையில் தேனி மாவட்டத்தில் பயிர் செய்யப்பட்டது.

அதன் விளைவாக கோதுமைப் பயிர் 85 முதல் 90 நாட்களில் நல்ல விளைச்சலைத் தருகின்றது. ஒரு ஏக்கருக்கு 40 கிலோ விதையைப் பயன்படுத்த வேண்டும். மொத்தம் 4 அல்லது 5 முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. நெல் சாகுபடி செய்ய 1,500 மி.மீ. தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால், கோதுமை சாகுபடிக்கு 300 மி.மீ. தண்ணீர் போதுமானது. கோதுமை சாகுபடியில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் கிடையாது. ஒரு எக்டேருக்கு சுமார் 5 டன்வரை மகசூல் கிடைக்கிறது. ஒரு எக்டரில் நெல் சாகுபடி செய்தால் 6 டன் மகசூல் கிடைக்கிறது. நெல் சாகுபடிக்கு அதிகளவில் செலவும் பிடிக்கிறது. கோதுமை சாகுபடியில் குறைந்த செலவில் அதிகளவில் வருமானம் கிடைக்கிறது.

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் மாவட்ட வேளாண்மைத் துறையினரின் ஆலோசனைப்படி கோதுமை சாகுபடியினை முன்வந்து செய்கிறார்கள். அத்துடன் விவசாயிகள் கோதுமை சாகுபடி முறையினை நேரில் சென்று பார்வையிடுவதற்கு ஏதுவாக கோட்டூர், டி.மேட்டுப்பட்டி, கடபுதுப்பட்டி ஆகிய மூன்று இடங்களில் சிறப்பு அணுசரணை ஆராய்ச்சித் திடலும் அமைக்கப்பட்டுள்ளது.



இதன் மூலம் தேனி மாவட்டத்தில் முதன்முதலாக கோதுமை சாகுபடி குறைந்த செலவில் சாகுபடி செய்யப்பட்டு அதிக வருமானம் ஈட்டும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் இப்பகுதியிலுள்ள விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கோதுமை சாகுபடி செய்வதற்கு ஆர்வமூட்டும் வேளாண்மைத் துறையினருக்கும் , தமிழக அரசுக்கும் தங்களின் உளமார்ந்த பாராட்டுகளை தெரிவித்து மகிழ்கின்றனர்.


– ச. செல்வராஜ்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தேனி.

• • •

# ஈரோடு மாவட்ட

# கிராமப் பொருளாதார முன்னேற்றத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பங்கு


நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது கிராமப் பொருளாதாரம் ஆகும். கிராமப் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் கிராமத்தில் உள்ள பெண்கள் சுயமாகத் தொழில் செய்திட வேண்டும். அதற்கு வழிவகை செய்யும் வகையிலும், சுகாதாரம், ஊட்டச்சத்து, வாழ்க்கைக்கல்வி, புதிய வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் போன்ற அம்சங்களில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ளவும் பெண்களுக்கு தலைமைப் பண்பினை வளர்த்துக் கொள்ளவும் ஏற்படுத்தப்பட்டதுதான் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஆகும்.



ஈரோடு மாவட்டத்தில் 9 அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் உதவியால் இதுவரை 7,950 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 1,10,000 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியின மகளிர் சுமார் 53,000 பேர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களின் மொத்த சேமிப்பு ரூ.13.51 கோடி ஆகும். மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் இம்மாவட்டத்தில் 44 நியாய விலைக்கடைகள் தொடங்கப் பெற்று நடைபெற்று வருகின்றது. மேலும் பொருளாதார முன்னேற்றத்திற்காக 10 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கல்குவாரி குத்தகைக்கு வழங்கப் பட்டுள்ளன. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் மகள் ஆகிய புதுமணத் தம்பதிகளுக்கு இலவசமாக 150 எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 7 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பொருளாதார கடனுதவிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குழுக்களுக்குப் பயிற்சி அளித்து தரிசு நிலங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் மாவட்ட நிருவாகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதோடு வேளாண் திறன் மேம்பாட்டுப் பயிற்சி விவசாயத்துறை மூலம் 1,000 மகளிருக்கு அளிக்கப்பட்டு வருகிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வித்தியாசமான முறையில் தொழில்கள் செய்திட வேண்டும் என்பதற்காக அந்தியூர், அம்மாபேட்டை வட்டாரங்களில் உள்ள 51 மகளிருக்கு பனை ஓலைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள 7,950 மகளிர் சுயஉதவிக்குழுக்களில் 6,048 குழுக்களுக்கு ரூ.1,871 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டு உள்ளது. இதில் 2,566 மகளிர் குழுக்களுக்கு ரூ.642 இலட்சம் சுழல் நிதியாகவும், 522 குழுக்களுக்கு ரூ.563 இலட்சம் பொருளாதாரக் கடன் உதவியாகவும், 253 குழுக்களுக்கு தாட்கோ மூலம் ரூ.63.25 இலட்சம் சுழல் நிதியாகவும், தாட்கோ மூலம் ரூ.62.66 இலட்சம் 107 குழுக்களுக்கு பொருளாதாரக் கடனுதவியாகவும், 2,495 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.518.86 இலட்சம் நேரடி கடனுதவியாகவும் வழங்கப்பட்டு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில் செய்வதற்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தைப் பொருத்தவரையில் பாய்முடைதல், கீற்றுபின்னுதல், துணிகளுக்கு சாயம் இடுதல், ஊறுகாய் தயாரித்தல், துணி தைத்தல், கால்மிதியடி தயாரித்தல், இலவம் பஞ்சு மெத்தை தயாரித்தல், பொம்மைகள் தயாரித்தல் போன்ற தொழில்கள் செய்து வந்தனர். ஆனால் தற்போது புதுமாதிரியாக நம்பியூர் வட்டாரம், சுண்டக்காம் பாளையம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட செல்வ



வினாயகர் மகளிர் சுயஉதவிக் குழுவில் 13 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுக்களுக்கு வங்கி மூலம் ரூ.2 இலட்சம் கடன் வழங்கப்பட்டு இவர்கள் எலாஸ்டிக் டேப் தயாரித்து அதை விற்பனை செய்து வருகின்றனர். இவர்கள் தயாரிக்கும் எலாஸ்டிக் டேப்பிற்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. இக்குழுவினர் நாள் ஒன்றிற்கு 25 கிலோ எலாஸ்டிக் டேப் உற்பத்தி செய்கின்றனர். இதன்மூலம் இவர்களுக்கு நாள் ஒன்றிற்கு ஒரு மகளிர்க்கு கூலியாக ரூ.40 கிடைக்கிறது. ஒரு கிலோவுக்கு ரூ.10 வீதம் 25 கிலோவிற்கு ரூ.250 இலாபம் கிடைக்கிறது. அதாவது இக்குழுவினர் நாள் ஒன்றிற்கு ரூ.770 வருவாய் கிடைக்கும் வகையில் தங்கள் உற்பத்தியை அதிகரித்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தைப் பொருத்தவரையில் கிராமப்புறங்களில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தேவையான வங்கிக் கடன்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில் மாவட்ட நிருவாகத்தின் மூலம் முனைப்பான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றால் அது மிகையாகாது.

**– எம்.ஆர்.லிங்கம்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

# அயல்நாடுகளில் வேலைவாய்ப்புப் பெற சிறப்புச் சலுகை

அயல்நாடுகளில் வேலை தேடும் இந்தியர்களுக்கு தகுந்த பணியிடங்கள் கிடைக்கப் பெற செயல்பட்டு வரும், தமிழக அரசுக்குச் சொந்தமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 25 ஆண்டுகால மகத்தான சேவையைக் கடந்த ஆண்டு நிறைவு செய்து வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். வெள்ளிவிழா ஆண்டை நினைவு கூறும் வகையில் இந்நிறுவனத்தில் வேலை வாய்ப்புக்காகப் பதிவு செய்து, பதிவைப் புதுப்பிக்காத நபர்களுக்கு இந்நிறுவனம் பதிவைப் புதுப்பிக்க ஒரு சிறப்புச் சலுகையை அறிவித்துள்ளது. அயல்நாட்டில் வேலை அளிப்பவர்களுக்கு பரிந்துரைப்பதற்காக, இந்நிறுவனத்தில் முற்றிலும் கணினி மயமாக்கப்பட்ட தகவல் வங்கியில் தொழில்நுட்பம் அறிந்தவர்கள், மருத்துவப் பணியாளர்கள், பகுதி அளவிலான திறம் படைத்தவர்கள், தனித்திறம் வாய்ந்த பணியாட்கள் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

**பதிவுதாரர்கள் தங்களுடைய பதிவை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இந்நிறுவனத்தில் பதிவு செய்து, பதிவைப் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்கள் ரூ.216க்கான வரைவோலையை "அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், சென்னை" என்ற பெயருக்கு அனுப்பி தங்கள் பதிவைப் புதுப்பித்து முந்தைய பதிவு மூப்பைத் தக்க வைத்துக்கொள்ளலாம். இச்சிறப்புச் சலுகை இந்நிறுவனத்தின் வெள்ளிவிழா ஆண்டினை முன்னிட்டு அளிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் பதிவைப் புதுப்பிக்கத் தவறிய மனுதாரர்கள், 31.10.2004ஆம் நாள் வரை வழங்கப்பட உள்ள இச்சிறப்புச் சலுகையினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

பதிவைப் புதுப்பிக்க விரும்பும் மனுதாரர்கள் தங்கள் பதிவு எண் மற்றும் விலாசம் ஆகியவற்றினை தெளிவாக எழுதி தற்போதைய கல்வித் தகுதி, முன் அனுபவம் போன்ற விவரங்களை கணினி வழியில் தயார் செய்து விண்ணப்பத்துடன் இணைத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.


**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
**(தமிழக அரசு நிறுவனம்)**
**41, மெக்னிக்கல்ஸ் ரோடு,**
**சேத்துப்பட்டு, சென்னை–600 031**
**தொலைபேசி : 28365099 / 28365188**

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் புதிய அறிவிப்புகள்



- ரூ.99 இலட்சம் செலவில் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதலாக 30 வகுப்பறைகள் கட்டப்படும்.
- ரூ.7.50 இலட்சம் செலவில் 25 ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகளுக்குச் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படும்.
- ரூ.17.50 இலட்சம் செலவில் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 500 மாணவர்களுக்கு அறைகலன் வசதி செய்து தரப்படும்.
- ரூ.11.87 இலட்சம் செலவில் 5 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்கென பின்வரும் புதிய திட்டங்கள் நடப்பாண்டில் செயல்படுத்தப் படும்: –



- ரூ.8.15 இலட்சம் செலவில் 10 அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப் படும்.
- ரூ.24.65 இலட்சம் செலவில் ஒரு அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.
- ரூ.29.92 இலட்சம் செலவில் ஒரு அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.
- ரூ.4.08 இலட்சம் செலவில் 5 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.
- ரூ.24.65 இலட்சம் செலவில் ஒரு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.
- ரூ.29.92 இலட்சம் செலவில் ஒரு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.
- வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர் விடுதிகளுக்கு நடப்பு ஆண்டில் ரூ.31.50 கோடி செலவில் கட்டடங்கள் தாட்கோ மூலம் கட்டித் தரப்படும்.
- ரூ.9.44 இலட்சம் செலவில் 5 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு இருக்கையுடன் கூடிய சாய்வு மேசைகள் வழங்கப்படும்.
- ரூ.50 இலட்சம் செலவில் 5 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கூட கட்டடங்கள் கட்டப்படும்.
- ரூ.3 இலட்சம் செலவில் மின் ஆளுகைக்காகத் தலைமைச் செயலக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்குக் கணினிகள் வழங்கப்படும்.
- ரூ.18 இலட்சம் செலவில் மின் ஆளுகைக்காகத் துணைக் கருவிகளுடன் கூடிய 30 கணினிகள் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களுக்கு வழங்கப்படும்.
- ரூ.1.20 இலட்சம் செலவில் பழங்குடியினர் நல இயக்ககத்திற்கு 2 கணினிகள் வழங்கப்படும்.

◆ ◆ ◆

☐ தாராசங்கர் பானர்ஜி

படகோட்டி தாரிணி எப்போதும் ஒரு விதமாக கூனியே நடப்பான். சராசரி உயரமுள்ள அவன் அடிக்கடி வாசல் நிலையிலும் மரக் கிளையிலும் மூங்கில் குடிசைக் கூரையிலும் தலையை மோதிக் கொண்டதால் கற்ற பாடம் இந்தக் கூனல். ஆனால் நதியிலோ அவனது படகைத் தள்ள நீண்ட கழியைக் கொண்டு துடுப்பு வலிக்கும் போது சரியாக நிமிர்ந்தே நிற்பான்.

அது மழை நிறைந்த புரட்டாசி மாதம் அம்புபாச்சி திருவிழாவுக்காக கங்கையில் நீராடிய யாத்திரிகர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள். களைத்துப்போன கூட்டம்; பெரும்பாலும் மூதாட்டிகள். மயூராட்சி ஆற்றைக் கடந்து வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்தது கூட்டம்.

புகைந்துக் கொண்டிருந்த தாரிணி கடைசிப் புகை விட்டு விட்டுக் கூவினான் "இதற்கு மேல் ஒருவரையும் ஏற்ற முடியாது அம்மா தாய்மார்களே. உங்கள் புண்ணிய மூட்டை ரொம்பவும் கனக்கிறது''.

'' இன்னும் ஒரே ஒரு ஆளுமட்டுமடா என் அப்பனே'' என்று புலம்பினாள் ஒரு கிழவி. "இந்த சின்னப் பையன்'' இன்னொருத்தி சிநேகிதியிடம் உரக்கக் கூவினாள். "சீக்கிரம் வா, சாபி போதும், நிறுத்து, உன் சிரிப்பையும் கிண்டலையும் உன் ராட்சசப் பல்லை எல்லாருக்கும் காட்டாதே"

சாபி என்ற சாவித்திரி அண்டை கிராமத்துச் சிறுமிகளுடன் சிரித்து வேடிக்கை செய்து கொண்டிருந்தாள் " சரி நீ போ. நாங்கள் எல்லாரும் அடுத்த முறை வருகிறோம்''.

படகோட்டி உடனே கத்தினான். '' இல்லையம்மா இந்த முறையே வந்துவிடு. உன் கூட்டம் ஒன்று சேர்ந்தால் என் படகு நிச்சயம் கவிழ்ந்துவிடும்."


அந்தப் பெண் சளைக்காமல் பதில் சொன்னாள் "அப்படி அது கவிழ வேண்டி வந்தால், கிழவிகளோடு கவிழட்டும். ஒவ்வொருத்தியும் கங்கையில் பத்துப்



பனிரண்டு முழுக்குப் போட்டிருக்கிறாள். சாவுக்குத் தயார்தான். நேரே சுவர்க்கம் தான். எனக்கு இது முதல் யாத்திரை தெரியுமா ?"

" தெரியுது தாயே. நீ கங்கை அலைகளை உன் கற்பனையிலே கொண்டு வந்துவிட்டாய்" படகோட்டி படகில் தாவிக் குதித்தான். அவன் கூட்டாளி , காலாசாந்த் கட்டணம் வசூலிக்கத் தொடங்கினான்.

கரையிலிருந்த படகை நகர்த்தினான் தாரிணி, நதிக்கரையில் கழியை அழுத்தி நெம்பியபோது "ஆண்டவா ஆண்டவா" என்று கூவினான். யாத்திரைப் பயணிகளும் பதிலுக்குக் கூவ இந்த ஒலி இரு கரையிலிருந்த காட்டிலும் எதிரொலித்தது. வேகமாக ஓடிய நதியோ, பரிகசிப்பில் மெல்லச் சிரிப்பது போல ஒலித்தது.



"நீ நாசமாகப் போக, காலா சுங்கான் கட்டையைக் கெட்டியா பிடிக்க முடியாதா ?" தாரிணி உறுமினான். "சோறு தின்னலை ? ஆத்திலே சுழலைப் பார்க்கலேடா முட்டாள்"

"தாரிணி சொன்னது சரி, மயூராட்சியின் வேகச் சுழல்கள் பிரசித்தமானவை. வருடத்திலே ஏழெட்டு மாதத்திலே அது வெறும் பாலைவனம். இக்கரைக்கும் அக்கரைக்குமாக ஒன்றரை மைல் தூரம் வெறும் மணல்தான். ஆனால் மழை வந்ததோ, நதி அடக்கமுடியாத சக்தியாகிவிடும். அவள் ஒரு ராட்சசி. நாலைந்து மைல் பரந்து ஓட்டமாக ஓடி மெல்லக் கறுத்து வரும் நீர்க்கரங்களால் கைக்கு எட்டியதையெல்லாம் தொட்டு ஓடுவாள். எப்போதாவது ஹர்பா வெள்ளம் வரும். அப்போது நான்கு ஆள் உயரத்து நீர் அருகிலுள்ள கிராமங்களில் புகுந்து வீடுகள் தானியக் களஞ்சியங்கள் உட்பட வழியில் அகப்பட்டதையெல்லாம் அடித்துக் கொண்டு போய் விடும். இது அடிக்கடி நேராது. கடைசியாக நடந்து இருபது வருடம் ஆகிறது.

வெயில் தாங்க முடியவில்லை. ஒரு பயணி தனது குடையைத் திறந்தார். "உங்கள் பாய்மரத்தை விரிக்காதீர் தாகுர் நீங்கள் காற்றிலே பறந்து போய்விடுவீர்கள்" என்று அனுபவப் பேச்சு பேசினான் தாரிணி. அந்த மனிதர் உடனே குடையை மடக்கிவிட்டார்.

திடீரென்று நதியிலே கிரீச் என்று ஒரு கூச்சல் படகில் இருந்த அனைவரும் பயத்திலும் வியப்பிலும் திரும்பிப் பார்த்தார்கள். 'எல்லோரும் ஜாக்கிரதை' என்று கூவினான். தாரிணி. " ஒல்குரா துறை கிட்டே ஒரு படகு மூழ்கிக் கொண்டிருக்கிறது. ஏய் பாட்டியம்மா என்ன இப்படி நடுங்குறே. "தாகுர் ஐயா இவளைக் கொஞ்சம் கவனிச்சுக்குங்க பயப்பட ஒண்ணுமில்லே. நாம நதியை அநேகமாக கடந்துட்டோம் காலா. இந்த கழியைப் பிடி சீக்கிரம் " அடுத்தகணம் தாரிணி நதியிலே குதித்தான். ஆபத்திலே மாட்டிக்கொண்ட படகை நோக்கி நீந்தினான். கிழவிகள் "தாரிணி போய்விட்டானே நம் கதி என்ன ?" என்று ஓலமிட்டார்கள்.

"சும்மா இருங்க பாட்டியம்மா. அவனைக் கூப்பிடாதீங்க இல்லேன்னா நீங்களும் மூழ்கிடுவீங்க" என்று ஆவேசமாக கத்தினான் காலாசாந்த்.

சாம்பல் நிற நீரிலே எதிரே ஏதோ மிதந்து வருவது தெரிந்தது. அந்தப் பொருள் மிதப்பதும் அமிழ்வதுமாக இருந்தது. அநாயாசமாக நீந்தியபடி தாரிணி வெகு விரைவாய் அதன் அருகே சென்றான். கிட்டச் சென்றதும் நதியில் மூழ்கினான். மேலே வந்தபோது அந்தப் பொருளை ஒரு கையில் பிடித்தபடி நீந்தி வந்தான்.

கரையிலே ஒரு கூட்டம் பயத்தோடும் ஆர்வத்தோடும் தாரிணியைக் கவனித்துக் கொண்டிருந்தது. ஒரு நிமிடத்தில் எல்லோரும் கத்தினார்கள். " ஆண்டவன் அருள்!" எதிர் கரையிலிருந்து யாரோ கத்தினார்கள்.

"எல்லாம் சரியாயிருக்கா ? எல்லாரும் பத்திரமா ?" காலாசாந்த் தாரிணியை நோக்கிப் படகைச் செலுத்தினான்.

தாரிணிக்கு நல்ல காலம் அவன் காப்பாற்றிய பெண் அந்த வட்டாரத்தில் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் வந்த படகு மூழ்கவில்லை. ஓரத்தில் உட்கார்ந்தவள் அவள் முக்காடு மறைத்துத் தடுக்கிய காரணத்தால் நதியில் விழுந்து விட்டாள். சிறிது நீர் விழுங்கிவிட்டாள். அதிகமில்லை. உடனடியாக அவளுக்கு சிசுருட்சை செய்ததும் மீண்டும் சுயநினைவு பெற்றாள்.

பதினாறே வயதிருக்கும். பார்வைக்கு அழகி. நிறைய நகை அணிந்திருந்தாள். காதுத்தோடு, மூக்குத்தி, கைவளை, கழுத்துச் சங்கிலி. அங்கே அவள் கணவனும் மாமனாரும் வந்து சேர்ந்தபோது அவள் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தாள். இருவரையும் தாரிணி குனிந்து வணங்கினான். அந்தப் பெண் தனது முக்காட்டை இழுத்து முகத்தை மறைத்துக் கொண்டாள். "வெட்கப்படாதே தாயே. கொஞ்சம் இழுத்து மூச்சு விடு சங்கோசத்தால் வந்த கஷ்டம் போதும்" என்றான் தாரிணி.

" சொல்லப்பா தாரிணி, என்ன பரிசு வேண்டும் ?" என்று கேட்டார் மாமனார். தலையைச் சொரிந்து கொண்டான் தாரிணி. முணுமுணுத்தான் ' ஒரு பானை கள்ளுக்குப் பணம் தாரும் ஐயா, எட்டணா'

கூட்டத்திலிருந்து சாபி கத்தினாள் " இவ்வளவு முட்டாளா இருக்கிறே, உருப்படியா ஏதாவது கேளேன்."

விஷயம் என்ன என்று புரிந்து கொண்டது போல தாரிணி இளித்தான். " பெரிய மூக்குத்தியா ஒண்ணு தாரும் ஐயா."

மறுபடியும் சாபியின் குரல் கேட்டது. " ஆகா தாரிணி. உன் பெண்டாட்டி இனிமே வாயைத் திறக்கும் போது என்னமாதான் அவ சிங்கார மூக்கு ஆடப் போவுதோ" இதைக் கேட்டு கூட்டமே சிரித்தது.

தப்பிப் பிழைத்த அந்தப் பெண் தன் கரத்தை நீட்டினாள். உள்ளங்கையில் இருந்த தங்க மூக்குத்தி காலை வெயிலில் பளபளத்தது.

"தசரா நாளில எங்கள் வீட்டுக்கு வா தாரிணி. வேட்டியும் மேல் துண்டும் தருகிறேன். இப்போ இந்த ஐந்து ரூபாய் வைத்துக் கொள்'' என்றார் மாமனார்.

தாரிணி அடக்கமாகக் குனிந்து நன்றியுடன் பேசினான். " ஐயா எனக்கு வேட்டி தருவதை விட என் பெண்சாதிக்குச் சேலை தாருமேன்".

" சரி சரி. புடவை தருகிறேன்" என்று சிரித்தார் மாமனார்.

" உன் பெண்சாதியை நாங்கள் பார்க்கவேண்டுமே" என்று சாபி குரல் கொடுத்தாள்.

" பார்க்க என்ன இருக்கிறது ? பார்க்கும்படி இல்லை. அவள் கறுப்பு. அழகுமில்லே" என்றான் தாரிணி.

அன்று இரவு தாரிணி வீடு நோக்கி நடந்த போது அவன் முட்டமுட்டக் குடித்திருந்தான். தடுமாறியபடி வழி பிடித்துக் கொண்ட அவன் கூட்டாளி காலாசாந்திடம் குறைப்பட்டான். " இப்படி யார் குழிவெட்டியது காலா ? இங்கே குழி. அங்கே குழி. எங்கேயும் குழி" அதே அளவு குடித்திருந்த காலாசாந்தால் ஒத்துப் பாடவே முடிந்தது.

தாரிணி பேசிக் கொண்டே போனான். "வா நீச்சலடிப்போம். இந்தப் பள்ளங்களில் தண்ணி வந்துடும். இதென்னடா இது, இங்கு தண்ணி இல்லே. தரையா இருக்கு. என்ன ஆச்சு காலா ?" பதில் இல்லாது போகவே தாரிணி நீச்சல் அடிப்பது போல கைகளை ஆட்டி ஆட்டி முன்னேறினான். அவன் குடிசை கிராமத்துக்கு வெளிப்புறம் இருந்தது. அவன் மனைவி சுகி வாசலிலேயே விளக்கைப் பிடித்துக் கொண்டு அவனுக்காகக் காத்திருந்தாள்.

மூக்குத்தியைப் பற்றி படகோட்டி பாட முயன்றான். சுகி தடுத்தாள். " போதும் கூச்சல். வந்து சோறு தின்னு ஏற்கெனவே ஆறி விளைச்சுப் போச்சு."

தாரிணி அவளைப் பின்னுக்குத் தள்ளினான். "சோறு, சோறு! அதை விடு முதல்லே மூக்குத்தி மாட்டிக்க. எங்கே வச்சேன் அதே ?" தடுமாறும் கைகளால் இடுப்பைச் சுற்றித் தன் வேட்டியில் துழாவினான்.

"இப்படியே ஒரு நாள் யாரையாவது காப்பாத்தறேன்னு நீயே போயிடுவே" என்றாள் சுகி. காலை நடந்த விஷயம் அவள் காதுக்கு எட்டியிருந்தது.

"அப்படி ஏதாவது ஆனா நான் தூக்கிலே மாட்டிக்குவேன்" என்றாள்.

" நான் என்ன செய்துட்டேன் ?" என்றான் தாரிணி குழப்பமாக.

" என்ன பயங்கர வெள்ளம் அதிலே நீ.."

அவனது சிரிப்பில் அந்த மழைநாள் மாலையில் கவியும் இருளே அதிர்ந்தது. " யாராவது சொந்தத் தாயிடம் பயப்படுவார்களா ? மயூராட்சி எனக்குத் தாய் இல்லையா ? இப்ப கிடைக்கும் சோறு அவள் போடுவது தானே என்ன ?

இதை கேட்டுக்கொண்டு நிற்கவில்லை சுகி. சாப்பாட்டை கவனிக்கச் சென்று விட்டாள்.

"சொல்கிறேன் கேட்கமாட்டே ?" என்றபடி தாரிணி அடுக்களைப் பக்கம் போனான். பின்னாலிருந்து சுகியைப் பிடித்துக் கொண்டு கத்தினான் "உடனே வா இப்போதே நதியைப் போய் பார்ககலாம் வா."

"முட்டாள் தனமா என்னைத் தொந்தரவு செய்யாதே" என்று அவள் சொல்ல தாரிணி கத்தினான. "நீ வந்துதான் ஆகவேண்டும். நூறுமுறை சொல்வேன் வா ஆற்றுக்குப் போவோம். நான் அதிலே குதிப்பேன். நீ என் முதுகைப் பிடித்துக்கொள்ளு. அப்படியே போய் புஞ்ச்துபி துறையிலே மேலேறுவோம்."

"சரி சரி ஆகட்டும் முதல்லே நீ இந்த சோறு துண்ணு."

தாரிணி மறுபடி கோபமாகப் பொங்கத் தொடங்கினான். கதவு நெற்றியிலே மோதியது. நிதானத்துக்கு வந்தான். சோறு தின்றபடியே சொன்னான். 'அப்போ இரண்டு பசங்களைக் காப்பாத்தினேனே நினைவிருக்கா ? அந்தப் பாவி மதன கோபு என்னை பதினைஞ்சு ரூபாய் ஏமாத்தினானே பதினைஞ்சு ரூபா! எவ்வளோ பணம்! இன்னும் அஞ்சு சேர்ந்தா இருபது ரூபா! உனக்கு இந்த வளையல் கொடுத்தது யாரு! சொல்லு உன்னுடைய எந்த மாமன்காரன் கொடுத்தான் ? அந்த அயோக்கியன் மதன் ஆத்திலே மூழ்கினா அவன் இழுத்துப் போடறத்துக்கு முன்னாடி அவன் கொஞ்சம் வெள்ளத்தை விழுங்க விட்டுடுவேன் ஆமா. சாமி சத்தியமா." இதனிடையில் அவன் இடுப்பு வேட்டி தளர, சுகி மூக்குத்தியையும் மூன்று ரூபாயும் கண்டு எடுத்தாள்.

"மீதி இரண்டு ரூபாய் என்னாச்சு ?" என்று கேட்டாள்.

" ஓ அதுவா காலாவுக்கு கொடுத்துவிட்டேன்" என்ற போது அவன் குரலில் கள்ளம் தெரிந்தது. அந்தப் பயல்கூட இருந்தானா ? இந்தா வச்சுக்கன்னேன்''.

அவன் எங்கே போய் வருகிறான் என்பது சுகிக்குத் தெரிந்திருந்தது. ஆனால் ஒன்றும் பேசவில்லை. வீண் பேச்சில் அவளுக்கு விருப்பமில்லை. தாரிணி மறுபடி ஆரம்பித்தான். "அப்போ.. நெனப்பிருக்கா ? உனக்கு உடம்பு சுகமில்லே நான் படகு வலிக்கலே. படகு ஓட்ட யாருமே இல்லே. போலீசு ஆபீசுரு அக்கரைக்கும் போக முடியலே. எனக்குச் சொல்லி அனுப்பிச்சாங்க. அப்போ கிடைச்ச காசிலிருந்து ஒனக்கு காது வளையம் வாங்கிப்போட்டேன் இல்லையா" எனக்கு இந்த ஆறு நல்லதுதான் செய்யறது"

"கொஞ்சம் இரு இதை மூக்கிலே மாட்டிக்கிறேன்" என்றாள் சுகி.

திருப்தியுடன் உளரலை நிறுத்தினான் தாரிணி. சாப்பிடுவதைக்கூட மறந்து, கண்ணாடியும் கையுமாக அலங்காரம் செய்து கொள்ளும் பெண்டாட்டியை பார்த்துக் கொண்டிருந்தான். அவள் முடிந்ததும் சாப்பிட்ட கைகூடக் கழுவாமல் லாந்தர் விளக்கைத் தூக்கி எடுத்து " இப்படித் திரும்பு சுகி. உன்ன நல்லா பாக்கிறேன்" என்றான்.

அவள் முகம் கபடமற்ற மகிழ்ச்சியில் ஆனந்தமயமாக இருந்தது.

சாவித்திரியிடம் தாரிணி சொன்னது நிஜமல்ல. சுகி அழகாக இருந்தாள். மெல்லிய உடல் அவ்வளவு கறுப்பும் இல்லை. அவளைக் குறித்து அவன் பெருமைப்பட்டான். மகிழ்ச்சியாக இருந்தான்.

படகோட்டி கூறியது சரியே. மயூராட்சி தான் அவனுக்கு ஜீவனம். ஆண்டுதோறும் தசரா சமயத்தில் அவன் ஆற்றுக்குப் பூசை இடுவான். இந்த ஆண்டும் வழக்கம்போல பூசையிட்டான். அவன் புதிய வேட்டி கட்டினான். சுகி புது சேலை கட்டினாள். இரண்டுமே கோஷ் ஐயா வீட்டில் கொடுத்தவை. மழை இன்னும் தொடங்கவில்லை. கோடை வெயிலில் காய்ந்தது. ஆற்றின் மணல் படுகை பளபளத்தது. போக்பூர் கிராமத்து கெஸ்டோ தாஸ் சொன்னார். "ஆத்தை கும்பிடு தம்பி. நல்லா கும்பிடு. நல்ல மழை வரட்டும். வெள்ளமும் வரட்டும். குடியானவங்க பொழக்கணும் இல்ல ?''

இரு கரைகளிலும் ஆறு அடித்துப்போட்ட வண்டல் காரணமாக கழனிகள் பொன் என விளைச்சல் கண்டன.

"சரிதானுங்க'' என்று சிரித்தான் தாரிணி "எல்லாரும் என்ன சொல்றாங்க தெரியுமா ? நான் ஆத்துக்குப் படையல் வச்சு வெள்ளம் வரவேணும் என்று வேண்டிக்கிறேனாம். முட்டா சனங்களுக்கு மறந்து போவுது. இந்த ஆறுதான் நம்ம அம்மா. நம்ம நிலத்துக்கு



வளம் சேக்கறா'' பலிக்குத் தயாராக இருந்த ஆட்டைப் பார்த்தான். ''ஆடு ஓடிப்போகாம பார்த்துக்கோ காலா'' என்றான். ஆற்றுப் படுகையின் சுடுமண்ணில் நெளிந்தது ஆடு.

பூசை முடிந்ததும் தோழன் காலாசாந்துடன் தாரிணி முட்ட முட்டக் குடித்தான். காலாசாந்த் குடிபோதையில் பேசினான் : ''இந்த தடவை யாராவது நீரில் மூழ்கினால் நான் தான் காப்பாத்துவேன். வெகுமானம் பெறுவேன். ஆமா தெரியுமா ?''

பலக்கச் சிரித்தான் தாரிணி ''என்ன ஆசை! நீரிலே காலா காப்பாத்துவானாம்! ஹா! ஹா!''

''என்னடா சொன்னே. பிசாசே!'' ரோஷத்துடன் கோபமாகக் காலாசாந்த் கத்தினான். தாரிணியும் சண்டைக்குத் தயார் தான். ஆனால், சுகி குறுக்கிட்டுச் சமாதானப்படுத்தினாள். ''இதோ பாரு வெள்ளம் வந்தா. அதோ தெரியுதே அந்தப் பாக்கு மரம். அந்த மரத்துக்கு இந்தப் பக்கம் யாராவது மூழ்கிப்போனா என்று தன் புருஷனை பார்த்து நீ அவனை காப்பாத்து. அதுக்கு அந்தப் பக்கமாக நேர்ந்தா'' என்று கூறி, அடுத்தவனைப் பார்த்து ''நீ காப்பாத்து!'' என்று முடித்தாள். குடிவெறியில் காலாசாந்த் கேவி அழுதான். சுகியின் காலடி மண்ணை எடுத்து வணங்கினான். ''அக்கா நீ எவ்வளவு நல்லவ. உன்னை போல யாரும் இல்லே''.

அடுத்த நாள் இருவரும் படகைச் சீர்படுத்தத் தொடங்கினார்கள். இருட்டும் வரை வேலைபார்த்து அதைப் புதிதுபோல ஆக்கினார்கள். ஆனால் வெயிலின் உக்கிரம் காரணமாகப் படகு விரிசல் கண்டது. ஆவணி மாதம் முழுவதும் வெள்ளம் வரவில்லை. பெய்த மழையும் ஆற்று மணலை நனைத்ததோடு சரி. அழிவுக்கு அறிகுறி தெரிந்தது. தாகம் தாங்காது நிலம் மெல்ல ஓலமிடுவது போலிருந்தது. ஒருவேளை அழிவு என்பது எங்கோ அருகில் வந்துவிட்டதோ, அதன் முன்னோட்ட அறிகுறி தெரிகிறதோ ? பிழைப்புக்குப் போதிய வருமானம் தாரிணிக்கு இல்லை.

எவராவது உத்தியோகஸ்தருக்காக இந்த மணல் வெளியிலே சைக்கிள் வண்டியைத் தூக்கிவந்தால் சில்லறைக் காசு கிடைக்கும். அது அவன் குடிப்பதற்கே காணும். மக்கள் படும் பாட்டை விசாரிக்க அவ்வப்போது அதிகாரிகள் வந்து போவார்கள். ஒரு பயனும் இல்லை. அவர்கள் விரும்பும்போது கசங்கிய சிகரெட்டுத் துண்டுகள் தான் மிச்சமிருக்கும்.

அடுத்த மாதமான சிராவ (புரட்டாசி) மாதத்திலே மழை வந்தது. தாரிணி மறுபடி ஆனந்தமாக வாழ்க்கையை அனுபவித்தான். நீரிலே குதித்து சிறுபிள்ளை போல உற்சாகமாக நீச்சலடித்தான். மூன்று நாள் கழித்துப் பார்த்தால், தண்ணீர் முழங்கால் ஆழமே இருந்தது. தாரிணியும் காலாசாந்தும் படகை ஒரு மரத்தில் கட்டிக் காத்திருந்தனர். எவராவது ஒரு கனவான நதியைக்

கடக்க வரமாட்டாரா. அவருக்கு படகு வலிக்கமாட்டோமா என்று காத்திருந்தனர்.

மாலை ஆயிற்று. எவரும் வரவில்லை. "வேடிக்கையாக இருக்கிறதே காலா'' என்றான் தாரிணி. "ஆமாம். இப்படி என் ஆயுளில் பார்த்ததில்லை'' என்றான் காலாசாந்த்.

"மேக்கு வானத்தைப் பார். அது நீலமாக இருக்கு. ஒரு மேகம் இல்லையே ஆகாசத்திலே. ஒரு ஓசை இல்லையே''

"ஆமா, ஆமா'' என்று ஆமோதித்தான் காலாசாந்த்.

தாரிணி திடீரென்று ஆவேசத்துடன் காலாவின் கன்னத்திலே அறைந்தான்.

"ஆமா, ஆமா, ஆமா, நீ அப்படிச் சொல்லணும்முனுதா காத்திருக்கேனாக்கும்''

பிரமிப்பும் அசட்டுத்தனமும் கலந்த பார்வையில் விழித்தான் காலாசாந்த். அவனுக்குக் கோபம் கூட வரவில்லை. எத்தனை நேரம் இந்த நிலையைப் பொறுப்பது. தாரிணி பொறுமை இழந்தான். அசையாமல் ஒரு புறம் தள்ளி அமர்ந்தான். சற்றுப் பொறுத்து திடீரென்று "டேய் காலா, காற்று திசை மாறிப் போச்சு. மேற்கே இருந்து வீசுது பாரு'' என்றான். "உம்...ம் மேக்குக் காத்துதான். வா, வா. காலாரப் போய் ஒரு மெடா குடிப்போம். கையிலே ரெண்டனா இருக்கு. சுகியிடமிருந்து பறிச்ச காசு. சேலையிலே ஒரு மூலையிலே முடிஞ்சு வச்சிருந்தா...''

"காலாசாந்த் உயிர் பெற்றான். விருப்பமான இந்த அழைப்பு அவனைக் கிளற, தாரிணியைப் பின் தொடர்ந்தான். "அண்ணே, உன் பெண்சாதிக்கிட்டே ஏதோ காசு இருக்கு. நீ வீடு திரும்பினா உனக்குச் சோறு கிடைக்கும். ஆனா நா...நா... நான்தான் தவிப்பேன்''.

"சுகி ரொம்ப நல்லவ காலா, ரொம்ப நல்லவ'' என்றான் தாரிணி. "அவ இல்லாம நா என்ன செய்வேனோ தெரியாது. அன்னிக்குப் பாரு என் தம்பிக்குக் கல்யாணம் ஆகச்சே...''

"ஒரு நிமிஷம் அண்ணே. அங்கே கிடக்கும் நுங்கை எடுத்துக்கறேன்'' என்று காலா கள்ளுப் பனை மரத்தின் அடிக்கு ஓடினான்.

மரத்தடியிலே ஒரு சிறு கூட்டம் குந்தியிருந்தது.

"எங்கேயிருந்து வறீங்க? எங்கே புறப்பட்டீங்க?'' என்று தாரிணி விசாரித்தான்.

"நாங்க மீர்சந்த்பூரிலிருந்து வாரோம் அண்ணே. பர்த்வான் போறாம். அங்கே பொழைக்க வேலை கிடைக்குமாம்''

"பர்த்வானிலே மழை பெஞ்சுதாமா?''

"இல்லே. மழை ஒண்ணுமில்லே. ஆனா பாசனத்துக் கால்வா வெட்டறாங்க''.

கஷ்டகாலம் ஆரம்பமாகிவிட்டது. காயும் வெயிலில் தரை பாளம் பாளமாக வெடிக்க பூமிக்கு அடியில் ஒளிந்து கொண்டிருந்த பஞ்சத்தின் பயங்கர முகம் தெரியத் தொடங்கியது. ஏதோ கொஞ்சம் கொஞ்சம் தானியம் வைத்திருந்த குடிசைவாசிகள் அதை விற்பதை அடியோடு நிறுத்திவிட்டனர். ஏழை குடியானவர்கள் பட்டினி கிடந்தார்கள். மக்கள் கூட்டம் கூட்டமாக வீடுகளை விட்டு வெளியேறினார்கள்.

ஒருநாள் காலை தாரிணி ஆற்றுக்குப் போனான். காலாசாந்தைக் காணவில்லை. பகல் வெயில் ஏறியது. காலாசாந்த் இன்னும் வரவில்லை. அவன் குடிசைக்குப் போய் தாரிணி பெயர் கூவி அழைத்தான். பதில் இல்லை. உள்ளே போய்ப் பார்த்தால் அங்கே எவரும் இல்லை. அடுத்த குடிசையிலும் அப்படியே. அந்தப் பகுதியில் எல்லாருமே எங்கே போய்விட்டிருந்தார்கள் போலிருந்தது. தாரிணி விசாரித்துப் பார்த்தான். முதல் நாள் இரவு தான் அங்கிருந்தவர்கள் எங்கோ போய்விட்டார்கள் என்று தெரிந்தது.

ஹரிமந்தோல் சொன்னான்: "இதோ பார் தாரிணி, நான் திரும்ப திரும்ப அவனிடம் சொன்னேன். போகாதேடா என்று. அவன் கேட்கவில்லை. அவன் ஏதாவது வசதியான கிராமத்துக்குப் போய் பிச்சை எடுப்பானாம்'' நெஞ்சை ஏதோ அடைக்க, குரல் எழுப்பமுடியாமல் கேட்டுக்கொண்டிருந்தான் தாரிணி.

ஹரி சொல்லிக்கொண்டே போனான். "தேசத்திலே யாராவது பணக்காரர்கள் இருக்கிறார்களா என்ன? எல்லாரும் போய்விட்டார்கள். சிலபேர் நிலமை மிகவும் மோசம். பட்டினி கிடந்தாலும் கௌரவம் பார்த்து வெளியே காட்டாமல் இருக்கிறார்கள். பலஷ்தங்காவில் ஒரு பெரிய மனுஷன் கழுத்திலே சுருக்குப் போட்டுக்கொண்டாராம் பாவம். சாப்பாட்டுக்கு வழியில்லை.

அடுத்த நாள் தாரிணி கண்ட காட்சி வயிற்றை குமட்டியது. அது ஒரு கிழவியின் பிணம். நரியும் நாயும் அவளது கைகால்களை இரவு தின்றுவிட்டிருந்தன. அவள் யார் என்று தாரிணிக்கு தெரிந்தது. பாரிச வாயு நோயாளி

அவள். அவள் குடும்பத்தார் – முதல்நாள் இரவு அவளைப் பின்னே விட்டுவிட்டு அந்தப் பஞ்சம் பிடித்த கிராமத்தை விட்டு விரைந்துவிட்டிருக்கிறார்கள்.

எங்கும் அலையாமல் நேரே வீட்டுக்குப் போய் மனைவியிடம் "சுகி புறப்படு. உன் சேலை நகை எல்லாம் இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொள். இங்கிருந்து போய்விடலாம். பட்டணத்திலே வேலை கிடைக்கும்''.

சாலையிலே போகும்போதுதான் சுகியிடம் நகை ஒன்றும் இல்லை என்பதை தாரிணி கவனித்தான். வியப்புடன் என்ன ஆயிற்று என்று விசாரித்தான். சுகி வரட்டுச் சிரிப்புடன் சொன்னாள் : "இத்தனை நாள் எப்படிக் குடித்தனம் நடத்தினோம் ?''

மூன்று நாள் கால் வலிக்க நடந்தார்கள். இரவே நேரத்தில் ஒரு ஒரு கிராமத்து எல்லையிலே தங்கினார்கள். பழுத்துக் கீழே உதிர்ந்த இரு பனம் நுங்குகள் அவர்கள் சாப்பாடாயிற்று.

"ஒரு நிமிஷம் உன் துண்டைக் கொடு'' என்று தாரிணி அந்தத் துணியை ஒரு மரக்கிளையிலே தொடங்கவிட்டான். துணி அசைவிலிருந்து காற்றின் திசையைக் கவனமாகப் பார்த்தான். பொழுது விடியும்போது தாரிணி இன்னும் அப்படியே துணியைக் கவனித்தப்படி இருக்கக் கண்டாள் சுகி.

"என்ன நீ தூங்கவே இல்லையா ?'' என்று அவனைக் கடிந்தாள். "நீ வேறே உடம்பு முடியாம படுத்து என்னைப் படுத்தாதே. உன்ன போல ஆளுங்க ஏன்தான் வீட்டை விட்டு வரணும் ?''

தாரிணி அவளைச் சட்டை செய்யவில்லை. திடீரென்று கத்தினான், "இதைப் பார்த்தாயா சுகி ?''

"என்ன சொல்லறே ? எனக்கு ஒண்ணும் புரியல்லே''

"பாரேன். எறும்புக் கூட்டம் வாயிலே முட்டையோட மரத்து மேலே ஏறிப்போறது. மழைப் பெய்ய போகிறது நிச்சயம்''.

"ஒன் மண்டையிலே என்னென்னவோ வச்சிருக்கே'' என்றாள் சுகி.

"புரியலயா சுகி ? எறும்புக்கு எப்போ மழை வரும்னு தானே தெரியும். உடனே அது மரத்துமேலே ஏறிடும். பார் இதே மேக்கிலிருந்து காத்து அடுக்குது''

"என்ன சொல்றே ? ஆகாசம் பளிச்சுன்னு இருக்கு. உனக்குன்னு ஏதோ தோணுது''.

தாரிணி தொலைவில் அடிவானத்தை உற்றுப் பார்த்தான். "மேகம் மேலே வர நேரமாகாது. பாரேன். காக்கா கூட்டம் காய்ந்த சுள்ளியை எடுத்துப் போவுது. கூட்டை பலப்படுத்த. இங்கேயே இருப்போம் சுகி. மழை பெய்யுதா பார்ப்போம்''.

படகோட்டியின் அனுபவ வாக்குப் பொய்க்கவில்லை. பொழுது சாயத் தொடங்கியபோது வானத்திலே மேகம் கவியத் தொடங்கியது. மேலைக் காற்று விர்விர் என்று வேகமாக வீசியது.

"எழுந்திரு சுகி. நாம் திரும்பிவிடலாம்''

"இந்த நேரத்திலா ?''

"என்னம்மா, இருட்டுன்னா பயப்படறே ? நான் கூட இல்லயா ? வா, வா, தலைக்கு தாழங்குடை எடுத்துக்கோ தூறல் உனக்கு. ஆகாது''

"உனக்கு ? உன் ஒடம்புமட்டும் கல்லாக்கும்'' என்றாள் சுகி.

"ஆமாம்'' தாரிணி சிரித்தான். "மழை எனக்கு தோழனாச்சே. நான் வெயில்லே காய்வேன். மழையிலே துள்ளுவேன். வா, வா, அந்த மூட்டையை என் கையிலே கொடு''

சிறிது நேரம் பலத்த மழை பெய்தது. பிறகு பயங்கரக் காற்று குறைந்து மழையும் நின்றுவிட்டது. அப்புறம் மறுபடி காற்று வீசத்தொடங்கியதும், மழை கொட்டோ கொட்டு என்று கொட்டியது.

இரண்டு நாளில் வீடு திரும்பிவிட்டார்கள். போகும்போது மூன்று நாள் பிடித்த தூரம். ஆறு எப்படி இருக்கிறது, எப்படி இருக்கிறது என்று பார்க்க ஓடினான் தாரிணி. திரும்பி வந்து, இரண்டு கரையும் கடக்கும் அளவு தண்ணீர் வந்து விட்டது என்று சுகியிடம் மகிழ்ச்சியான செய்தி கூறினான்.

அடுத்த நாள் காலை வானம் கவிந்து இருட்டானது. அடை மழை பெய்தது. காற்று அழுத்தமாக வீசியது. தாரிணி நதிக்குச் சென்றான். நடுப்பகலில் வீடு திரும்பி மனைவியிடம் சொன்னான் : "கருமார ஆசாரியைப் பார்க்கவேணும்.

''சாப்பிட்டு விட்டு போ'' என்றாள் சுகி கவலையுடன்.

''படகுக்கு ஒரு புது தண்டு போடவேணும். நதியிலே தண்ணி ஏறிக்கொண்டே போவுது. இல்லாட்டா நானே சமாளித்திருப்பேன். வாயேன் வந்து பாரேன் நதியை'' அவளைக் கையைப் பிடித்து இழுத்துப் போனான். மயூராட்சியின் பயங்கர அழகு பரவசமாக இருந்தது. எதிர்க்கரை கண்ணுக்குத் தெரியவில்லை. தண்ணீர் செம்மண் வண்ணத்தில் ஓட வெள்ளை நிறத்தில் நுரைத்து அலை எம்பியதைப் பார்த்தால், கொத்துக் கொத்தாய் மலர்கள் ஆடி அசைவது போல இருந்தது. ''அவள் உறுமுவது கேட்கிறதா, சுகி பார், இன்னும் மோசமாகிவிடும். நீ வீட்டுக்குப் போ. நான் எப்படியாவது நாளைக்கு அக்கரைக்கு படகு வலிக்கவேணும்''.

''இந்த மழையிலே போகாதே'' தாரிணி கேட்கவில்லை. அவன் போய்விட்டான்.

இருட்டியபின் அவன் முகத்தில் கவலை தெரிய வீட்டுக்கு விரைந்தான். தூக்! தூக்! ஆம். அது என்ன என்று தெரியும் அவனுக்கு. அபாயம் வருகிறது. வெள்ளம் வரப்போகிறது. அது அவன் தொழிலுக்கு உதவாது.

மயூராட்சியுடன் சேரும் ஓர் அற்ப கிளை நதி கிராமத்தை ஒட்டிச் செல்லும். அதிலே ஒரு சிறு மூங்கில் பாலம் உண்டு. அதுவே கண்ணை மூடிக்கொண்டு அவன் போகக் கூடிய வழக்கமான பாதை. ஆனால் இப்போது பாலத்தைக் காணவில்லை. அது இருந்திருக்க வேண்டிய இடத்தில் வெறும் பிசுபிசுத்த நீர்தான் இருந்தது. வேட்டி ஈரமாகாமல் இருக்க மேலே தூக்கிக் கட்டவேண்டிருந்தது. ஒரு நடுங்கவைக்கும் சீறல் ஒலியைக் கேட்டான். வேகமாக வீசும் ஓலமும் பாய்ந்து செல்லும் நீரின் இரைச்சலும் தெளிவாகக் கேட்டான். நீரில் அவனைப் புழு, பூச்சிகள் தாக்கின. நிலத்தின் அடியில் இருந்து அவை இப்போது பாதுகாப்பான இடத்தைத் தேடிப் புறப்பட வேண்டியிருந்தது.



தாரிணி நீரிலே குதித்து குறுக்கே நீச்சலடித்தான். எங்குமே இடுப்பளவு தண்ணீர். கிராமத்து மக்கள் எப்படியோ நீரில் மூழ்காமல் சமாளித்துக் கொண்டிருந்தார்கள். உதவி கோரி ஒருவரையொருவர் அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஆபத்துக் காலத்தில் பசுவும், ஆடும், நாயும் கூட எப்படி முனகுகின்றன! எல்லா இரைச்சலுக்கும் மேலாக மயூராட்சியின் உறுமல் கேட்கிறது. தொடர்ந்து மழை இரைச்சல் காற்றின் கொடூரமான சிரிப்பு, தங்களிடம் அகப்பட்டுக்கொண்ட அப்பாவிகளின் அவலச்சத்தத்தை அடக்கும் கொள்ளையர் கூச்சலைப் போல இருந்தது இந்த ஒலி.

இருட்டில் வழி தெரியவில்லை. தாரிணியின் காலடியில் ஏதோ இடறிற்று. மெத்தென ஏதோ மிருகம் போல குனிந்து அதை எடுத்தான். ஆட்டுக்குட்டி செத்துக்கிடந்தது. அதை வீசி எறிந்தான். எப்படியோ தன் குடிசையை அடைந்து கத்தினான். ''சுகி எங்கே இருக்கிறாய் சுகி!''

சிறிய முற்றத்தில் தண்ணீர் இடுப்பளவு ஏறிவிட்டது. திண்ணையிலே முழங்கால் அளவு இருந்தது. அங்கே சுகி நின்றிருந்தாள். கண்ணிலே பீதியுடன் கூரை மூங்கிலைப் பிடித்தபடி நின்றிருந்தாள்.

''சீக்கிரம் வா வெளியே!'' தாரிணி அவள் கையைப் பிடித்து இழுத்தான். ''ஏன் இங்கேயே நின்னுட்டே ? எந்த நிமிஷமும் வீடு இடிந்துவிழும்''

''நான் உனக்காகக் காத்திருந்தேன். என்னை வேறு எங்கே தேடுவாய் ?''

இருவரும் அடுத்த கணம் இடுப்பளவு நீரில் தெருவில் வந்தார்கள். ''என்ன செய்வோம் ? சுகி'' என்று கேட்ட அவன் குரல் நடுங்கியது.

''என்ன கவலை ? எல்லாருக்கும்தானே வந்த கஷ்டம் தானே ?''

''வெள்ளம் இன்னும் அதிகமானால்? இப்போவே இரைச்சல் கேட்கிறது''

''வெள்ளம் ஏறாது'' என்றாள் சுகி. பெண்களுக்கே உரிய ஒருவித அசிரத்தையுடன், ''அப்போ நாடு தான் என்ன ஆகும்?'' தான் படைச்சதே தானே அழிக்குமா சாமி?

கடவுளின் கருணையிலே ஆறுதல் காண முயன்றான் தாரிணி. முடியவில்லை. திடீரென்று நீரிலே பலத்த சலசலப்பு கேட்டது. ''போகலாம். இங்கிருந்து தண்ணி உன் மார் அளவு வந்துவிட்டது''.

''ஐயோ காப்பாத்துங்களேன். என் குழந்தை போயிருச்சே. என் கண்ணே என் பையா!'' என்று ஓலக் குரல் கேட்டது.

வழக்கமான அலட்சியப் போக்குடன் தாரிணி கத்தினான். ''நீ இங்கே இரு. நான் கூவும்போது குரல் கொடு'' என்று நீரிலே தாவி மூழ்கினான். ''எங்கே குழந்தை?''

''இந்தப் பக்கம். இந்தப் பக்கம்''

''இதோ வந்துவிட்டேன்''

ஏதேதோ குரல் கேட்டது. வார்த்தைகள் தெளிவாக இல்லை. பிறகு எல்லாம் அமைதியாகிவிட்டது. அடுத்தகணம் தாரிணியின் குரல் ''சுகி! சுகி!''

''இந்தா, இங்கே இருக்கேன்'' குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான். அவளைப் பார்த்ததும் ''நிலைமை ரொம்ப மோசமா இருக்கு சுகி. என் இடுப்பை பிடிச்சுக்கோ''.

சுகி புருஷனின் இடுப்பைச் சுற்றியிருந்த வேட்டியைப் பிடித்துக்கொண்டாள். ''யார் குழந்தை அது? காப்பாத்த முடிஞ்சுதா?''

''ஊம். அது பூபதே பல்லாவின் குழந்தை'' அவர்கள் நீரிலே அளைந்து நடந்தார்கள். போகப் போக சிரமமாக இருந்தது. ''என் முதுகு மேலே ஏறிக்கோ சுகி'' என்றான் தாரிணி. ''இப்போ எங்கே இருக்கோம், எங்கே?'' சட்டென நின்றான். அவர்கள் இருந்த இடத்தில் ஆழம் அதிகமாக இருந்தது. ''ஐயையோ ஆத்துக்கே வந்துவிட்டோம் சுகி. என் வேட்டியைப் பிடித்துக்கொள்ளு மிதக்க முடியுமா பார்க்கலாம்''

ஆற்று வெள்ளத்திலே இருவரும் வேகமாக அடித்துச் செல்லப்பட்டார்கள். கும்மிருட்டு கூரான அம்பு போல விர்ரென்று அடித்த காற்றொலியும் வெள்ளத்தில் ஓடும் ஆற்றின் உறுமலும் கலந்தன. துரும்பு என மிதந்தனர் அவர்கள். இன்னும் எத்தனை நேரமோ தெரியாது. கைகால்கள் மரத்துப்போகத் தொடங்கின. இரக்கமற்ற அலைகளால் மூச்சு முட்டியது. சுகியின் பிடிப்பில் வித்தியாசம் தெரிந்தது. ஏதோ மாதிரி இருக்கிறதே என்று நினைத்தான் தாரிணி.

''சுகி!'' மூச்சு திணறக் கத்தினான்.

''ஊம்'' என்று ஊனசுரமாக பதில் வந்தது.

''பயப்படாதே கண்ணம்மா''

அடுத்த கணம் இருவரும் மூழ்குவதை உணர்ந்தான். சுழலிலே சுழன்று சுழன்று மூழ்கினார்கள். தான் நேசிக்கும் ஆற்றிலே தோற்றுவிடமாட்டோம் என்று நினைத்தான். ஆனால் சுகி அப்படியா? தன் முழுபலத்தோடும் முக்கி, நீர்மட்டத்துக்கு மேலே வந்துவிட்டான். அந்த இடம் சுழல் பகுதி அதைவிட்டு வெளியேவரப் பாடுபட்டான். ஆனால் சுகி கெட்டியாக அவனைப் பற்றிக்கொண்டிருந்தாள். ''சுகி! சுகி!'' என்று கெஞ்சினான். பதில் ஒன்றும் இல்லை.

இருவரும் சுழன்று சுழன்று வந்தார்கள். அப்படியே மூழ்கினார்கள். நிர்கதியான சுகியின் அணைப்பில் அவன் அசைய முடியாமல் போயிற்று.

அவள் உயிரோடு இருக்கிறாளா? அவன் மூச்சுவிட வலியுடன் திணறினான். அவனால் பொறுக்க முடியவில்லை. ஒரு கணத்தில் அவன் கைகள் சுகியின் கழுத்தைச் சுற்றி அழுத்தின. அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அவன் உடல் பாரம் அத்தனையும் அவன் கைகளில் இறங்கியது.

இந்தச் சுமையைத் தளர்த்தினால் தான் அவன் பிழைப்பான். அப்பாடா நீண்ட பெருமூச்சு விட்டான். நிம்மதியாக இருந்தது. வெளிச்சம் எங்கே? கரையை எட்ட விரும்பினான் – அவன் சாகவில்லை.

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

*– தற்கால இந்தியச் சிறுகதைகள்*
*தொகுதி–II நூலிலிருந்து.*
வெளியீடு: *''சாகித்ய அகாதமி''*



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில்

# இந்தியாவிலேயே முதன்முதலாக உயிரி எரிபொருள் தயாரிப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில், 17.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில், உயிரி எரிபொருள் (Bio-diesel) தயாரிப்பதற்காக காட்டாமணக்குப் பயிர் சாகுபடி மற்றும் உற்பத்தி செய்வதை மேம்படுத்தவும், மேலாண்மை செய்திடவும் மற்றும் உயிரி எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்திடவும், சென்னையிலுள்ள M/s.Mohan Breweries and Distilleries Limited நிறுவனத்திற்கும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த M/s. D1 Oils Limited நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) கையெழுத்தானது.

கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு புதிய உத்வேகத்தை வழங்கிட காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு ஆகிய பயிர்களை சிறந்த மாற்றுப் பயிர்களாக வேளாண்மை செய்யும் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2.7.2004 அன்று அறிவித்தார்கள்.

இதன் அடிப்படையில், காட்டாமணக்குப் பயிர்கள் மூலமாக உயிரி எரிபொருள் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த இது போன்ற ஒப்பந்தம் இந்தியாவிலேயே முதல் முதலாக தமிழ்நாட்டில் தான் கையெழுத்தாகி உள்ளது. அது மட்டுமல்ல, இங்கிலாந்து நாட்டு நிறுவனம் வேறு ஒரு நாட்டில் உள்ள நிறுவனத்துடன் இத்தகைய உயிரி எரிபொருள் தயாரிக்க ஒப்பந்தம் செய்து கொள்வதும் இதுவே முதன் முறையாகும். இத்திட்டத்தின் மூலம் தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் மூலம் அவர்கள் அதிக அளவில் உற்பத்தித் திறனைப் பெருக்கி பயனடைய முடியும். தரிசு நிலங்கள் பயன் தரும் நிலங்களாக மாற்றப்படுவதோடு கிராமப்புறங்களில் அதிக அளவில் வேலைவாய்ப்பு பெருகவும், பொருளாதார மேம்பாடு அடையவும் மற்றும் சுற்றுப்புறம் தூய்மை அடையவும் இந்தத் திட்டம் வழிவகுக்கும்.

□ □ □

திண்டுக்கல் மாவட்டத்தில்

# போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வரும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.91.35 கோடியில் தொடங்கி வைக்கப்பட்டு நடைபெற்று வரும் கரூர் - திண்டுக்கல் - நத்தம் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.இரா.விசுவநாதன் அவர்களுடன் இணைந்து பார்வையிட்டு பணிகளை ஆய்வு செய்தார்கள்.

திண்டுக்கல் நகராட்சி, திண்டுக்கல் மாவட்டத்தின் தலைநகர் பகுதியாகும். திண்டுக்கல் நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரானது 1962ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான நீர் ஆதாரமான ஆத்தூர் காமராஜ சாகர் அணையிலிருந்து நீர் எடுக்கப்பட்டு பின் சுத்திகரிக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டுப் பின்னர் விநியோகிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் 1986ஆம் ஆண்டு வைகை அணையிலிருந்து நீர் எடுக்கப்பட்டு அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து பருவமழை பொய்த்ததனால் திண்டுக்கல் நகராட்சிக்கு குடிநீர் வழங்கி வரும் நீர் ஆதாரங்களின் கொடுதிறன் மிகவும் குறைந்து கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும், மாவட்டத்தின் பிற பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளிலும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியினால் மிகவும் பாதிக்கப்படும் பகுதியான குஜிலியம்பாறை, வேடசந்தூர், வடமதுரை மற்றும் திண்டுக்கல் ஒன்றியங்களிலுள்ள கிராம குடியிருப்புகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டினை முழுமையாக நீக்கும் பொருட்டு காவிரியாற்றினை நீராதாரமாகக் கொண்டு திண்டுக்கல் நகராட்சி, நத்தம் பேரூராட்சி, தாடிக்கொம்பு, அகரம், எரியோடு, வடமதுரை ஆகிய ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 764 கிராம குடியிருப்புகள் மற்றும் கரூர் மாவட்டத்திலுள்ள 52 கிராம குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் ரூ.91.35 கோடிக்கு



திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆண்டு பராமரிப்பு செலவு ரூ.499 இலட்சம் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகளைத் துரிதப்படுத்தும் வகையில் திட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பகுதி 1ல் திண்டுக்கல் நகராட்சி, தாடிக்கொம்பு, அகரம், எரியோடு, வடமதுரை ஆகிய ஊரகப் பேரூராட்சிகளுக்கும் அய்யலூர் ஊரகப் பேரூராட்சி, திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களைச் சார்ந்த 816 கிராம குடியிருப்புகளுக்கும் மொத்த குடிநீர் ஒதுக்கீடு உள்ளிட்ட கூட்டு குடிநீர்த் திட்டம் செயல்படுத்த ஆணையிடப்பட்டது. இதற்கு ரூ.8,504.18 இலட்சம் முதல் கட்டமாக நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு நீராதாரமாக கரூர் மாவட்டம், புதுப்பாளையம் மற்றும் அரங்கநாதன் பேட்டை அருகில் காவிரியாற்றில் இரண்டு நீர் சேகரிப்பு கிணறுகள் (Collector Well) அமைக்கப்பட்டுள்ளன. நீர் சேகரிப்பு கிணறுகளிலிருந்து நீர் எடுக்கப்பட்டு 85 கி.மீ. நீளமுள்ள 800 மி.மி. முதல் 1000 மி.மி. விட்டமுள்ள பி.எஸ்.சி. (Pre Stressed Concrete) பிரதான நீர் உந்து குழாய் மூலம் கொண்டு செல்லப்பட்டு ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள நீர் சேகரிப்புக் கிணறுகளில் நீர் சேகரிக்கப்பட்டுப் பயன்பெறும் பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் பகிர்மான குழாய் மூலம் விநியோகம் செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் குடிநீர் வழங்கல் குறித்த விவரம் :-

| வ. எண் | பயன்பெறும் நகராட்சி மற்றும் பேரூராட்சி | மக்கள் தொகை | தற்போது குடிநீர் வழங்கும் அளவு (எம்.எல்.டி.) | எதிர் காலத்தில் குடிநீர் வழங்கப் படும் அளவு (எம்.எல்.டி.) |
|---|---|---|---|---|
| 1. | திண்டுக்கல் நகராட்சி | 1,96,619 | 11.90 | 19.20 |
| 2. | நத்தம் பேரூராட்சி | 22,532 | 0.60 | 1.732 |
| 3. | எரியோடு பேரூராட்சி | 7,866 | 0.186 | 0.452 |
| 4. | தாடிக்கொம்பு பேரூராட்சி | 16,091 | 0.19 | 1.10 |
| 5. | வடமதுரை பேரூராட்சி | 15,418 | 0.20 | 0.97 |
| 6. | அகரம் பேரூராட்சி | 12,784 | 0.22 | 0.831 |

இத்திட்டத்தில் உள்ள பணிகள் யாவும் வெவ்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் பிப்ரவரி 2005இல் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்திற்கு ரூ.2,287.91 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**திண்டுக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து நத்தம் பேரூராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம்**

நத்தம் நகரப் பேரூராட்சிக்கு ஒரு நபருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க மத்திய அரசின் விரைவுப்படுத்தப்பட்ட நகர குடிநீர்த் திட்டத்தின் கீழ் ரூ.490.30 இலட்சம் 23.1.2003 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


| | |
|---|---|
| மைய அரசின் மானியம் | ரூ.245.18 இலட்சம் (50%) |
| மாநில அரசின் மானியம் | ரூ.220.66 இலட்சம் (45%) |
| உள்ளாட்சி அமைப்பின் மானியம் | ரூ.24.52 இலட்சம் (5%) |
| மொத்தம் | ரூ.490.36 இலட்சம் |

இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக நத்தம் பேரூராட்சிக்கான திட்ட மதிப்பீடு மற்றும் மைய அரசு ஒப்புதல் அளித்த திட்ட செலவுகள்:

| திட்ட மதிப்பீடு | மைய அரசு ஒப்புதல் அளித்த தொகை | வித்தியாசம் |
|---|---|---|
| ரூ.630.82 இலட்சம் | ரூ.490.36 இலட்சம் | ரூ.140.46 இலட்சம் |

இத்திட்டத்திற்குத் தமிழக அரசு நிதி பங்கேற்பில் உள்ளாட்சி அமைப்புப் பங்குத் தொகையாக ரூ.164.98 (24.52+ 140.46) இலட்சமாக உயர்த்தி மொத்தம் ரூ.630.82 இலட்சத்திற்குத் தமிழக அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்திற்குக் காவிரியாற்றினை நீராதாரமாக கொண்டு அமைக்கப்பட்டுள்ள திண்டுக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து திண்டுக்கல்லில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து நீர் உந்து குழாய் வழியாக நத்தம்



பேரூராட்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு ஏற்கெனவே செயல்பாட்டிலுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளில் ஏற்றி பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தில் உள்ள பணிகள் யாவும் வெவ்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் செப்டம்பர் 2004இல் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை திட்டத்திற்கு ரூ.210.92 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நடைபெற்று வரும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளைத் திண்டுக்கல்லுக்கு வருகை தந்த மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே.பி.அன்பழகன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. இரா.விசுவநாதன் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு.முருகய்யா, இ.ஆ.ப. அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆத்தூர் திரு. பி.கே.டி.நடராஜன், பழனி திரு. வி.சின்னசாமி, வேடசந்தூர் திரு. பி.ஆண்டிவேல். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் திரு பெருமாள், திரு. செல்வம், திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திரு. நீ.இடிமன்னன், உதவி இயக்குநர், பேரூராட்சிகள் திரு. மைக்கேல் டேவிட் ஆகியோருடன் ஆலோசனை மற்றும் ஆய்வு செய்த பிறகு அனைத்துப் பணிகளையும் நேரிடையாகச் சென்று 09.07.2004 அன்று பார்வையிட்டார்கள். அனைத்துப் பணிகளையும் அரசு நிர்ணயித்துள்ள காலக்கெடுவிற்குள் முடிக்குமாறு மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும், திண்டுக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் பகுதி 2ல் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஆறு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 759 ஊரகக் குடியிருப்புகள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு ரூ.2,137 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பரிசீலனையில் உள்ளது. மேலும், கரூர் மாவட்டத்தில் உள்ள தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 50 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.148 இலட்சம் செலவில் நிறைவேற்ற நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிவடையும் போது குடிதண்ணீர் பிரச்சினையை எதிர் கொண்டுள்ள திண்டுக்கல் மாவட்டம் திட்டத்தின் வாயிலாக பயன்பெற்று எவ்வித குடிநீர்த் தட்டுப்பாடும் இல்லாத ஓர் மாவட்டமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்டறிய வந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடம் ஆய்வு செய்த இடங்களிலெல்லாம் பொதுமக்கள் திரளாக வருகை தந்து திட்டத்தைத் தந்துதவிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, தங்களது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

**– மு.பழனிசாமி,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல்.

# ஒலிம்பிக் வரலாறு



சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த கிரேக்க மக்கள் ஒலிம்ப்பியா என்னும் சமவெளி ஒன்றில் ஜூஸ் என்னும் தேவதைக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை விழா எடுத்து வந்தார்கள். இவ்விழாவை யொட்டிச் சில விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி வந்தனர். இவையே பின்னர் ஒலிம்பிக் ஆட்டங்கள் எனப்பட்டன.



கிரேக்கர்கள் நடத்திய இந்த விழாவில் முதல் நாள் கடவுள் வணக்கமும், பலியிடுதலும் நடைபெறும். பிற நாள்களில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். தொடக்கத்தில் ஓட்டப் பந்தயம் மட்டுமே நடந்தது. பின்னர் குத்துச் சண்டை, மல்யுத்தம் போன்ற போட்டிகளும் சேர்க்கப்பட்டன. இப்போட்டிகளில் பெண்கள் கலந்து கொள்வதில்லை. போட்டியில் வென்ற வீரர்கள் புகழ்ந்து பாராட்டப்பட்டனர். ஆலிவ் மரத்தின் பூங்கொத்துகளாலான முடிகள் அவர்கள் தலையில் சூட்டப்பட்டன. அவர்களின் பெயர்கள் நாடு முழுவதும் பறைசாற்றி மக்களுக்கு அறிவிக்கப்பட்டன. புலவர்கள் அவர்களைப் புகழ்ந்து பாடினர். சிற்பிகள் அவர்களின் உருவச் சிலைகளைச் செதுக்கி வைத்தார்கள். இவ்வாறு இவ்விழா கி.மு. 8ஆம் நூற்றாண்டு முதல் நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடந்து வந்தது. கி.பி.394–இல் ரோம் மன்னர் இவ்விழாவைத் தடைசெய்தார். அது முதல் 1,500 ஆண்டுகள் வரை இவ்விழா நடைபெறாமல் நின்றுவிட்டது.

ஒலிம்பிக் ஆட்டங்கள் நடைபெற்று வந்த பண்டைக்கால விளையாட்டு அரங்கு ஒன்றை 1878–இல் தொல்பொருள் ஆய்வாளர்கள் அகழ்வாய்வின் போது கண்டறிந்தனர். அதையடுத்து ஒலிம்பிக் ஆட்டங்களை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று ஓர் இயக்கம் தோன்றியது. 1894–இல் பன்னாட்டு மாநாடு ஒன்று நடைபெற்றது. இதில் பன்னாட்டு ஒலிம்பிக் ஆட்டக்குழு அமைக்கப்பட்டது. இக்கால ஒலிம்பிக் போட்டியின் முதல்விழா 1896–இல் கிரேக்க நாட்டிலுள்ள ஏதென்ஸ் நகரில் நடத்தப்பட்டது. அதுமுதல் பல்வேறு நாடுகளில், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. 1900ஆம் ஆண்டில்தான் முதன் முதலில் பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். சென்ற நூற்றாண்டில், இரு உலகப்போர்கள் நடந்து கொண்டிருந்தபோது மட்டும் (1914–18, 1939–45) ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.





ஒலிம்பிக் போட்டி மத்தியக் குழு ஒன்று உள்ளது. இதில் எல்லா நாடுகளும் உறுப்பினர்களாக உள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் தேசிய ஒலிம்பிக் கழகமும், ஒலிம்பிக் போட்டிக் குழுவும் உண்டு. தேசிய ஒலிம்பிக் கழகம் உள்நாட்டில் ஒலிம்பிக் விழாவை நடத்துகிறது.

மேலும், பன்னாட்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கு தன் நாட்டு ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது.

**ஒலிம்பிக் போட்டி நடந்த இடங்கள்**

| ஆண்டு | இடம் |
|---|---|
| 1896 | ஏதென்ஸ் (கிரீஸ்) |
| 1900 | பாரிஸ் (பிரான்ஸ்) |
| 1904 | செயின்ட் லூயி (அமெரிக்கா) |
| 1908 | லண்டன் (பிரிட்டன்) |
| 1912 | ஸ்டாக்ஹோம் (சுவீடன்) |
| 1920 | ஆன்ட்வெப் (பெல்ஜியம்) |
| 1924 | பாரிஸ் (பிரான்ஸ்) |
| 1928 | ஆம்ஸ்டர்டாம்(ஹாலந்து) |
| 1932 | லாஸ் ஏஞ்சலிஸ் (அமெரிக்கா) |
| 1936 | பெர்லின் (ஜெர்மனி) |
| 1948 | லண்டன் (பிரிட்டன்) |
| 1952 | ஹெல்சின்க்கி (பின்லாந்து) |
| 1956 | மெல்போர்ன் (ஆஸ்திரேலியா) |
| 1960 | ரோம் (இத்தாலி) |
| 1964 | டோக்கியோ (ஜப்பான்) |
| 1968 | மெச்சிக்கோ (மெச்சிக்கோ) |
| 1972 | மியூனிச் (ஜெர்மனி) |
| 1976 | மான்ட்ரீல் (கனடா) |
| 1980 | மாஸ்க்கோ (ரஷ்யா) |
| 1984 | லாஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா) |
| 1988 | சியோல் (கொரியா) |
| 1992 | பார்சிலோனா (ஸ்பெயின்) |
| 1996 | அட்லாண்டா (அமெரிக்கா) |
| 2000 | சிட்னி (ஆஸ்திரேலியா) |
| 2004 | ஏதென்ஸ் (கிரீஸ்) |





**1916, 1940, 1944 ஆகிய ஆண்டுகளில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.**

இக்கால ஒலிம்பிக் போட்டிகளில் ஓட்டம், தாண்டுதல் முதலிய கள விளையாட்டுகளுடன், நீந்துதல், குதிரையேற்றம், சிலம்பம், கத்திச் சண்டை, துப்பாக்கி சுடுதல், சைக்கிள் ஓட்டுதல், படகு ஓட்டுதல், பளு தூக்குதல், ஈட்டி எறிதல், கால்பந்து, கூடைப்பந்து, ஆக்கி முதலிய பலவகையான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறுகின்றன. ஒலிம்பிக் ஆட்ட விழாவில் சமயம், வகுப்பு, இனம், நிறம் ஆகியவற்றைப் போன்ற வேறுபாடுகள் எதுவுமின்றி எல்லா நாட்டவர்களும் கலந்து கொள்கின்றனர். விழாத் தொடக்கத்தில் ஆதிகாலத்தைப் போன்று பலியிடும் வழக்கமில்லை; பதிலாக ஒலிம்பிக் ஒளிவிழா நடைபெறுகிறது. ஒலிம்பிக் சுடர் எடுத்துவரப்பட்டு முதலில் விளையாட்டு அரங்கத்தில் ஏற்றி வைக்கப்படும். பின்னர் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கும். ❖

# கும்பகோணம் தீ விபத்தில் காயமுற்று சிறப்பு உயர் பிளாஸ்டிக் சிகிச்சை பெற்ற குழந்தைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிறப்பு உயர் பிளாஸ்டிக் சிகிச்சை அளிக்கப்பட்ட, கும்பகோணம் தனியார் பள்ளி தீ விபத்தில் காயமடைந்த குழந்தைகளான செல்வி அ. கவுசல்யா, செல்வன் பா. விஜய் ஆகிய இருவரும் பூரண குணமடைந்து தங்களது பெற்றோருடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை 18.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து, தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளியில் 16.7.2004 அன்று கொடிய தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் துயரச் செய்தியைக் கேட்டதும், நெஞ்சம் பதைபதைத்துப் போன மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உடனடியாக நேரில் அங்கு சென்று ஆய்வு மேற்கொண்டு, தீ விபத்தில் சிக்கி உயிர் பிழைத்து தீவிர சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை செய்து கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்கள்.

தீக்காயங்களுடன் போராடிக் கொண்டிருந்த குழந்தைகளை எப்பாடு பட்டேனும் காப்பாற்றி விட வேண்டும் என்ற நோக்கத்துடன், தேவையான அனைத்து வகையான சிறப்பு மருத்துவ வசதிகளையும் அளித்திட ஆணையிட்டதுடன், தீக்காயங் களுக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு மருத்துவக் குழுக்களை சென்னை யிலிருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள தலைசிறந்த மருத்துவ மனைகளிலிருந்தும் கும்பகோணத்திற்கு வரவழைத்து சிகிச்சை அளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

மேலும், கடுமையான காயம் அடைந்து சிறப்பு உயர் மருத்துவ சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளை உடனடியாக சென்னைக்கு அழைத்து வந்து, சென்னையிலுள்ள பிரபல பிளாஸ்டிக் சிகிச்சை நிபுணர்களைக் கொண்டு நவீன பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை செய்வதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும்படி ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த ஆணையின்படி, கும்பகோணம் பழைய பாலக்கரையைச் சேர்ந்த அறிவழகன் – ஜோதி ஆகியோரது மகள் செல்வி அ. கவுசல்யா, கொரநாட்டுக் கருப்பூர் நத்தம் கிராமத்தைச் சேர்ந்த பாலசிவராமன் – ராஜலட்சுமி ஆகியோரது மகன் செல்வன் பா. விஜய் ஆகிய இரு குழந்தைகளும் தோல் ஒட்டு சிகிச்சை மேற்கொள்ளப்படுவதற்காக சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

அப்பல்லோ மருத்துவமனையில் இந்த இரு குழந்தைகளுக்கும் உயரிய சிகிச்சைகள் சிறப்புடன் வழங்கப்பட்டு தற்போது பூரண குணம் அடைந்துள்ளனர். சாவின் விளிம்பிலிருந்த தங்களது உயிரை மீட்டுத் தரும் வகையில் தக்க சிகிச்சை அளிக்க ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து தங்களது நன்றியைத் தெரிவிக்க வேண்டும் என்று இவ்விரு குழந்தைகளும் விரும்பினர்.

இந்த இரு குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 18.8.2004 அன்று தலைமைச் செயலகத்திற்கு அவர்களை நேரில் வரவழைத்து, கண்ணீர் மல்க நன்றி தெரிவித்த குழந்தைகளுக்கும் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், குழந்தைகளிடம் சாக்லேட்டுகளை வழங்கி, அவர்கள் தங்களது சொந்த ஊரான கும்பகோணம் செல்லப் பிரியாவிடை அளித்து வழியனுப்பி வைத்தார்கள். □

# கோ-ஆப்டெக்ஸ்

## துணிகளில் முதன்மை...
## சிறப்பிலே மேன்மை !
## உங்கள் கோ-ஆப்டெக்ஸ் !





- பட்டுப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- பருத்திப் புடவைகள் சேமிப்புத் திட்டம்
- கூடுதல் தள்ளுபடி விற்பனைத் திட்டம்
- வாடிக்கையாளரை சிறப்பிக்கும் திட்டம்
- மாணவர்களுக்கான ஹாஸ்டல் செட்
- குறைந்த விலையில் பருத்தி பிரிண்டட் சேலைகள் குறிப்பிட்ட சில ஷோரூம்களில் கிடைக்கும்
- வட்டியில்லாத கடன் வசதியை பயன்படுத்திக் கொள்வீர்

**மேலும் விவரங்கள் அறிய அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அனுகவும்.**

Visit us at www.tn.gov.in Visit us at www.cooptex.com

**எண்ணமெல்லாம் துணிமணிகள் என்றால்... வாங்குவதெல்லாம் கோ-ஆப்டெக்ஸ் !**

# பெரம்பலூர் மாவட்ட சுகாதாரப் பணிகள் ஆய்வுக் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்டத்தில் நடைபெற்று வரும் சுகாதாரப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ந.தளவாய் சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் பேசும் போது, 'தமிழக அரசு ஆண்டு தோறும் ரூ.94 கோடி மதிப்பில் நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளை வழங்குகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் உள்ள 1,413 ஆரம்ப சுகாதார மையங்களில் 93 மையங்கள் 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் 119 ஆரம்ப சுகாதார மையங்கள் இவ்வாறு தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 333 ஆரம்ப சுகாதார மையங்களில் சித்த மருத்துவப் பிரிவு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை அருகில் உள்ள தாம்பரத்தில் ரூ.30 கோடி மதிப்பில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைக்கப் பட்டுள்ளது.

அரசு தலைமை பொது மருத்துவமனைகளில் நாளொன்றுக்கு 3 இருதய அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. மேலும், ஆண்டிற்கு ரூ.3 கோடியே 38 இலட்சம் மதிப்பில் 70 பேஸ்மேக்கர் கருவிகளும் இருதய நோயாளிகளுக்கு பொருத்தப்படுகின்றன. தமிழக அரசின் சிறப்புத் திட்டமான மலை மற்றும் மலை சார்ந்த பகுதி மக்களுக்கு நேரடியாகச் சென்று மருத்துவம் செய்ய மருத்துவ உபகரணங்களுடன் வாகனமும், ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு 45 வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதில் ஒரு மருத்துவரும் செவிலியரும் உள்ளனர். பெரம்பலூர் மாவட்டத்தில் மணக்குடையான், அரும்பாவூர், கொளக்காநத்தம் ஆகிய இடங்களிலும் இப்பணிகள் நடைபெறுகின்றன. மேலும், மருத்துவமனைகளுக்குத் தேவையான 2,800 ஆம்புலன்ஸ் வாகனங்கள் விரைவில் வாங்கப்படும். அரசு மருத்துவமனைகளில் உள்ள 245 பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பகத்தின் மூலம் மருத்துவர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் அரசு பொது மருத்துவமனை மேம்பாட்டிற்கு ரூ.35 இலட்சம் நிதி ஒதுக்கப்படும். அங்குள்ள பிரேத பரிசோதனை கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, குளிர்சாதன வசதி செய்துதரப்படும். அரியலூரில் உள்ள இரத்த வங்கி சீரமைக்கப்பட்டு, இரத்த சேமிப்பு வங்கியாக மாற்றப்படும். இதற்கான நிதி விரைவில் வழங்கப்படும். பெரம்பலூர் அரசு தலைமை பொது மருத்துவமனைக்கான அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கப்படும். மேலும், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள வட்ட தலைமை மருத்துவமனைகளுக்கான அடிப்படைத் தேவைகள் குறித்த திட்டங்கள் வகுத்து, அதற்குத் தேவையான நிதி மதிப்பீட்டுடன் அரசுக்கு அறிக்கை அனுப்ப சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது'', என தெரிவித்தார்.




ஆய்வுக் கூட்டத்திற்கு முன்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெரம்பலூர் மற்றும் அரியலூர் அரசு பொது மருத்துவமனைகளுக்குச் சென்று மருத்துவமனையின் மருத்துவப் பிரிவுகள் மற்றும் பரிசோதனை நிலையங்கள், அவசர சிகிச்சைப் பிரிவு, பிணவறை, பிரேத பரிசோதனை அறை, மருந்துக்கிடங்கு ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் துணை தலைவர் வரகூர் திரு. அ.அருணாசலம், மாவட்ட ஆட்சித் தலைவர்

திரு.து.விவேகானந்தன்,இ.ஆ.ப., தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. மா.ரவிச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெரம்பலூர் திரு ப.இராஜரத்தினம், அரியலூர் திரு. ப.இளவழகன், ஜெயங்கொண்டம் திரு. செ.அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் பெரம்பலூர் திருமதி.ச.இராஜேஸ்வரி, அரியலூர் திரு.ப.தவசீலன் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள், மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ❖

# பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் தொழிற்சாலைகளை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 385 ஒன்றியங்களுக்கு தலா ரூ.1 கோடி முதலீட்டில் தொழில் தொடங்க வழிவகை செய்து புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை அறிவித்தார்கள்.



புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் மொத்தம் ரூ. 1 கோடியே 18 இலட்சம் அரசு மானியத்தில் ரூ.7 கோடியே 90 இலட்சம் முதலீட்டில் 16 தொழிற்சாலைகளுக்கு அரசு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. வரகூர் தொகுதிக்குட்பட்ட ஆலத்தூர் ஒன்றியத்தில் ரூ.2 கோடியே 26 இலட்சம் மதிப்பில் சக்ரா பால் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இத்தொழிற் சாலையில் நாளொன்றுக்கு 25 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இது மேலும் அதிகரிக்கப்பட்டு 50 ஆயிரம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்படும். இத்தொழிற்சாலையில் 125 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வேப்பந்தட்டை ஒன்றியம் மலையாளப் பட்டியில் ரூ.80 இலட்சம் மதிப்பில் ஜவ்வரிசி தொழிற்சாலையும், பூலாம்பாடியில் ரூ.25 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் கரும்பு, மாம்பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலையும், பெரம்பலூர் ஒன்றியம் எசனையில் ரூ.4 இலட்சம் மதிப்பிலும், வேப்பூர் ஒன்றியம் வேள்வி மங்கலத்தில் ரூ.26 இலட்சம் மதிப்பிலும் பால் குளிரூட்டும் நிலையங்களும், அந்தூரில் ரூ.35 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் தேங்காய் நார்க் கட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலையும், கார்குடியில் ரூ.30 இலட்சம் செலவில் நவீன அரிசி ஆலையும், செந்துறை ஒன்றியம் நமங்குணத்தில் ரூ.77 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் நவீன அரிசி ஆலையும், உஞ்ஜினியில் ரூ.32 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் முந்திரிக் கொட்டையிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையும் நிறுவப்பட்டு வருகிறது.

ஆண்டிமடம் ஒன்றியம், பட்டணங் குறிச்சியில் ரூ.21 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலும், சூரக்குழியில் ரூ.32 இலட்சம் மதிப்பிலும், 2 முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலைகளும், அரியலூர் ஒன்றியம் வாலாஜா நகரத்தில் ரூ.43 இலட்சம் மதிப்பில் முந்திரி தொழிற்சாலையும், கயர்லாபாத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பில் சமையல் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையும், தா.பழூர் ஒன்றியம் நாயகனைப்பிரியாளில் ரூ.37 இலட்சம் மதிப்பில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலையும், திருமானூர் ஒன்றியம் மேலப்பழூரில் ஜவ்வரிசித் தொழிற்சாலையும், ஜெயங்கொண்டத்தில் சமையல் எண்ணெய் மற்றும் மசாலா பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும் தொடங்க அரசு அனுமதி அளித்து, தொழிற்சாலைக்கான ஆக்கப்பூர்வப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பில் பின்தங்கி இருந்த பெரம்பலூர் மாவட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினால் தொழில்துறையில் முன்னேறி வரும் மாவட்டமாக மாறிவருகிறது.

– எம்.ஏ. லாரன்ஸ்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர்.

# குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிய கணக்கெடுப்புப் பணி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.8.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை உடனடியாக நல்கிட ஏதுவாக, அத்தகைய குழந்தைகள் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுக்கும் வகையில், தமிழகத்திலுள்ள அனைத்து கிராமச் சுகாதார செவிலியர்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள கணக்கெடுப்புப் பணியைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்தக் கணக்கெடுப்பின் அடிப்படையில், அரசு மருத்துவ மனைகளில், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளுக்கு, அகில இந்திய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மருத்துவச் சங்கத்தின் உறுப்பினர்கள் உதவியோடும், ஏனைய குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு அரசு சிறப்பு மருத்துவர்கள் மூலமும் உரிய மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படும். இந்தத் திட்டம் இந்தியாவில் உள்ள ஏனைய அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக, தமிழ்நாட்டில் தான் முதன் முதலாக செயல்படுத்தப்படுகிறது.

கடந்த 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஊட்டியில் நடைபெற்ற அகில இந்திய பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மருத்துவர் சங்க மாநாட்டில், பிறவிக் குறைபாடாக குழந்தைகளுக்கு ஏற்படும் உதடு பிளவு மற்றும் அன்னப் பிளவு ஆகியவற்றுடன் உள்ள குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு அகில இந்திய பிளாஸ்டிக் மருத்துவச் சங்கத்தின் உறுப்பினர்கள் இலவசமாக மருத்துவ

சிகிச்சை அளிக்க உள்ளதாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இதனை ஏற்று உதடு மற்றும் அன்னப் பிளவுக்கு சிகிச்சை அளிப்பதோடு மட்டுமல்லாமல், குழந்தைகளுக்கு ஏற்படும் ஏனைய பிறவிக் குறைபாடுகள் அனைத்துக்கும் இந்தத் திட்டத்தை விரிவு செய்ய ஆலோசனை வழங்கினார்கள். குழந்தைகளுக்கு ஏற்படும் பிறவிக் குறைபாடுகள் அனைத்தையும் பொது சுகாதாரப் பிரச்சினையாகவே கருதி, இதற்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த ஆணையை ஏற்று சென்னைக்கு அருகே உள்ள திருநின்றவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த சுகாதார உதவி மையங்களில் சென்னை அப்பல்லோ மருத்துவமனையின் பிரபல பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கே. ஸ்ரீதர் அவர்களது வழிகாட்டுதலின்படி ஒரு முன் ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த முன் ஆய்வுத் திட்டத்தில் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில், பிறவிக் குறைபாடு உள்ள குழந்தைகளைப் பற்றிய கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான படிவங்கள், பயிற்சி கையேடுகள் மற்றும் படங்களுடன் கூடிய வழிகாட்டி நூல் ஆகியவை தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நூல்கள், பல்வேறு வகையான பிறவிக் குறைபாடுகளை அடையாளம் கண்டு அது பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்திட கிராம சுகாதார செவிலியர்களுக்கும், சுகாதார ஆய்வாளர்களுக்கும் உதவியாக இருக்கும். தமிழ்நாட்டில் உள்ள 15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைவரும் இந்த கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படுவார்கள். இந்தக் கணக்கெடுப்புப் பணியில் 3,000 மருத்துவர்களும், 15,000 சுகாதாரத்துறை பணியாளர்களும் ஈடுபடுத்தப்படுவார்கள். வீடு வீடாக கணக்கெடுப்பு நடத்தப்பட்டு புள்ளி விவரங்கள் தொகுக்கப்படும். இந்தக் கணக்கெடுப்புப் பணி 15 நாட்களுக்குள் முடிக்கப்படும். வெளிப்படையாக கண்ணுக்குத் தெரிகின்ற குறைபாடுகளைக் கண்டறிய படங்களுடன் கூடிய வழிகாட்டி நூல் பயன்படும். இந்தக் கணக்கெடுப்பின் போது வெளிப்படையாகத் தெரியாத இதய நோய் போன்ற குறைபாடுகள் மருத்துவர்களின் பரிசோதனைக்குப் பின்னர் உறுதி செய்யப்பட்டு கணக்கெடுப்பில் சேர்க்கப்படும். கணக்கெடுப்பு முழுமையாக முடிந்ததும், அதன் அடிப்படையில், அரசு மருத்துவமனைகளில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் தேவைப்படும் குழந்தைகளுக்கு, அகில இந்திய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மருத்துவச் சங்கத்தின் உறுப்பினர்கள் உதவியோடும், ஏனைய குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு அரசு சிறப்பு மருத்துவர்கள் மூலமும் உரிய மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சுகாதார உதவி மையங்களில் பணியாற்றும் கிராம சுகாதார செவிலியர்களான காந்திமதி (லட்சுமிபுரம்), கே. உதயகுமாரி (தாசர்புரம்), ஆர்.எஸ். சாந்தி (கொசவன்பாளையம்), எஸ். முனியம்மாள் (நெமிலிச்சேரி), ஜி. பரமேஸ்வரி (திருநின்றவூர்) ஆகியோருக்கு இக்கணக்கெடுப்புப் பணிக்குத் தேவையான படிவங்கள் மற்றும் புத்தகங்களை நேரில் வழங்கி இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ந. தளவாய்சுந்தரம், தலைமைச் செயலாளர் திருமதி.லக்ஷ்மி பிராணேஷ், இ.ஆ.ப., சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறைச் செயலாளர் டாக்டர் என். சுந்தரதேவன், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் பி.கே. ராஜேந்திரன் ஆகியோரும், அகில இந்திய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மருத்துவச் சங்கத்தின் சார்பாக டாக்டர் கே. ஸ்ரீதர் மற்றும் மருத்துவர்கள் எஸ். ராஜசபாபதி, எஸ். கணபதி கிருஷ்ணன், வி. ஜெயராமன், ஜேம்ஸ் பாண்டியன் ஆகியோரும் கலந்து கொண்டனர். ❖

**வண்ணத்துப் பூச்சி**

**வ**ண்ணத்துப் பூச்சி, பூச்சிகள் வகுப்பில் லெபிடோடெரா எனும் செதில் சிறகிகள் வரிசையைச் சேர்ந்தது. இவற்றிற்கு அகன்ற இரு ஜதை இறக்கைகள் உள்ளன. இந்த இறக்கைகள் சிறு சிறு செதில்களினால் போர்த்தப்பட்டிருக்கும். கைட்டின் எனும் பொருளினாலான இந்தச் செதில்கள் கையால் தொட்டால் உதிர்ந்துவிடும். சில மில்லி மீட்டர் இறக்கை விரிப்பு கொண்ட சிறிய வகையிலிருந்து முப்பது செ.மீ. இறக்கை விரிப்புகள் கொண்டவை வரை பல உருவ அளவுகளில் உள்ளன. இவற்றின் வாழ்க்கைப் பருவத்தில் முட்டை, புழு, கூட்டுப் புழு, பூச்சி என்று நான்கு நிலைகள் உள்ளன. புழுவிலிருந்து கூட்டுப் புழு நிலையை அடையும் முன் மூன்று அல்லது நான்கு முறை சட்டை உரித்துக் கொள்ளும். பல வண்ணங்களைக் கொண்ட இறக்கைகளைக் கொண்டது வண்ணத்துப் பூச்சி. இந்த வண்ணமே இதன் எதிரிகளிடமிருந்து இதைக் காக்கிறது. ❖

# திருவாரூர் மாவட்டத்தில்

# மக்களே மேற்கொண்ட மகத்தான பணி

மக்களாட்சி என்பது மனித சமூகம் கண்ட உன்னத ஆட்சி முறையாகும்.

அரசியல் மேதைகளும், ஆட்சித் துறை விற்பன்னர்களும் தத்துவ ஞானிகளும் இந்த ஆட்சி முறைக்கு பலவகையில் விளக்கம் தந்துள்ளார்கள்.

"மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்கள் அரசு" என்று ஆப்ரகாம்லிங்கன் குறிப்பிட்டார்.

" இரத்தம் சிந்தாமல் மக்களின் சமூக பொருளாதார வாழ்வில் மாற்றத்தை கொண்டு வருவதற்கு வல்லமை படைத்த அரசு அமைப்பு" என்று அரசியல் சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் விளக்கம் தந்தார்.



இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழறிஞர் என்று போற்றப்படும் பேரறிஞர் அண்ணா மக்களாட்சிக்கு சிறப்பானதொரு விளக்கத்தினைத் தந்தார்கள்.

" Democracy is not a form of Government alone. It is an invitation to a new way of life" என்று குறிப்பிட்டார்.

" மக்களாட்சி என்பது ஒரு அரசு அமைப்பு முறை மட்டுமல்ல. அது ஒரு புதிய வாழ்க்கை முறைக்கான அமைப்பாகும்" என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்தாகும். இத்தகைய மக்களாட்சி அமைப்பு முறையில் அரசின் எந்த ஒரு திட்டமும் முழுமையாக செயல்வடிவம் பெற வேண்டுமெனில் மக்களின் ஈடுபாடும் பங்கேற்பும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

இந்த உன்னத நோக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் திருவாரூர் மாவட்டத்தில் மக்களின் பங்கேற்போடு மகத்தான பணி ஒன்று வெண்ணாற்றில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதுதான் 25,000– க்கும் மேற்பட்ட மக்கள் மேற்கொண்ட நெய்வேலி காட்டாமணக்கு செடி அகற்றும் பணியாகும்.

வெண்ணாற்றில் 50 கி.மீ. தொலைவிற்கு நெய்வேலி காட்டாமணக்கு செடி அழிக்கும் பணியினை செம்மையாக நிறைவேற்றி மாவட்ட நிருவாகத்தின் துணையோடு பொதுமக்கள் சாதனை படைத்துள்ளார்கள்.

காவிரி டெல்டா பகுதியில் பாயும் முக்கிய பாசன ஆறுகளில் ஒன்றான வெண்ணாறு, நீடாமங்கலம் அருகே மூணாறு தலைப்பிலிருந்து பிரிந்து சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவிற்குச் சென்று திருத்துறைப்பூண்டி அருகே உள்ள பொன்னிரை கிராமத்தில் அரிச்சந்திரா நதியில் இணைகிறது.

வெண்ணாற்றில் வரும் தண்ணீர் மூலம் இம்மாவட்டத்தில் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. ஆனால் இந்த ஆற்றில் அதிக அளவில் நெய்வேலி காட்டாமணக்கு செடிகள் மண்டிக் கிடப்பதால் பாசனம் தடைபடும் நிலை உள்ளது. எனவே வேளாண்மைக்கு இடையூறாக உள்ள இந்த காட்டாமணக்கு செடிகளை அகற்றி விவசாயத்தை பாதுகாக்க பொது மக்களின் பங்களிப்புடன் இந்தப் பணியினை மேற்கொள்ள மாவட்ட நிருவாகமும், மாவட்ட ஊராட்சியும் முயற்சி எடுத்தது.

இந்தப் பணியில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள், சேவை அமைப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 25 ஆயிரம் பேர் பங்கு கொண்டு ஒரே நாளில் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவிற்கு ஆற்றில் படர்ந்திருந்த காட்டாமணக்கு செடிகளை அப்புறப் படுத்தினர்.

திருவாரூர் மாவட்டம் லெட்சுமாங்குடியில் இந்தப் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி. ஏகாம்பரம் , இ.ஆ.ப., தொடங்கி வைத்தார். மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். காமராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கோ. பழனிச்சாமி, திரு. சிவபுண்ணியம் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் தலைவர்கள், அரசு அலுவலர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

கடைமடைப் பாசனப் பகுதி என்றாலே பாசனத்திற்கு தண்ணீர் தடையின்றி வராது. மழைக்காலத்தில் வெள்ளம் வந்தால் வடியாது என்று சொல்வார்கள்.

ஆற்றில் மண்டிக் கிடக்கும் நெய்வேலி காட்டாமணக்கு செடிகளே இதற்கு அடிப்படைக் காரணமாகும். அரசின் அரவணைப்போடு மாவட்ட நிருவாகத்தின் உதவியுடன் மாவட்ட ஊராட்சியின் முனைப்பான செயல்பாட்டில் பொதுமக்களின் அளவற்ற ஆதரவோடு நடைபெற்ற இந்த அரும்பணி மகத்தானது என்றால் மிகையாகாது.


– இரெ. மகாலிங்கம்
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருவாரூர்


# இந்திய சுற்றுலாவில் இடம் பெறும்
# செட்டிநாடு பாரம்பரிய நகரம்

இந்திய சுற்றுலாத்துறையின் பட்டியலில் சிவகங்கை மாவட்டம் 'செட்டிநாடு பாரம்பரிய நகரமும்' இடம் பெற இருக்கிறது. நகரத்தார்கள் என்றழைக்கப்படும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் 'கட்டடக் கலை மற்றும் கலாச் சாரங்களை' மையமாகக் கொண்டு இந்நகரம் அமைகிறது. காரைக்குடி அருகிலுள்ள கானாடு காத்தான், செட்டிநாடு, தேவாரப்பட்டி, தாதம்பட்டி ஆகிய மரங்கள் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் கிராமங்களை உள்ளடக்கி இந்தச் சுற்றுலா நகரம் உருவாகிறது. இந்த நான்கு கிராமங்களில் இருக்கும் கட்டட அமைப்புகளில் எந்த மாறுதலும் செய்யாமல் பாரம்பரிய மாளிகைகள், இயற்கை எழில் மிக்க சுற்றுப்புற நகரங்களை ஒருங்கிணைத்து 'பாரம்பரிய நகரம்' உருவாக்கப்பட உள்ளது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே உள்ள கானாடுகாத்தான் கிராமத்தில் ரூ.50 இலட்சத்தில் நடைபெற உள்ள செட்டிநாடு பாரம்பரிய பகுதி அபிவிருத்திப் பணியை செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலர் திரு.வ. ராமதாஸ், இ.ஆ.ப., பார்வையிட்டார். சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் சுற்றுலா வளர்ச்சிப் பணிக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான பணிகள் குறித்து அறிவுரைகள் வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசும் போது, "இப்பகுதியில் உள்ள கம்பீரமான தோற்றத்துடன் கலை வேலைப்பாட்டுடன் கூடிய சிற்பம் மற்றும் ஓவியங்கள் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ள வீடுகளைப் பார்வையிட்டேன். பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் இத்தகைய வீடுகளின் சிறப்புகளை வெளி உலகிற்குத் தெரியப்படுத்தும் வண்ணம் சிறு புத்தகங்கள், வரைபடங்கள் மூலம் விளம்பரம் செய்யப்படும்.

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் இந்தப் பகுதியில் வாழும் மக்கள் வாழும் விதம், அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் கலை நயம் மிகுந்த அரண்மனை போன்ற வீடுகள் வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கும். செட்டிநாட்டை நோக்கி வரும் சாலைகள் சிறப்பாகப் போடப்பட வேண்டும். மின் விளக்கு, குடிநீர் வசதிகள் நன்கு செய்யப்பட வேண்டும். கழிப்பறை வசதி போன்ற முக்கியமான பணிகள் செய்து முடிப்பது தலையாய பணியாகும். அரண்மனை போன்ற கட்டடத்தின் உரிமையாளர்கள் மனம் நோகாமல் சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டு இது குறித்து மற்றவர்களிடம் சொல்லும் அளவிற்கு நடந்து கொள்ள வேண்டும். அங்கு உள்ள எந்தப் பொருளும் சேதம் ஆகாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். செட்டிநாட்டு கலைநயம் மிகுந்த பொருள்கள், வாழ்க்கைக்கு உகந்த பொருள்கள், கலைநயம் மிக்க ஓவியங்கள் ஆகியவைகளைக் கொண்டு அருங்





காட்சியகம் கூட ஏற்படுத்தலாம். இது குறித்த புகைப்படங்கள் மற்றும் செய்திகளைச் சேகரித்து நன்கு விளம்பரம் செய்யப்படும்" என்று கூறினார்.

**பிரமாண்ட மாளிகைகள்**

மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, இலங்கை, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா நாடுகளில் நகரத்தார்கள் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். போருக்குப் பின்னால் பல நாடுகளுக்கு சுதந்திரம் கிடைத்ததால், நகரத்தார்களின் ஏராளமான அசையாச் சொத்துக்கள் மற்றும் வணிக வருவாய் புதிய அரசுகளின் கைகளுக்கு சென்றதால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வெளிநாடுகளில் வணிகத்தில் கொடிகட்டிப் பறந்த காலத்திலும் நகரத்தார்கள் தங்களது பாரம்பரிய கலாச்சாரங்களையும், பிறந்த மண்ணையும் மறக்கவில்லை. காடுகள் சூழ்ந்த வறண்ட பொட்டல் காடுகளைச் செம்மைபடுத்தி வெளிநாடுகளில் தரமான விலை உயர்ந்த மரங்களைக் கொண்டு வந்து சிற்ப வேலைப்பாடுகளுடன் அரண்மனை மாளிகைகளை உருவாக்கினர். 70 ஆண்டுகளுக்கு முன்பு நினைத்துக்கூட பார்க்க முடியாத வகையில் கட்டடங்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு மாளிகையும் ஒரு தெருவில் தலைவாசல் என்றால் மறுதெருவில் புறவாசல் இருக்கும். அந்த அளவிற்குப் பரந்து விரிந்த பிரமாண்டமான மாளிகைகளை நகரத்தார்கள் கட்டினார்கள். பர்மா தேக்கு, சந்தன மரங்கள், இத்தாலியன் மார்பிள்களைக் கொண்டு வந்து கலை நயத்துடன் கட்டடங்கள் வடிவமைக்கப்பட்டன.

**கட்டடச் சிறப்புகள்**

ஒவ்வொரு கட்டடத்திலும் தீட்டப்பட்ட வண்ணங்கள், மரச்சிற்பங்கள் இன்றைக்கும் மெருகு குலையாமல் கண்ணைக் கவருகின்றன. வரவேற்பு அறை, பார்வையாளர் அறை, படுக்கை அறை, படிப்பக அறை, ஒய்வு அறை, நவதானியங்கள் வைப்பறை, ஆபரணங்களைப் பாதுகாக்க பெட்டகங்களுடன் கூடிய தனி அறை, பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த அறை, சமையல் அறை, காற்றோட்ட வசதிக்கு மையத்தில் முற்றம், அந்தக்காலத்திலே மழைநீர் சேமிப்பு முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட முற்றம், அதைச் சுற்றிலும் அமர்ந்து மழையை ரசிக்க வசதி, உறவினர்கள், நண்பர்கள் தங்க சிறப்பு அறை, பூஜை அறை, மதில் போன்ற சுற்றுச்சுவர், விலங்குகளுக்குத் தனி இடம், தோட்டம், விளையாட்டு மைதானம் எனச் சிறப்பான கட்டட அமைப்பு பெரும் பாலான மாளிகைகளில் இடம் பெற்றிருக்கிறது. கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக இந்த மாளிகைகள் இன்றைக்கும் விளங்கிவருகின்றன. தமிழ்நாடு அரசின் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளில் காரைக்குடிப் பகுதி அயல்நாட்டவரைக் கவர்ந்து ஒரு சிறந்த சுற்றுலாத் தளமாக விளங்கி, அந்நியச் செலாவணியைக் குவிக்கும் என்பதில் வியப்பில்லை.

**– ஆ.கோபாலன்,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை.

# மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாடு

9·8·2004, 10·8·2004 மற்றும் 11·8·2004



தமிழரசு
R.N.I. NO.21446/70
RGN NO.TN/PMG (CCR)/836/03-05. WPP - 518.

